# அராலி வடக்கு
# மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில்



## ஆலய வரலாறும்
## சித்திரத் தேர்

# சிறப்பு மலரும்

21.06.2008

அராலிவடக்கு

# மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில்

# ஆலய வரலாறும் சித்திரத்தேர்

# சிறப்பு மலரும்



அராலிவடக்கு

மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில்

ஆலய பரிபாலனசபை

வட்டுக்கோட்டை

21–06–2008

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | :- | அராலி வடக்கு<br>மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில்<br>ஆலய வரலாறு - சித்திரத்தேர் சிறப்புமலர் |
| பதிப்புரிமை | :- | ஆலய பரிபாலனசபை |
| காலம் | :- | 21-06-2008 |
| பக்கங்கள் | :- | xxxii , 88 |
| வெளியீடு | : | ஆலயபரிபாலனசபை, அராலிவடக்கு<br>மயிலியற்புலம் கந்தசுவாமிகோயில்,<br>அராலிவடக்கு, வட்டுக்கோட்டை. |
| பதிப்பு | :- | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>காங்கேசன்துறை வீதி,<br>யாழ்ப்பாணம். |



ஆலய மூலமூர்த்தி

# சித்திரத்தேர் மலர்
# வெளியீட்டுக் குழு

- திருவாளர். நாகநாதபிள்ளை ஜெயநாயகம்
  (முன்னாள் அதிபர் BA.Dip in Edu)
- திருவாளர். சதாசிவம் செல்வராசா
  (முன்னாள் அதிபர்)
- திருவாளர். வெற்றிவேலாயுதம் சண்முகநாதன்
  (ஆசிரியர் BA.MA, Dip.in.Ed.)
- திருவாளர். செல்வரத்தினம் பத்மநாதன்
  (யாழ் பல்கலைக்கழகம்) (BA.Mphil, PGD in LIS)
- திருவாளர். Dr.செல்லத்துரை பரமசிவம்பிள்ளை (J.P)
- திருவாளர். கந்தசாமி நாகஜெயகுமாரன்
  (யாழ். பல்கலைக்கழகம்)
- திருவாளர். பழனி உமாதேவா
  (கிளை முகாமையாளர், பல.நோ.கூ.சங்கம், சங்கானை)
- திருவாளர். கந்தசாமி நாகதவபாலசுப்பிரமணியம்
  (யாழ் பல்கலைக்கழகம்)
- திருவாளர். நெல்லிநாதன் சபானந்தன்
  (BA.MA. யாழ் பல்கலைக்கழகம்)
- திருவாளர். கந்தவனம் சரவணபவானந்தம்

## 2008 சித்திரை - 2009 சித்திரை வரை

## பரிபாலனசபை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருவாளர். கந்தசாமி நாகஜெயகுமார் |
| உபதலைவர் | : | திருவாளர். நடராசா பாலகோபால் |
| செயலாளர் | : | திருவாளர். பழனி உமாதேவா |
| உப செயலாளர் | : | திருவாளர். விசுவரத்தினம் சுதர்சன் |
| பொருளாளர் | : | திருவாளர். ஆறுமுகம் சுப்பிரமணியம் |

## திருவிழா பூசை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர். சூரியப்பிரகாசம் சந்திரகுமார் | 1ஆம் பூஜை |
| 2. | திருவாளர். கந்தவனம் செல்வநாயகம் | 2ஆம் பூஜை |
| 3. | திருவாளர். முருகுப்பிள்ளை கபிலாசபதி | 3ஆம் பூஜை |
| 4. | திருவாளர். அப்புக்குட்டி வேலாயுதர் | 4ஆம் பூஜை |
| 5. | திருவாளர். நெல்லிநாதன் சபானந்தன் | 6ஆம் பூஜை |
| 6. | திருவாளர். கந்தசாமி நாகதவபாலசுப்பிரமணியம் | 7ஆம் பூஜை |
| 7. | திருவாளர். வீரசிங்கம் பழனிஆண்டவர் | 8ஆம் பூஜை |
| 8. | திருவாளர். .குமாரசாமி ஞானகுமார் | 10 பூஜை |

## கணக்குப் பரிசோதகர்கள்

திருவாளர் .அப்புக்குட்டி வேலாயுதர்

திருவாளர். சுப்பிரமணியம் கனகமாணிக்கம்

திருவாளர். தாமோதரம்பிள்ளை இராசநாதன்

# தேர் திருப்பணிச்சபை

தலைவர் : டாக்டர் செல்லத்துரை பரமசிவம்பிள்ளை J.P

செயலாளர் : திருவாளர். கந்தவனம் செல்வநாயகம்

பொருளாளர் : திருவாளர். குமாரசாமி ஞானகுமார்

திருவாளர். கந்தசாமி நாகஜெயகுமாரன்

திருவாளர். நெல்லிநாதர் சபாநந்தன்

திருவாளர். வீரசிங்கம் பழனியாண்டவர்

திருவாளர். உமாதேவா

திருவாளர். ஆறுமுகம் சுப்பிரமணியம்

திருவாளர். அப்புக்குட்டி வேலாயுதர்

கணக்குபரிசோதகர்

: திருவாளர். தாமோதரம்பிள்ளை ராசநாதன்

திருவாளர். சுப்பிரமணியம் கனகமாணிக்கம்

திருவாளர். அப்புக்குட்டி வேலாயுதர்

## மலரின் உள்ளே....


1) பதிப்புரை viii

2) ஆசியுரைகள் iv

3) ஆலய பரிபாலனசபைத் தலைவரின் செய்தி xxv

4) தேர்த் திருப்பணிச்சபைத் தலைவரின் செய்தி xxviii

5) ஆலய வரலாறு 1

6) மயிலியற்புலக் கந்தசுவாமியர் பதிகம் 16

7) மயிலியற்புலக் கந்தசுவாமியார் திருஊஞ்சல் 22

8) மயிலியற்புல மகமாரியம்மன் பதிகம் 27

9) மயிலியற்புல மகமாரி திருஊஞ்சல் 33

10) சிற்பாச்சாரியாரின் செய்தி 37

11) அந்திரத்தேரோட்டும் அரும்பெரும் சிற்பியின் அதிசயப்படைப்பு 38

12) மயிலை முருகன் மீது பாடப்பட்ட பக்திப்பாடல்கள் 40

13) தேர் ஓர் ஆலயம் – டாக்டர் ம.வேதநாதன் 47

14) அன்புச்சமயம் –பேராசிரியர் அ.சண்முகதாஸ் 49

15) முருகவழிபாடு ஒரு நோக்கு – பேராசிரியர் வி.சிவசாமி 52

16) வாக்கிற்கு அருணகிரி – சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் 57

17) மயிலை முருகன் 62

18) முருகன் திருவிளையாடல் 64

19) கந்தப்பெருமான் எங்கள் சொந்தப் பெருமான் 65

20) முருகனின் திருவுருவ தத்துவம் 67

21) மயிலைக்கந்தனின் சித்திரத்தேர்த்திருவிழா 70

22) சகலரும் விரும்பும் சண்முகப்பெருமான் 72

23) வாழ்த்துக்கள் 73

24) அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமியார் கோவில் தேர்த்திருப்பணிச் சபையின் கணக்கு விபரங்கள் 76

# பதிப்புரை

அராலி வடக்கு மயிலியற்புலக் கந்தசுவாமி கோயில் வரலாறும் சித்திரத்தேர்ச் சிறப்பும் என்ற இம் மலர் காலத்தின் பதிலாக அமைகின்றது. பல்வேறு சிரமங்களின் மத்தியில் தேர்த்திருப்பணி என்னும் பெரும் பணியை நிறைவுசெய்த அன்பர்களின் செயற்றிறனையும், ஆலய வரலாற்றையும் ஆவணப்படுத்த எடுத்த இம்முயற்சி மயிலை முருகன் மகமாரி அம்மையின் அருளாலும், மெய்யடியார்களின் ஒத்துழைப்பாலும் கைகூடியுள்ளது.

வரலாற்றைப் பதிவுசெய்யப்பட வேண்டும் என்ற ஆர்வத்தில் எம் பெரியவர்கள் தந்த தகவல்கள் மிகவும் காத்திரமானவை. பொதுவாக ஒரேவகையான வரலாற்றுக் குறிப்புகளையே எல்லோரதும் தகவல்களிற் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் அத்தரவுகளிற் காணப்பட்ட நிர்வாக செயற்பாடுகள் பற்றியதும், சமூகம் சார்ந்த குறிப்புக்கள் சுவாரஸ்யமானவை அத்தரவுகளை கோயில் உறுதிகளும், அறிக்கைகளும் உறுதிப்படுத்துபவையாக உள்ளன. மேலும் சட்டதிட்டங் களிலும் நெறிமுறைகளிலும் எம் முன்னவர் கொண்ட பற்றுறுதியை இவ் ஆவணங்களூடாக அறியமுடிகின்றது. ஆலயத்தின் 150 வருட வரலாற்றில் பலரும் ஆலயத்தின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்துள்ளார்கள். இவ் உண்மையைப் பெரியவர்கள் தந்த தகவல்களும் ஆவணங்களும் வெளிப்படுத்துகின்றன. அவர்கள் அனைவரதும் பெயர்களை ஆவணப்படுத்த முடியாமையால் பொதுவாக ஆலய வரலாற்றில் அப்பெயர்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

இவ் ஆலயத்தின் தோற்றத்தை 19ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒரு சமூக மாற்றத்தின் குறியீடாகக் கருதலாம். இம்மாற்றம் ஏன் நிகழ்ந்தது? அதற்கான காரணம் என்ன? என்பதை பெரியவர்களின் குறிப்புக்களில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது. இது ஒரு சமூக வரலாற்று ஆய்வுக்குரிய விடயமாகும். இக்குறிப்புக்கள் ஆலய வரலாற்றில் குறிப்பிடப்படவில்லை.

ஆலய வரலாற்றில் குறிப்பிடக் கூடியவிடயங்களில் இக்கோயிற் கிராமிய வழிபாட்டு மரபு சார்ந்த வழிபாட்டு முறையினூடாகவே தோற்றம்பெற்றுள்ளது கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும். இவ்வகையில் ஆகமமுறை சார்ந்ததும் ஆகமமுறை சாராததுமான இரண்டு வழிபாட்டு முறைகளையும் எதிர்காலத்திலும் பேணிக் கைக்கொள்ள வேண்டும். என்பதை இனிவரும் சந்ததியினரும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதாகும்.

இம்மலர் ஆலய வரலாற்றுடன் பல்வேறு அம்சங்களையும் கொண்டுள்ளது. பெரியார்களின் ஆசிகள், வாழ்த்துக்கள் என்பனவற்றுடன் ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளையும் அடியவர்களின் ஆக்கங்களையும், சிற்பாச்சாரியார்களின் தேர்பற்றி விபரங்களையும் தாங்கி வெளிவருகின்றது. ஆலயபரிபாலன சபை, தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர்களின் செய்திகள் அடங்கியுள்ளன. தேர்த்திருப்பணியின்போது நடைபெற்ற சம்பவங்கள்

அறிக்கைப்படுத்தப்பட்டு அவற்றில் இருந்து எடுத்த குறிப்புக்களிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் அவை செய்திகளுக்குமேல் மயிலைக் கந்தனின் அற்புதத்தை வெளிப்படுத்தும் பதிவாகவும் அமைகின்றது. மேலும் தேர்த்திருப்பணிக்குரிய கணக்கு விபரங்களையும் கொண்டுள்ளது.

இம்மலர் வெளிநாட்டு அன்பர்களின் ஆவலை நிறைவு செய்யும் நோக்காகக் கொண்டு தொடங்கப்பட்டதாகும். அவர்கள் உடலால் வெளிநாட்டில் இருந்தாலும் உள்ளத்தால் முருகனின் அருளைத் தரிசிக்க அவாவி நிற்கும் அவர்களின் அன்பின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்தலும் அதுவே இம்மலர் வெளியீட்டின் வெற்றியாகும்.

தற்போதைய சூழலில் இறைவழிபாடே எமது மக்களின் உயிர்ப்புக்கு ஆதாரமாக அமைந்துள்ளது. இவ்வகையில் இம்மலர் வெளியீட்டுக்கு ஆதரவளித்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிக்குரியவர்கள். ஆசியுரை வழங்கிய சமயப் பெரியவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய பெரியவர்களுக்கும் ஆய்வுக் கட்டுரையைத் தந்துதவிய ஆய்வாளர்களுக்கும், கட்டுரைகளையும், பாடல்களையும் தந்த அடியவர்களுக்கும் தேர் பற்றிய விபரங்களைத் தந்த சிற்பாசாரியார்களுக்கும் எமது நன்றி கலந்த வணக்கங்கள்.

**மலர்க்குழு சார்பாக**
**செல்வரத்தினம் பத்மநாதன்**

# அருளாசிச் செய்தி

முருகன் அடியார்களுக்கு,

அராலி மயிலியற்புலம் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானுக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். ஆலயத்தில் நடைபெறும் விழாக்களில் தேர்த்திருவிழா மிகமுக்கிய முடையதாகும். அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான ஒளியை ஏற்றுவதே தேர்த்திருவிழாவாகும். மனித வாழ்வை மேன்மை அடையச் செய்வது இறைவழிபாடாகும். இதனை நமக்கு உணர்த்துவதே ஆலயங்களாகும். ஆலய வழிபாடு இன்மைக்கும் மறுமைக்கும் புண்ணியம் பெற்றுத் தருவதாகும். கலியுகத் தெய்வமாம் முருகப்பெருமான் மயிலியற்புலத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு எழுந்தருளியுள்ளான். முருகனை வணங்கினால் பிறவிப்பிணி அகலும். இங்கு உருவாக்கப்பட்டிருக்கும் சித்திரத்தேர் இவ்வாலயத்திற் கும் ஊருக்கும் பெருமையாகும். வரலாற்று ஆவணமாகிய இப்படைப்பு கலைஞனின் கைவண்ணமாகும். இதற்குள் பொதிந்து கிடக்கும் ஒவ்வொன்றும் சிந்தனை உருவாக்கும் சத்தியமாகும். இதனை உருவாக்கிய கலைஞனையும் இப்பணியைச் செய்திருக்கும் அன்பு உள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக் கின்றோம். ஆலயம் அறப்பணி செய்து மக்களோடு இணைந்து பணியாற்ற இறைவன் ஆசீர்வதிப்பாராக!.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

# வாழ்த்துச் செய்தி

மதியால் வித்தகனாகி மனதால் உத்தமனாகிப்
பதிவாகிச் சிவஞான பரயோகத் தருள்வாயே
நிதியே நித்தியமே என் நினைவே நற்பொருளாயோய்
கதியே சொற் பரவேனே கருவூரிற் பெருமாளே.

– திருப்புகழ்

துஷ்ட நிக்ரஹம் செய்வதற்காக எம்பெருமான் தேரேறி ஆக்ரோஷத்துடன் வருவதும் பின்னர் அவைகளை நீக்கி சாந்த சொரூபியாக குளுமை பொருந்தியவராக மீண்டும், ஆலயத்தினுள் பிரவேசிப்பதையும், தேர் உற்சவம் எமக்கு உணர்த்துகின்றது. இறைவன் தேரேறி வீதிவலம் செல்வதும் பின்னார் இறைவன் சாந்தமானவராக பச்சை சாத்தப்பட்டு ஆலயத்தினுள் வரும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும் அற்புத உணர்வாகும்.

மேலும் பிரபஞ்சத்தில் உள்ள காட்சிகளை, யதார்த்த உலகியல் வாழ்வில் நடைபெறும் நிகழ்வுகளை நாம் சித்திரத் தேர்களில், சிற்பங்களாகக் காண்கின்றோம். இவையெல்லாம் எமது இந்துசமயம் உலக வாழ்வியலிற் காட்டும் உண்மைகளை எடுத்தியம்புவதாகவுள்ளது. சித்திரத்தேர் என்பது அழகுமட்டுமல்ல; இந்து தத்துவங்களையே காட்சிப்படுத்துகின்ற அற்புதக் கலை வடிவமுமாகும்.

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில் நூற்றுஐம்பது வருடகாலப் பழமை பொருந்தியது. இந்தப் பெருமைமிக்க ஆலயத்திற்கு அழகுமிகு சித்திரத்தேர் அமையப்பெற்றது அப்பன் முருகனின் திருவுளமேயாகும்.

இந்த ஆலயத்தின் அறங்காவலர் சபையினர், பல சிரமங்களுக்கும் மத்தியிற் பல இலட்சம் ரூபா செலவளித்து இந்த அழகான வேலைப்பாடான சித்திரத்தேரை அமைத்துள்ளனர். தேரோடும் நன்னாளில் கந்தசுவாமியின் புகழ்பாடும் வரலாற்றுத் தேர்ச்சிபெற்ற மலரையும் வெளியிடுவது இரட்டிப்பு மகிழ்ச்சியூட்டுவதாகும். இவர்கள் பணி சிறக்க முருகப்பெருமான் துணைநிற்க.

ஓம் முருகா ஓம்!

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்,**
**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**248, 1/1, காலி வீதி, கொழும்பு.**

# அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது முதுமொழி. அத்துடன் "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்றார் ஔவையார். இக்கோயில்கள் உள, சமூக ஆரோக்கியத்தின் நிலைக்களன். ஆன்மீக ஆரோக்கியம் என்பது மக்களது வாழ்நிலையைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஒன்றாகும்.

இவ்வகையில் அராலி வடக்கு, மயிலியப்புலம் கந்தசுவாமி கோவிலில் நிகழும் புதிய சித்திரத்தேர் பவனி என்பது முருகன் அடியவர்களுக்கு மனமகிழ்வையும் திருப்தியையும் அளிக்சு வல்லது.

150 வருடங்களுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த இவ்வாலயத்தில் விநாயகப்பெருமானும் பெருமாளும் பரிவார மூர்த்திகளாவர். 2005ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சித்திரத்தேர்ப்பணி இன்று எல்லாம்வல்ல முருகப்பெருமான் திருவருளால் இனிதே நிறைவுற்று எம்பெருமான் வீதியுலா வருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கவல்லது.

மேலும் இவ்வாலயப் பரிபாலன சபையினரின் எண்ணங்கள் யாவும் ஈடேறி எம்பெருமான் அடியவர்களுக்கு மகிழ்வையும் இஷ்ட சித்திகளையும் தரவேண்டுமென மனதாரப் பிரார்த்திக் கின்றேன்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்
யாழ் மாவட்டம்.

அன்னை சிவத்தமிழ் செல்வி,
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# ஆசிச் செய்தி

சீரும் திருவும் நிறைந்த அராலி, மயிலியபற்புலம் அருள்மிகு கந்தப்பெருமானின் திருத்தேர் வெள்ளோட்ட விழாக் குறித்து வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன். விடிவு தரும் வேலவனுக்கு அடியவர்கள் கூடி அழகான சித்திரத்தேர் உருவாக்கியமை பாராட்டுக்குரிய விடயமாகும். இப்புதிய சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பி செல்லையா பாலச்சந்திரன் புகழ்பூத்த சிற்பக் கலைஞன். எங்கள் ஆலய சிற்பக் கலைஞன். இவரது கைவண்ணத்தில் உருவாகிய தேரின் சிறப்பு பெருமைக்குரியது. பலரது பக்தியினால் முயற்சியால் எழுச்சிபெற்றுள்ள இத்திருக்கோவில் என்றும் சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து அமைகின்றேன்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,
(சமாதான நீதிபதி)

# துணைவேந்தர் வாழ்த்து

எங்கள் கிராமங்களின் உயிர்ப்பு மையங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. இந்த உயிர்ப்பினைத் தருகின்ற ஆத்ம அனுபவங்களாகத் திருவிழாக்கள் அமைகின்றன. அதிலும் தேர்த்திருவிழா உச்ச அனுபவமாகும்.

இந்தவகையில் அராலி மயிலந்தனையிற் கோயில் கொண்டருளும் எங்கள் தமிழின் தெய்வமான முருகன் 'அந்திரம்' எனப்படும் அழகிய அறுகோணத் தேரில் இன்று பவனிவரும் செய்தி மனதுக்கு பெருமகிழ்ச்சி தருகின்றது.

எங்கள் பண்பாட்டின் கலைமாட்சிக்கும், சமூக ஒன்றிணைப்புக்குமான சின்னமாக இந்தத் தேரினை வடிவமைத்த தேர்ச்சிற்பக்கலைஞர் ஸ்தபதி பாலசந்திரன் அவர்கள் பாராட்டுக்குரியவர். புலம் பெயர்ந்த தேசங்களிலெல்லாம் ஆலயங்கள் அமைத்தும், தேர்த்திருவிழாக்களைக் கொண்டாடியும் தம் பண்பாட்டு உணர்வினைக் காத்து நிற்கும் எங்கள் பிள்ளைகள், 'தாம்பிறந்த ஊரின் முருகனுக்கு ஆக்கித்தந்த வண்ணத்தேர். இது என்று' ஊரெல்லாம் கூடி வந்து வாழ்த்தி நிற்கக் காண்கின்றோம்.

இடரினும் தளராத எங்கள் ஆத்ம பலத்தின் குறியீடாக மயிலியற்புலம் முருகனின் தேர்ப் பவனியின் அருள் வீச்சு எங்கள் பண்பாட்டுப் புலமெலாம் நிறைந்திடட்டும்.

அன்பே சிவம்

**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்,**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் அவர்களின்
# ஆசிச் செய்தி

அராலி மயிலியபற்புலம் கந்தசுவாமி கோவிலுக்குப் புதிய சித்திரத்தேர் பக்தர்களின் பெருமுயற்சியால் உருவாகியிருக்கிறது. அத்தருணத்தில் சித்திரத்தேர் சிறப்புமலர் வெளியீடு நடைபெற இருப்பதும் சாலச் சிறந்ததாகும். தேரிலே இறைவன் திருவுலா வரும்போது தேவர்கள், யட்சகிர்கள், கின்னர, கிம்புருஷர்கள், கந்தர்வர்கள் முதலிய எல்லோருக்கும் தர்சனம் கொடுக்கிறார். தேர் உலா வருவது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருப்பது வழக்கம். ஆகவேதான் தேரிலே இறைவன் இருந்து வரும்போது பக்தர்கள் கூட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது. இத்துணைச் சிறப்புவாய்ந்த புதிய சித்திரத்தேர் உலா நிறைவெய்தியவுடன் நடைபெற இருக்கும் சித்திரத்தேர் சிறப்புமலர் வெளியீட்டுவிழா சிறப்புற நடைபெற ஆசி நல்குகின்றேன்.

சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்,
அதிபர்,
காயத்ரீபீடம் தர்மசாஸ்தா,
குருகுலம்.

# ஆசியுரை

எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருப்பாதத்தினை முதற்கண் வணங்கிக்கொண்டு இலங்காதீபத்தில் யாழ்ப்பாணம் என்னும் நகரத்தில் அராலி என்னும் கிராமத்தில் மருதமரமும் ஒருங்கே அமையப்பெற்ற மயிலியற்புலம் என்னும் பதியிலே கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானின் ஆலயம் மிகவும் எளிமையான தோற்றத்தைக் கொண்டிருந்தது. 2002 ஆம் ஆண்டு புனருத்தாரனம் செய்யப்பட்டு, எம் பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் பிரதான சிவாச்சார்யராக இருந்து நடாத்தும் பாக்கியத்தை எனக்குக் கந்தப் பெருமான் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் திருப்பணி வேலைகள் நடைபெற்று ஆலயம் புதுப்பொலிவுடன் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் முருகப் பெருமானுக்கு ஒரு சித்திரத்தேர் உருவாக்க வேண்டிய தேவையை உணர்ந்த அடியவர்கள் உடனடியாக 2005 ஆம் ஆண்டு சித்திரத்தேருக்கான பூர்வாங்க வேலைகள் ஆசாரியார் திரு. செ.பாலச்சந்திரன் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து, சர்வதாரி வருட மஹோற்சவத்திலே சித்திரத்தேர் கம்பீரமான தோற்றத்தோடு வெள்ளோட்டம் காண்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றதென்பதை நினைக்கும்போது மனம் மகிழ்ச்சியடைகின்றது. மென்மேலும் இவ்வாலயம் வளர்ச்சியடைந்து முருகப் பெருமானின் புகழ் உலகெங்கும் ஓங்க வேண்டும் என வேண்டிக் கொண்டு எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு ஆசி கூறி அமைகின்றேன்.

சர்வே ஜனானாம் சுகினோபவந்து.

**சிவஸ்ரீ ச. செல்வகுமாரக்குருக்கள்**
ஆலய பிரதம குரு

# ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் அராலிவடக்கில் உள்ள மயிலியற்புலத்திற் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப்பெருமானுக்குப் புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு, அதற்குரிய வெள்ளோட்டம் நடைபெறவிருப்பதையிட்டு வெளிவரவுள்ள சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இச்சிறப்புமலர் ஆலய வரலாற்றையும் உள்ளடக்கியதாக அமைவது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

கலியுக வரதனாகிய கந்தனுக்கு இவ்வாலயத்தில் இவ்வருடம் நடைபெறவுள்ள மகோற்சவத்தின்போது இவ்வழகிய புதிய சித்திரத்தேர் அடியார்களது பக்தியின் சின்னமாக அர்ப்பணஞ் செய்யப்படுவது விசேட அம்சமாகும். எம்பெருமான் தேரில் ஆரோகணித்துப் பவனிவரும் தெய்வீகக் காட்சியைக் காணும்பேறு இவ்வூர் மக்களுக்குக் கிட்டியுள்ளமை ஒரு தவப்பயனாகும். "ஊர் கூடித் தேர் இழுத்தல்" என்ற வாக்கிற்கேற்ப ஊர் மக்கள் அனைவரும் முருகனடியார்கள் என்ற நிலையிற் பக்திப் பரவசத்தோடு தேரின் வடந்தொட்டு எம்பெருமானின் தேர்த் திருவிழாவிற் பங்கு கொள்ளும்போது கிட்டும் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை.

முருகன் அற்புதமான கண்கண்ட தெய்வம். அழகுத் தெய்வம், ஆறுமுக திருக்கோலத்துடன் அவன் தரும்காட்சி சொற்களால் வடிக்க முடியாதது. அத்தகைய தெய்வீகப் பொலிவுடன் இறைவன் தேரேறி அருள்பாலிக்கும் நாள் எம் வாழ்நாளிற் பொன்னாளாகும்.

தேரின் தத்துவம் உன்னதமானது; நான்கு சக்கரங்களையும் தேர்த்தட்டினையும், அதற்குமேல் அமைந்துள்ள விதான அடுக்குகளையும், அவற்றின் உச்சியில் விளங்கும் கலசத்தினையும் கம்பீரமாகப் பறக்கும் கொடிகளையும் கொண்ட தேரின் தோற்றம் உயிர் இறைவனை அடையச் செய்யும் வழியின் அடிப்படைகளையும் அதற்கான வழியின் அமைப்பையும் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கது. எமது ஆணவ மலம் நீக்கம்பெற எம்மைத் தேர்ந்தவழியிற் செலுத்துவது தேரின் தத்துவமாகும்.

ஆலயத்தில் நிகழும் மகோற்சவத்தின்போது அனைத்து உயிர்களும் உய்வுபெறும் வண்ணம் இறைவன் சிறப்பாக தம்பம், பிம்பம், கும்பம் ஆகியவற்றில்

சாந்நித்தியம் கொண்டு அருள்பாலிப்பான். பிரமோற்சவம் எனச் சிறப்புப் பெறும் மகோற்சவத்தில் ரதோற்சவம் உன்னத இடத்தைப் பெறுகின்றது. இதன்போது எம்பெருமானின் திருவருட்பேறு அடியார்களுக்குச் சிறப்பாகக் கிட்டும்.

அத்தகைய சிறப்புப் பொருந்திய விழாவுக்குரிய புதிய சித்திரத் தேரினைச் சிற்பக்கலையில் வல்ல சிற்பக் கலைஞர்கள் தமது அயராத முயற்சியினாலும் கைவண்ணத்தினாலும் அழகுற அமைத்துள்ளார்கள். அவர்களுக்கு எமது பாராட்டுக்கள் உரித்தாகுக. இத்தேரின் உருவாக்கத்திற்குரிய திருப்பணிக்கு மனமுவந்து நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி போன்றவற்றைப் புரிந்துள்ள அடியார்களுக்கும், இத்திருப்பணியை வழிநடத்திய ஆலய பரிபாலன சபையினர்க்கும், மற்றும் தேர்த் திருப்பணிச் சபையினர்க்கும் எல்லாம்வல்ல முருகப்பெருமானின் திருவருட்பேறு கிட்டுவதாகுக என வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். அனைவருக்கும் எமது நல்லாசிகள் உரித்தாகுக. இடர்களும் துன்பங்களும் நீங்கி வளமான வாழ்வு சிறப்பதாகுக!

வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினும்
தான்கட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும் போய்
நான் கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ.

என்ற மணிவாசகரின் திருவாசகப் பாடலைத் தேர்த்திருவிழாவில் தேர்மேல் இறைவன் ஆரோகணித்து அருள்புரிய வரும்போது எம் உள்ளத்திற் சிந்தித்து நலம் பெறுவோமாக! தேர் வெள்ளோட்டமும் எம்பெருமானது ரதோற்சவமும் சிறப்புற நடைபெற மயிலிபற்புலம் கந்தவேற் பெருமானின் திருவருள் பொலிவதாகுக!

பேராசிரியர், கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# ஆசிச் செய்தி

அருள்வளம்மிக்க அராலித் திருவூரில் அருள்பாலிக்கும் மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில் திருவருள் போற்றுதலுக்குரியது. இத்திருக்கோவில் பரிபாலன சபையினர் ஆலய வரலாற்றினை நூலாக வெளியிடுவது அறிந்து அகமகிழ்கின்றேன். அழகான புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு ஆலய எழிற்சி பெற்றுத் திகழ்வது பெருமைக்குரிய விடயமாகும். முருகப் பெருமானின் மீளா அடியவர்கள் ஒன்றுகூடி வேறு திருப்பணிகளை நிறைவேற்றிவருவது பாராட்டுக்குரியது. "தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத்தொல்கதி அடைவர்" என்பது கந்தபுராணம் கூறும் தத்துவமாகும். எவரையும் மன்னித்து ஆட்கொள்ளும்தெய்வம் முருகப் பெருமான். அராலி வாழ்மக்கள் அசைக்கமுடியாத முருக பக்தர்கள். ஆங்கிலேயர் காலத்தில் மதம் மாறாது, சைவப் பண்பாட்டைப் பேணிய அராலி வாழ்மக்கள் மாண்பு மறக்க இயலாது. வெற்றி வேலாயுதன் திருவருளால் மயிலியற்புலம் என்றும் சிறக்க இனிய ஆசிகளையும், வாழ்த்தினையும் அடியவர்களுக்குச் சமர்ப்பித்து அமைகின்றேன்.

"யாவர்க்குமாம் இன்னுரை தானே"

**செஞ்சொற் செல்வர்**
**ஆறு. திருமுருகன்**
**28, கையிலாசபிள்ளையார் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

# வாழ்த்துச் செய்தி

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

நிறைந்த இறையுணர்வு, நீறோடு கண்டிகை மறவாமை, நீடிய தமிழ்ப்பற்று, சைவமுந் தமிழும் இருகண்ணெனப் பேணுந்தன்மை, கந்தபுராண கலாசாரம் இவற்றுக்கெல்லாம் உறைவிடமாகத் திகழ்வதுதான் அராலி மயிலியற்புல வளாகம்.

இங்கே மயிலியற்புலம் கந்தசுவாமியார் அருளாட்சி செய்து வருகின்றார். இயற்கை எழில் மிக்க இந்த ஆலய வளாகத்தில் ஒருகால் அமர்ந்தால் பலநோய்கள் தீருமென்பர். இப்புதுமைமிக்க ஆலயம் படிப்படியாகப் பலமுன்னேற்றங்களைக் கண்டு வருகின்றது.

இன்று, மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில் பரிபாலன சபையார் ஓர் அழகிய சித்திரத்தேரினைச் செய்துள்ளனர். பல வழிகளிலும் வசதிகள் குறைந்த இந்நாளில் இவ்வாறான திருப்பணிகளைச் செய்வது உண்மையில் பாராட்டுதற்குரிய ஒருவிடயமாகும்.

**21.06.2008** ஆம் திகதியன்று, பலகோடி மக்கள் களிப்போடு வாழ, வலனோடு நெஞ்சம் தூய்தாகி நிற்க, நிலனோங்குமயிலியற்புலத்தரசா ! நலனோங்கு சித்திரத்தேரேறி அருள்புரிவாயே.

தொன்மைமிக்க இவ்வாலயத்திற்கு நல்லதொண்டு செய்து இறை கைங்கரியங்களை ஆர்வத்தோடு நிர்வகித்துவரும் மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில் பரிபாலன சபையினருக்கும் மற்றும் அடியார்களுக்கும் பரிபூரணமான திருவருள் கிடைக்க முருகப்பெருமான் திருவடிகளை உளமார வாழ்த்துகிறேன்.

ஆலய வரலாறு கொண்ட சித்திரத்தேர் சிறப்பு மலரினை ஒவ்வொரு அடியாரும் பெற்றுப் படித்து மயிலியற்புலம் கந்தசுவாமியாரின் அருளாடல்களை அறிந்து திருவருள் அமுதினை மாந்திப் பயனடையுமாறு வேண்டுகின்றோம்.

"கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலிற் றோன்றி
அவைப்படு தன்மைத் தன்றோ அறுமுகன் ஆடல் எல்லாம்"

–கச்சியப்ப சிவாச்சாரியர்

**கா.சுமத்திரன்**
**ஆலயதர்மகர்த்தா,**
**விசாலாட்சி சமேத காசி விசுவநாத சிவன் தேவஸ்தானம்.**

# வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் அராலிப் பதியில் அருளாட்சி புரியும் மயிலியற்புலக் கந்தசுவாமி கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வின் பொருட்டு இச்சிறியேனும் ஆசிச்செய்தி வழங்குவதையிட்டுப் பெரும் உவகையும், மகிழ்வும் அடைகின்றேன். அயற் பிரதேசச் செயலகப் பிரிவில் கடமையாற்றுகின்ற போதிலும் அராலிப் பிரதேசத்தின் பாரம்பரியத்தையும் செழுமையையும் அன்பர்களின் நல்லுள்ளத்தையும் அறிந்தவன் என்ற ரீதியில் இச் சந்தர்ப்பத்தில் இணைந்து கொள்வதையிட்டுப் பெருமையடைகின்றேன். இன்றைய இடர்ச் சூழலில் உடலினதும் மனதினதும் இரணங்களுக்கு மருந்து போடுபவையாக விளங்குபவை ஆலயங்களே எனலாம். இன்றும் ஆலயங்களின் இருப்பினால் மட்டுமே மக்கள் ஓரளவு நிம்மதியை அடைபவர்களாக இருக்கின்றனர். மேலும் இந்தப் புதிய இரதமானது தீவினைகளைத் தீய்த்திடவும், நன்மைகளை நாட்டு மக்களுக்கு வழங்கிடவும் ஆண்டாண்டு அருளுதவி புரியவுள்ளது என்பது ஆறுதலான செய்தியாக இருக்கிறது. எனவே இந்த இரத வெள்ளோட்ட நிகழ்வு சீராகவும், சிறப்பாகவும் நிகழ என் இதயபூர்வ வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் எல்லோருக்கும் நிரந்தர அமைதியும், நிம்மதியும் கிடைக்க இறையருளை இறைஞ்சிப் பணிகின்றேன்.

இ.த.ஜெயசீலன்
பிரதேச செயலர்,
காரைநகர்.

# ஆசிச்செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமயமும் தமிழும் தலைத்தோங்கும் முதன்மையான பிரதேசங்களுள் ஒன்றாக வலிகாமம் மேற்குப்பிரதேசம் விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் இந்துப்பண்பாடு சார்ந்த திருக்கோயிற் பண்பாட்டம்சங்களுக்குக் குறைவில்லை. எல்லாத்திசைகளிலும் திருக்கோவில் கள் சூழ்ந்துள்ளன. இப்பிரிவிலுள்ள அராலி வடக்குக்கிராமத்தை அணி செய்கின்ற ஆன் நிலைக்களமாக மயிலியற்புலம் கந்தசாமி கோயில் விளங்குகின்றது. இவ்வாலயம் சார்பாகக்கிடைக்கக்கூடிய வரலாற்றா வணங்கள் மற்றும் கர்ண பரம்பரைக்கதைகள் மூலமாக இது 18ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென அறியப்படுகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற இவ்வாலயத்தில் நித்திய நைமித்தியக் கிரியைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நைமித்திய உற்சவத்தில் மகோற்சவம் முக்கியம் வாய்ந்ததாகும். மகோற்சவங்களில் ரதோற்சவம் மிகவும் சிறப்பானது. இத்தகைய உற்சவத்தை மிகவும் சிறப்புற நடாத்துவதற்காக இப்பகுதி மக்கள் தமது கூட்டுமுயற்சியாக கூட்டுப்பொறுப்பாக ஒரு சித்திரத்தேரை உருவாக்கியுள்ளனர். இச்சித்திரத் தேரும் ஆலயவரலாறும் தொடர்பாக சிறப்புமலர் வெளியிடப்படுவது அறிந்து மகிழ்வடைகின்றேன். இத்தகைய உயர்ந்த செயற்பாட்டிற்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மிகுந்த மனநிறைவு கொள்கின்றேன்.

ஆலங்கள் தனியே வழிபாட்டுடன் நின்றுவிடாது பல அரிய சமூக சேவைகளை ஆற்ற முன்வர வேண்டும். மக்கள் சேவையை இறை சேவையாகச் செய்கின்ற மனப்பாங்கு அடியவர்கள், அறங்காவலர்கள், சிவாச்சாரியார் களிடத்தில் வளரவேண்டும். இன்றைய பொருளியல் உலகில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மனிதனின் ஆன்மீக நாட்டமும்

ஒழுக்கவிழுமியங்களும் குறைவடைந்து வருகின்றது. இத்தகைய உலகில் ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகள், விழாக்கள் கடவுள் நம்பிக்கையை வளர்ப்பதுடன், உள சமூக மேம்பாட்டிற்கு உதவுபவையாகவும் உள்ளன. எனவே மயிலியற்புலம் கந்தசாமி கோவில் சமூகத்தினரின் இவ்வரும் செயல் பாராட்டிற்குரியதாகும். எல்லாம் வல்ல மயிலியற்புலம் கந்தனின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

திருமதி எஸ். பாபு
பிரதேச செயலர்,
வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம்.

# வாழ்த்துச் செய்தி

முருகன் குமரன் முன்னோன் மைந்தன்
திருமால் முருகன் தீந்தமிழ் செல்வன்
பெருகும் அருளைப் பெருக்கும் சேயோன்
உருவின் மயிலை ஓங்காரக் கந்தன்

தமிழும் சைவமும் தழைத்தோங்கும் ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தில், கண்மணியெனப் போற்றிக் கூறக்கூடிய (அராலி வடக்கில்) மயிலிபற்புலம் கந்தசுவாமிப் பெருமான் வீற்றிருக்கின்றார்.

எல்லாம்வல்ல முருகப்பெருமானுக்கு ஆலய மகோற்சவத்திற் சித்திரத்தேர் அமைய வேண்டும் என்பது எம் ஊர் மக்களின் பெருவிருப்பாகவும் இருந்தது. இந்த அரிய கைங்கரியத்தை ஆற்ற எம்மக்கள் உறவுகள் பெரும் பங்காற்றி உள்ளனர். எமது ஆலயத்திற்கு சில்வர்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் தேர்த்திருப்பணியிலும் பெரும் பங்காற்றியமை பெருமகிழ்வே.

நாம் இன்று புதிய தேரில் எம்பெருமான் வீதி உலா வருவதைக் காண்கின்றோம் என்றால் "மனிதப் பிறப்பின்" பயனை இன்றுதான் பெற்றுள்ளோம்.

சிவபெருமான் திரிபுர சம்ஹாரத்தில், சூரியர் சந்திரர் சில்லுகளாகவும், பூமியானது தேராகவும் அமையப்பட்டது. திரிபுரத்தரசர்கள் அழிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் சிவயோக வாழ்வு பெற்றனர். எனவே தேர்த்திருவிழாவின் மகிமை திருவருள் நாட்டவே ஆகும்.

உன்னையன்றி எனக்கார் உதவுவார் முருகா
பின்னைப் பெருவாழ்வு பெறத்தகும் பிள்ளையாய்
ஐயனே பன்னிரு கையனே அப்பனே
செய்யனே திருவருள் தருவாய் சிற்பரா.

என அவன் பாதங்களை வணங்கி, அராலி வடக்கு சனசமூக நிலையம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

**விசுவரத்தினம் சுதர்சன்** (B.Sc)
**தலைவர், சனசமூக நிலையம்,**
**அராலி வடக்கு.**

# வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் வடபால் சென்னியாய்ச் சிறந்து ஆழிசூழ அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் குன்றாச் செல்லம் குவிக்கும் குடாக் கடலின் அலையும், நெற்கழனி சொரியும் வயல்களும், வனப்பூட்டும் வழுக்கையாறும் சங்கமிக்கும் அராலிப் பகுதியில் வடதிசை மயிலியற் புலத்தில் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் அடியவர்களிற்கு அருளொளி பரப்பிக் கொண்டிருக்கிறார்.

எம்பெருமானுக்கு வருடா வருடம் ஆனித் திருவோண நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும். இதற்கு முதல் நாள் இரதோற்சவம் நடைபெறும். இத் திருநாளில் காலம் காலமாய்க் கட்டுத் தேரில் வலம் வந்து கருணை மழை பொழிகின்ற கந்தவேளுக்கு ஊர் கூடி இழுக்க ஒரு சித்திரத்தேர் செய்யப் பேர் ஆவலுடன் நாம் ஏங்கியவேளை, அங்கத்தவர்கள் மற்றும் அடியவர்களிடம் நிதி திரட்டி எமது இளைஞர்களின் சரீரப் பணியுடன் அம்சமாய் அமைக்கப்பட்டுள்ளது எமது சித்திரத்தேர். இத் தேர்த்திருப்பணியில் ஆலயத்துடன் தாய் சேய் உறவைப் பேணிவந்த எமது சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகம் பெரும் பங்காற்றியுள்ளது. தேர்க் கொட்டகைக்குரிய கம்பங்களைத் தாமாகவே தேடி எடுத்து இக் கொட்டகையைச் சிறப்பாக அமைத்ததுடன் மரங்களை ஏற்றி இறக்குதல். இடம் மாற்றுதல் உட்பட அனைத்துப் பணிகளிலும் தோள்கொடுத்து நகமும் சதையும்போலத் தமது உறவின் உரிமைத் தன்மையை வெளிக்காட்டியுள்ள இவர்கள் சுவாமியைத் தேரிற்கு ஏற்றுவதற்குரிய படிக்கட்டுகளை(மரத்தில்) அமைப்பதிலும் தமது பங்கை செலுத்தியுள்ளது.

புதிய சித்திரத்தேரானது இரு மூன்று சங்கரங்கள் பூட்டி அதன் மீதுள்ள தளத்தில் வாழ்க்கைத் தத்துவக் கோலங்களைச் சித்தரிக்கும் விக்கிரக வரியும் வியாழ வரியும் இவ்வாலயத்தின் உரித்துடையோர் அலைகடல் மீது அள்ளிய செல்வத்தில் கலைஎழில் கொஞ்சும் கந்தனுக்குச் சிலை வைத்த வரலாற்றை உரைக்கின்ற விதமும், தாவுகின்ற யாழிகளும், மாடங்கள் தாங்கி மணிகள் பூட்டிய கூரையும், குடையதன் மீது பறக்கும் கொடியாய் கூடவும் சேவலும், பஞ்சவர்ணம் பூசிய பவளக் கால்களின் நடுவே பீடமதில் அமர்ந்து திரிபுரம் எரித்த சிவனின் தேர்போன்ற எம் அறுகோணத் தேரில், பாயும் பரிகள் இழுக்க, மும்மலம் எரித்து, கையில் வேலொடு வினை தீர்க்க எம்மவன் அசைந்து அசைந்து வருகவருகவென சில்வஸ்ரார் விளையாட்டுக் கழக இளைஞர்களாகிய நாமும் மனதார வாழ்த்துகின்றோம்.

வழமையாக இவ் இரதோற்சவத் தினத்தன்று வசந்த மண்டபத்தில் எழுந்தருளி இருக்கின்ற சண்முகப் பெருமான் பட்டுப் பீதாம்பரங்கள் உடுத்து, ஞானவேல் தாங்கி, நறுமலர்கள் சூடி, தீப, ஒளிபரவ அந்தணர்களின் வேத ஒலி நடுவே அலங்கரித்துக் காணப்படும் காட்சி அளப்பரியது. பின்பு உள்வீதி உலா வருவதற்கு இளைஞர்களால் தாங்கப்படுகின்றபோது, 'அரோகரா' என்று அண்டமதிர ஒலிக்கின்ற ஒலியும் அவன் பாதங்களுக்குப் படுக்கையாய்த் தூவுகின்ற மலரும் கற்பூரச் சட்டிகளின் புகையும், கலைததும்ப ஆடும் காவடிகளும், உடுக்கை ஒலியெழுப்ப உருவெடுத்தாடும் பஜனைக் குழுவும் இவைஅத்தனைக்கும் நடுவே அவன் ஆடி வருகின்ற தாண்டவமும் மெய் சிலிர்க்க வைக்கின்றது, ஆலயத்தில் அமர்ந்திருந்த ஆண்டவன் அசையும் ஆலயமான ரதத்தில் ஏறி, அக்கிரமம் அழித்து அடியவர்க்கு அருட்காட்சி அளித்து வந்து பச்சை சாத்தி மயில் நடமிடுவதுபோல் அலைவடிவில் அசைந்துசென்று அபிஷேகத்தில் தோன்றும் காட்சி எமது ஆலயத்திற்கே ஒரு தனிச்சிறப்பு.

இவ்வாலயத்தின் எல்லாப் பணிகளிலும் முன்னின்று உழைக்கின்ற சில்வர்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினராகிய நாம், ஒற்றுமை ஓங்கி ஊரிலும், தமிழ் மண்ணிலும் அமைதியும் சாந்தியும் நிலவப் பிராத்திப்பதுடன், இத்தேர்ச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வும் மன நிறைவும் அடைகின்றோம்.

"ஓம் சரவண பவாய நமக"

ப.பரணீதரன்
தலைவர், சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகம்,
அராலி வடக்கு.

# வாழ்த்துரை

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்ட எமது ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்புச் சித்திரத் தேர் வீதி உலாவருவது சிறப்பு வாய்ந்ததே.

எமது ஆலயத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்து அடியார்கள் சித்திரத் தேர் பற்றிக் கனவுகண்டு வந்தாலும் தற்துணிவு மிக்க பரிபாலன சபைத் தலைவர், தேர் திருப்பணித் தலைவர் தீர்மானங்கள், நலிவடைந்த பொருளாதார அமைப்பைக் கொண்ட எம்மக்கள் மத்தியில் ஆறுமுகப் பெருமானுக்கு இவ்வரலாற்று சிறப்புத் தேர் அமைத்து, அவர்கள் காலத்திலேயே தேர் வெள்ளோட்டம் வருவது மேலும் பாராட்டத்தக்கது.

இங்கு இது நிற்க; தேர்த் திருவிழா பற்றிச் சிறிது பார்ப்போம்.

பரம் பொருளாகிய சிவபெருமான் முப்புர அசுரர்களை அடக்குவதற்காகச் சூரிய சந்திரனைத் தேர்ச் சில்லாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும் மற்றைய சரம், அசரம் ஆகிய பொருட்களையும் ஒவ்வொரு உறுப்புக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட தேரில் எழுந்தருளினார். மேருமலை வில்லாகவும், விஷ்ணு அம்பாகவும் அமைய, பிரமன் சாரதியாக இருந்து பிரணவமாகிய சவுக்குக் கொண்டு தேரைச் செலுத்தினார். சிவபிரான் திரிபுர அசுரர்களைத் தன் சிரிப்பினால் அழித்து, சிவபக்தி வழுவாதிருந்தமையால் அவர்களுக்கு தம்பதமளித்து அருளினார். ஆகவே திரிபுர சங்கரத்து உண்மைக் காட்சியினை உணர்த்தி, அதன்மூலம் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அழிக்கும் இச்செயலைக் குறிக்கும் சம்பவமாக இரதோற்சவம் விளங்குகிறது.

எனவே இச்சிறப்பினை அடியார்களுக்குக் காட்சிப்படுத்துவதோடு, அடுத்த சந்ததியினருக்கும் இதைக் கண்டு களிக்கும் வாய்ப்பை வழங்கிய இந்நிர்வாகங்களும் பரிபாலன சபையும், ஊர்மக்களும், ஆலய நலன் விரும்பிகளும் மீண்டும் பாராட்டுக்குரியவர்கள்.

வி.ப. தேவராசா, B.Com. (Sp.)
அகில இலங்கை சமாதான நீதிவான்,
கணக்காளர், பனை அபிவிருத்திச் சபை.

# ஆலய பரிபாலனசபைத் தலைவரின் செய்தி...

வரம் தந்திடுவாய் முருகா

மயிலைக் கந்தன் எங்கள் சொந்தக் கந்தன். அவன் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் இடமாக மயிலைப் பதி விளங்குகின்றது. அங்கே அழகும், இளமையும், அளவிலா ஆற்றலும் பொருந்தி ஞானபண்டிதனாக எழுந்தருளி நலமருளும் சேயோன் முருகப்பெருமான். இப்பெருமானை முருகன், குமரன், குகன் என்று பொழிந்து உள்ளம் உருகித் துதிக்க வேண்டும் என்பது கந்தர் அனுபூதி வாக்கு. கார்த்திகை மாதர்களால் வளர்க்கப்பட்டுவந்த இம்முருகனின் ஆறு வடிவங்களையும் அம்பாள் தன் திருக்கரங்களால் ஒன்றாகச் சேர்த்து, எடுத்து அணைத்து, கந்தன் எனப்பேர் புனைந்ததாகக் கலிவெண்பா புகழ்கின்றது.

எம்முன்னோர் தாங்காத் துயரத்தின் காரணமாக மகமாரி அம்மனுக்கும், கந்தனுக்கும் கோயில் அமைத்தார்கள். அவர்கள் உள்ளத்தில் ஒரு மனதாக இறைவனை நிறுத்தி ஆகம விதிப்படி கோயில் அமைத்துச் சிறப்புற வழியமைத்தார்கள். பல்வேறு சிறப்புக்களைத் தாங்கிய எம்பெருமான் புகழ்பாட ஆலய பரிபாலன சபையினர் "ஆலய வரலாறும் புதிய சித்திரத்தேர் சிறப்பு மலரும்" என்ற மலரினை வெளியிட்டு வைப்பதிற் பெருமகிழ்வெய்துகின்றேன்.

1995ஆம் ஆண்டு எமது கிராமத்தைவிட்டு மக்கள் இடம்பெயர்ந்தனர். இதனால் எமது கிராமத்தில் பொருளாதார, சமூகப் பண்பாட்டுக் கோலங்கள் சீரழியத் தொடங்கின. மக்களற்ற குடியிருப்புக்கள், கோவில்கள், பொது நிறுவனங்கள் என யாவும் கட்டாக்காலிகளினதும் ஒழிந்து வாழ்ந்து வந்த விஷஜந்துக்களினதும் உறைவிடமானது. இந்நிலையில் கோயில் பூசையின்றிச் சிறிது காலமிருந்து பின் ஒருசில குறிப்பிட்ட அங்கத்தவர்கள் ஒரு நேர பூசை ஒழுங்குசெய்து நடத்தி வந்தனர்.

இந்நிலையில் நான் 1997ஆம் ஆண்டு மார்கழி மாதம் மயிலைக் கந்தனைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. ஆலயத்தின் உள்வீதியிலிருந்து கதறிக் கதறி அழுதேன். அங்கு "முருகா, உனது ஆலயத்தைப் புதுப்பொலிவு ஊட்டி மஹாகும்பாபிஷேகம் நடைபெற வரம் தரவேண்டும்" என முருகனிடம் கேட்டேன். அதன்படி 2000ஆம் ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் என்னைப் பரிபாலன சபைத் தலைவராகத் தெரிவுசெய்தனர். இத் தெரிவை நான் இறைவன் தெரிவாக நினைத்து அல்லும் பகலும் அயராது உழைத்தேன். ஊர் மக்களும், இளைஞர்களும்,

தலைவர் எடுக்கும் முயற்சிகளில் ஒரு மனதாக எந்த வேற்றுமையுமின்றி அயராது ஈடுபட்டனர்.

வீரபத்திரர் கோயில் கும்பாபிஷேக நிகழ்வில் மயிலைக் கந்தனுக்கும், மகமாரி அம்மைக்கும், நாகராஜன் தெய்வத்திற்கும் கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்று மயிலைக் கந்தன் அடியார்களுக்கும், பலநாடுகளிலும் இருக்கும் எங்கள் உறவுகளுக்கும் தெரிவிக்குமாறு கூறினேன். இதன் பலனாக 23.03.2001 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. பாலஸ்தாபனம் செய்து ஒரு வருடத்திற் கும்பாபிஷேகம் நடைபெற வேண்டும் என்பது பொதுவிதி. இதற்கு முருகனிடம் வரம் கேட்டேன் "முருகா, நீ ஒரு வருடத்தில் உன்னுடைய கருவறைக்குச் சென்று அருள்புரிய வேண்டும்" என்று வேண்ட மனம் மகிழக் கேட்டவரம் அருளினான். ஆலயத்தில் நடைபெறும் கந்தசஷ்டி விரதத்தில் மூன்று (3) வருடங்கள், மிளகு உட்கொண்டு இறைவன் ஆலயத்தில் இருப்பது என்று எண்ணினேன். அதன்படி முருகன் வரம் தந்தான். இவ்வாறாக இறைவன் அருளினால் 23.03.2002 இல் பஞ்சகுண்டபக்ஷ கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்று ஆலயம் புதுப்பொலிவு பெற்றது. இந்து கலாசார அமைச்சினால் இவ்வாலயத் திருப்பணிக்கு நிதி கிடைத்தது. எமது முன்னோர்களுடைய காலத்திலிருந்து இறைவன் கட்டுத்தேரிலேயே வீதிஉலா வந்ததனால், புதிய சித்திரத்தேர் செய்யவேண்டும் என்ற எண்ணம் 2001இல் ஏற்பட்டது. இதற்கென ஒரு சபையைத் தெரிவுசெய்து கடிதம் அனுப்ப, பின்னர் தேர் திருப்பணிச் சபையைத் தொடங்கினோம்.

எங்கள் முருகன் அற்புதமான கண்கண்ட தெய்வம் எனப் பல பெயர்களைக்கொண்ட இறைவன் தெய்வப் பொலிவுடன் தேரேறி அருள்பாலிக்கும் நாள் எம் வாழ்நாளில் பொன்னான நாளாகும். இந்தப் பொன்னான நாளுக்கு வழி சமைத்த பரிபாலனசபை உறுப்பினர், தேர், திருப்பணிச்சபையினர் வெளிநாட்டு அங்கத்தவர்களுக்கும் இனி உதவிபுரிய இருக்கின்றவர்களுக்கும் முருகன் அருளும் ஆசியும் கிடைக்க வேண்டும் என இறைஞ்சிக் கேட்கின்றேன்.

**இளைஞர் பங்களிப்பு**

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். அவர்களை வழிநடத்தும் பொறுப்புப் பெற்றோர், ஆசிரியர்கள் போன்றவர்களோடு சமயம் சார்ந்த அமைப்பும் முக்கியமானது. அந்த வகையில் மயிலியற்புலம் கந்தசுவாமி கோயிற் பரிபாலனசபை இளைஞர்களுடைய வளர்ச்சியிற் பங்காற்றுகின்றது. அதற்குச் சான்றாகப் பல ஆண்டுகளாக எமது இளைஞர்களுக்கு வடக்கு வீதியை விளையாட்டு வைபவங்களை

நடத்துவதற்கு அனுமதி அளித்தமை எமது மூத்த உறுப்பினர்கள் செய்த ஒரு பெரும் பணியாகும். இதன் காரணமாக ஆலயச் செயற்பாடுகள் அனைத்திலும் இவர்களுடைய பங்களிப்பினைக் காணலாம். இவ் இளைஞர் அணியினராலும் சில்வஸ்ரார் என்னும் விளையாட்டுக் கழகத்தினை அமைத்துப் பல ஆண்டுகளாக ஆலய வளர்ச்சிப் பணியில் பெரிதும் பங்காற்றுகின்றது. இதற்குச் சான்றாக ஆலய புனர்நிர்மாணம் தேர்த்திருப்பணி போன்றவற்றோடு கிராம மக்களுடைய பணி, தேவைகளை நிறைவேற்றுவதிலும் பெரிதும் பங்காற்றுகின்றது. அத்துடன் ஆலய மகோற்சவ காலப் பகுதியில் தண்ணீர்ப் பந்தல் சேவை நடாத்தல் போன்ற பணியிலும் ஈடுபட்டு வருகின்றது.

அத்துடன் எமது சகோதர ஊரான குலனையூர் இளைஞர்களும் தற்போது பலசிரமதானப் பணிகளிற் பங்காற்றி வருகின்றனர். இவர்களுடைய கழகமாக கலைவாணி விளையாட்டுக் கழகம் விளங்குகின்றது. இளைஞர் அணிகள் யாவற்றிற்கும் மயிலைக் கந்தன் அருளும் ஆசியும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

அதேபோல இம்மலரை மலரச் செய்ய வேண்டுமெனப் பெரும் அவாகொண்டு பரிபாலனசபைத் தலைவர் உட்பட ஒரு மலர்க்குழுவை அமைத்து இதனைத் தயாரித்துள்ளதோடு இம்மலரிற்கு ஆசியுரைகள், கட்டுரைகள் தந்தவர்களுக்கும் முழு மூச்சாகச் செய்யப்பட்ட மலர்க் குழுவிற்கும் கந்தன் அருளும் ஆசியும் கிடைக்க வேண்டுமெனக் கூறுவதோடு, இச்சித்திரத்தேரை அமைத்துத் தந்த சிற்பாசாரியார் திரு.செ.பாலச்சந்திரன் அவர்களிற்கும் பரிபாலனசபை சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இனிய நன்னாளில் கந்தன் திருவடிகளை வணங்கி நிற்போமாக

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்"

கந்தசாமி நாகஜெயகுமார்
ஆலய பரிபாலனசபைத் தலைவர்.

# தேர் திருப்பணிச் சபைத் தலைவரின் செய்தி

எல்லாம் வல்ல அராலி வடக்கு மயிலியற்புல முருகப் பெருமான் திருவருள் கடாட்சத்தால் அந்திரமரபு அறுகோண பன்னிரண்டு வாசலுடையதும் முப்பத்தொரு அடி ஒன்பது அங்குல உயரமுடைய சிற்பத்தேரின் பெரும்பணி நிறைவேறியுள்ளது. எம்முன்னோர்களின் நீண்டகால கனவு தற்போதுதான் செயற்திட்டமாக நிறைவேறி உள்ளது. தற்போதய இக்கட்டான கால சூழலிலும் இவ்வேலைகள் சிறப்புற முடிவுற்றமையானது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

*நங்கடம்பனை பெற்றவள் பங்கினன்*
*தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்*
*தன் கடன்னடி யேனையுந் தாங்குதல்*
*என் கடன் பணி செய்து கிடப்பதே*

என்பதற்கிணங்க இப்பணியை முருகனே தோன்றாத் துணையாக நின்று வழிகாட்டியமையால் எந்தவித குற்றம் குறையும் இன்றி நிறைவேற்ற முடிந்தது. இப்புதிய சிற்பத்தேர் திருப்பணிச்சபைத் தலைவராக இப்பணியை நிறைவேற்ற இறையருள் கிடைத்தமை பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

இப்பாரிய திருப்பணி வெளிநாட்டில் உள்ள எம் அங்கத்தவர்கள், அடியவர்கள், உறவுகள் மீது வைத்த நம்பிக்கையிலேயே தொடங்கப்பட்டதாகும். இவ் அன்பர்கள் மனமுவந்தளித்த பெருந்தொகை பணமே மயிலை பெருமானின் இப்பாரிய பணி நிறைவேறக் காரணமாக அமைந்தது. இவ்வன்பர்கள் உடலால் வெளிநாட்டில் இருந்தாலும் உள்ளத்து உணர்வுகளில் மயிலியப்புல முருகன் குடிகொண்டு உள்ளான் என்பது உறுதி. இச்சிற்பத்தேர் ஓடும் காட்சியை வெளிநாட்டில் இருந்தாலும் உள்ளுணர்சியால் உணர்வார்களாக. எமது நாட்டில் உள்ளவர்களும் வெளிநாட்டில் உள்ளவர்களும் மயிலியப்புல முருகன் அருளால் எல்லாப் பேறும்பெற்று உயர்வார்கள் என்பதில் ஐயம் இல்லை.

சிற்பத்தேர் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை அந்தச் அந்த காலங்களில் முருகன் கனவில் தோன்றி வழிகாட்டிய அளவில்லாத அற்புதங் களாலேயே இப்பணி இனிதே நிறைவேறியுள்ளது.

மருத மரங்கள், முதிரை மரங்கள் வாங்கிய வகையால் பல இலட்சம் ரூபாவரை மிச்சப்படுத்த முடிந்தமை. தேருக்கான அச்சு கொழும்பில் இருந்து சிரமமின்றி

கொண்டுவர முடிந்தமை, 2006ஆம் ஆண்டு காலகட்டத்தில் நாட்டுச் சூழ்நிலை காரணமாக பணத்தட்டுப்பாடு உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக வேலைகள் தொடர்ந்து செய்ய முடியாதநிலை ஏற்பட்டது. அரியப்பட்ட மரங்கள் அனைத்தும் பாதுகாப்பின்றி வெளியிலேயே அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது பெரும் கவலையாக இருந்தது. "வேலையை இடைநிறுத்தாது கலசமட்டம் வரை வேலையைச் செய் எந்தப் பிரச்சனையும் இங்கு ஏற்படாது" என கனவில் அருட்காட்சி தந்து திருவாக்குக் கூறினார். இச்சம்பவத்தை திருப்பணிச்சபை/ பரிபாலனசபையில் தெரிவிக்கப்பட்டது. முருகன் அருள்வாக்கு அப்படியாயின் தொடர்ந்து வேலைகளை செய்யும்படி அனுமதி அளித்தனர். அந்தக் காலகட்டத்தில் பல அடியவர்கள் எட்டுலட்சத்திற்கு மேற்பட்ட தொகையை எந்த பலனும் எதிர்பார்க்காமல் கைமாறாகத் தந்தமையால் வேலைகளை இடைநிறுத்தாது செய்வித்தோம். இவ்வருட உற்சவத்திற்கு முன் வேலையை முடிக்கும்படி திரும்பவும் திருவாக்குக் கிடைத்தது. இச்செய்தியும் தேர்த்திருப்பணிசபை/ பரிபாலனசபைக்கு தெரியப்படுத்தப்பட்டது. பணக் கஸ்ரம் இருந்த போதும் முருகனே அனைத்தும் தருவார் எனக் கூறப்பட்டு வேலை தொடங்கப்பட்டது. பெரும் திருவருட்கடாட்சத்தால் இவ்வேலை இனிதே நிறைவேறியது அவனைவருக்கும் மிக உள பூரிப்பைத் தருகின்றது. மேற்படி சம்பவங்கள் எல்லாம் திருப்பணிச்சபை/பரிபாலனசபை அறிக்கைகளில் ஆவணப் படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இறைவனையும் இயற்கையும், தன்னையும் இணைக்கும் இந்துசமய, தத்துவ, வாழ்வியல் வழிபாட்டுச் சிந்தனை வடிவமாக தேர்த்திருவிழா அமைகின்றது. தேர் ஆனது இப்பிரபஞ்சத்தை வெளிப்படுத்தும் ஒரு குறியீடாகும். தேரினூடாக ஒரு சிற்பி இயற்கையை வெளிக்கொண்டுவர முயல்கின்றான். இக்கலைவடிவை சிற்பவடிவில் வெளிக்கொண்டுவரும் சிற்பிகள் போற்றுதற்கு உரியவர்கள்.

பலரும் போற்றக்கூடிய வகையில் கலைநுணுக்கங்களுடனும், யதார்த்தமாகவும் கலைத்திறனுடன் வெளிப்படுத்தி, புதிய சிற்பத்தேரை உருவாக்கித்தந்த சிற்பாசிரியர் திரு.செல்லையா பாலச்சந்திரனும் அவரது உதவியாளர்களும் அளப்பரிய பங்காற்றினர். ஆறுமுக சுவாமிக்கு ஏற்றவகையில் அந்திரமரபு அறுகோண பன்னிரண்டு வாசல் உடைய தேர் எமது கோவிலுக்கு நிர்மானித்தது சிறப்பம்சமாகும். சிற்பாசிரியருக்கு உதவிய இரும்புவேலை, பித்தளை வேலை, கலசவேலை, கடைச்சல் வேலை, கட்டுவேலை, போன்ற பல வேலைகள் அமைத்தவர்களுக்கும், தேருக்கான சிறப்பான முறையில் வர்ணபூச்சுவேலை செய்த

விசிந்தன் ஆட்ஸ் திருநெல்வேலி குழுவினருக்கும் எமது தேர்த்திருப்பணி சார்பாக எமது உள்ளம் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தரமான மரங்களையும், சிறப்பான முறையில் மரங்களை அரிவு செய்து தந்த வகையிலும், தேவைகளுக்கேற்பவும் குறைந்த விலையிலும், உடனுக்குடன் வழங்கிய சங்கானை அம்பாள் அரிவு ஆலை உரிமையாளர் திரு.இ.ஜெயகாந்தன் அவர்களின் சேவை பெரிதும் உதவியாக இருந்தது. அவரது பணி போற்றற்குரியதும் அவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இப்பணி சிறப்புற நிறைவேற உதவிய செயலாளர் திரு.கந்தவனம், செல்வநாயகம், முன்னைய பொருளாளர் திரு.முருகேசு பத்மநாதசிவம் தற்போதய பொருளாளர் திரு.குமாரசாமி ஞானகுமார் அவர்களும், ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்கள் பரிபாலனசபை முன்னைய நிர்வாகத்தினர்களும் தற்போதைய நிர்வாகத்தினர்கள், அங்கத்தவர்கள் பழைய அங்கத்தவர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் தங்கள் சக்திக்கேற்றவகையில் பண உதவி அள்ளி வழங்கிய வெளிநாட்டு அங்கத்தவர் களுக்கும், உள்ளூர் அங்கத்தவர்களுக்கும் இலுப்பை, மஞ்சமுண்ணா, பனை மரங்கள் போன்றவற்றை வழங்கியவர்களுக்கும், குறிப்பாக வேலைகள் தொடங்கிய காலம் முதல் இறுதிவரை முழுமூச்சாக சரீர தொண்டாற்றி வந்துள்ள சில்வாஸ்ராஸ் கழக உறுப்பினர்களின் சேவையும் சிற்சில தொண்டாற்றிய குலனையூர் கலைவாணி விழையாட்டுக்கழகத்தினருக்கும், ஒத்த கருத்துக்களையும் எதிர்க்கருத்துக்களையும் கூறி சரியான முறையில் நிர்வாகத்தை வழி நடத்தி, இப்பணி நிறைவேற காரணமாக அமைந்த அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**Dr.செல்லத்துரை பரமசிவம்பிள்ளை J.P,**
**தலைவர், தேர்த்திருப்பணிச்சபை.**

# ஆலய வரலாறு

உற்றுமை சேர்வது மெய்யினையே
யுணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே
யமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே
பிரமபுரத்தை யுகந்தனையே

சிவபூமி என அழைக்கப்படும் ஈழநாட்டின் வடபால் யாழ்ப்பாண நகரிலிருந்து வடக்கே எட்டுக் கிலோ மீற்றர் தொலைவில் வழுக்கையாற்றின் சங்கமத்துறைக்கு வடக்காக அராலி வடக்கு என்னும் அழகிய சிற்றூர் அமைந்துள்ளது. அது மருதமும், நெய்தலும் இணைந்த வளநிலமாகும். அதன் நாலாபுறமும் வயல் நிலங்கள் பரந்துள்ளன. கடலும், சிற்றாறும், குளங்களும், பனந்தோப்புக்களும் அதன் வனப்பிற்கும் வாழ்விற்கும் ஆதாரங் களாகும். சைவபாரம்பரியங்கள் நிறைந்த இவ்வூரில் சிவன், அம்மன், பிள்ளையார், முருகன், வைரவர் எனத் தெய்வங்கள் கோயில்களிற் குடிகொண்டு அருள்பாலித்து, இவ்வூர் மக்களின் சமய ஆன்மீக வாழ்வுக்கு வழித்துணையாய் விளங்கி வருகின்றன. இத்தலங்களில் தலையாயதாக **மயிலியற்புலக் கந்தசுவாமி கோயில்** விளங்குகின்றது.

இந்து சமய வரலாற்றில் கோயில்கள் சமய, சமூக வாழ்வின் நிலைக்களங்களாகும். அவை காலம் காலமாக நிலவிவரும் பண் பாட்டுக் கூறுகளைக்காத்து, நிலைநிறுத்தி அடுத்த சந்ததிக்குக் கொடுக்கும் தலையாய பணியை ஆற்றிவருகின்றன. ஈழ மணித்திரு நாட்டின் வட பாகம் அன்னியர் ஆட்சிக் காலத்தில் மதம், மொழி, கல்வி, நிர்வாகம் போன்ற ஆட்சி அதிகாரத்தின் கூறுகள் மூலம் பெரும் மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. ஏறக்குறைய 450 வருடங்கள் ஐரோப்பியர் ஆட்சியில் இருந்தபோதும், அவர்களின் ஆட்சி அதிகாரத்தின் மூலம் மேற்கொண்ட மதமாற்றம் யாழ்ப்பாணத்தில் அராலி வாழ் மக்களிடம் குறிப்பாக இத்திருக்கூட்டத்திடம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என்பது நோக்கப்பாலது. வட்டுக்கோட்டை கிறிஸ்த்தவக் கல்விச் செல்வாக்கு மிக்க பிரதேசமாகும். வலுமிக்க அன்னிய சக்திகளின் பிடிக்குள் அகப்படாது தம் பண்பாட்டின் வேர்களை கட்டிக்காத்து காலம்காலமாக நிலைபெற்ற மண்ணின் மைந்தர்களான ஒரு குருகுலத்தின் வாழ்வியல் கோலங்களின் வெளிப்பாடாக மயிலியற்புலக் கந்தன் ஆலய வரலாறு அமை கின்றது.

நம்முன்னோர் வழியில் வாழையடி வாழை என வந்த முருக அடியார் கூட்டத்தின் சமயவாழ்வின் ஒரு அங்கமாக இத்திருக் கோயில் தோற்றம் பெற்றது. ஒரு வகையில் இத்திருக் கோயில் அராலி வடக்கு, கொட்டயா

வத்தை முருக மூர்த்தி கோயிலின் வரலாற்றுடன் தொடர்புபட்டது. அக்கோயில் நிர்வாகத்தின் சமயப் பொறுமை யற்ற, நீதியற்ற செயற் பாடுகளால் தமக்கிருந்த உரிமைகளை விட்டுக் கொடுத்து மயிலியற் புலத்தில் தமக்கென இத்திருக்கோயிலை நம்முன்னோர் 1864 ஆம் ஆண்டுவரையில் நிறுவிக் கொண்டனர். இப்பிணக்குகள் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் நடைபெற்றதாக அறிய முடிகின்றது.

இத்திருக்கோயில், எம் மக்களின் குலதெய்வம் எனப்போற்றித் துதிக்கப்படும் **மகமாரி அம்மை** யின் கோயில் நிர்மானத்துடன் தொடங்குகின் றது. இத்தொடக்கம் சக்தி உபாசகரான **கந்தர் கணபதியார் கதிரேசு** அவர்களின் சந்ததி வழிவந்ததாகும். அப்பெரியாரின் மயிலியற்புல வளவில் ஒருசிறு குடிலில் அம்மை குடிகொண் டாள். பின் 1928 ஆம் ஆண்டு மயிலியற்புல வளவு, கணபதியார் கதிரேசு அவர்களால் தர்ம சாதனம் செய்யப்பட்டுள்ளது. சக்தி வழிபாட்டு டன் தொடர்புடைய மரபு வழிப்பட்ட வழிபாட்டு நெறி ஒன்றின் கூறுகளை எம் முன்னோர் வாழ்விற் காணமுடிகின்றது. இப்பிரதேசத்தில் அருள்பாலிக்கும் அம்மன் கோயில்களின் தோற்றம் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் இம்மரபை உறுதி செய்வதாக உள்ளன.

முருகவழிபாடு கதிர்காமம், செல்வச்சந்நிதி, நல்லூர் தொடர்பால் ஏற்பட்டதாகும். பண்டு தொட்டு இன்றுவரை இத்திருக்கூட்டம் முருகன் மீது கொண்ட ஆறாக்காதலை அவர்கள் இத்தலங்களுக்குக் காலம்தோறும் மேற் கொண்டுவரும் தலயாத்திரைகளால் அறிய முடிகின்றது.

இத்திருக்கோயிலில் இரண்டு வழிபாட்டு முறைகள் சங்கமிக்கின்றன. கோயில் அமைப்பும், வழிபாட்டு முறைகளும் இதற்குச்சான்று பகர்கின்றன. ஒன்று மரபின் வழி கிராமிய வழிபாட்டுக்கூறுகள் என மகமாரி அம்மன், வீரபத்திரர் கோயில்களின் அமைப்பும், வழி பாட்டு மரபுகளும் காணப்படுகின்றன. குறிப்பாக குளிர்த்தி, வேள்வி போன்ற விசேட தினங்களில் மரபு வழிப்பட்ட வழிபாட்டு முறைகளை அடை யாளம் காணலாம். அடுத்ததாக ஆகமமுறைப் படி அமைந்த முருகப் பெருமானும் ஏனைய பரிவார மூர்த்தங்களுக்குமான கோயிலும் வழிபாட்டு முறைகளும் அமைந்துள்ளன.

இக்கிராம மக்களின் சமய, ஆன்மீகவாழ்வுக்கு மாத்திரமன்றி, சமூகச் செயற்பாடுகளுக்கும் வழிகாட்டும் ஒரு நிர்வாக மையமாக இத் தலத்தின் பொதுச்சபை காணப்படுகின்றது. 1864 ஆம் ஆண்டு வரையில் முப்பத்தொன்பது அங்கத்தவர்களைக் கொண்டதாக பொதுச் சபை அமைந்தது. இம்முன்னோரின் ஆண்வழிச் சந்ததியினரும், பெண்வழி உறவினரும் காலப் போக்கில் பொதுச்சபை அங்கத்தவராயினர். நம் முன்னோரின் சற்றும் நெகிழ்ச்சியற்ற நிர்வாகத் திறன் அக்காலம் தொடங்கி இன்றுவரையுள்ள கோயில் ஆவணங்களால் நிரூபணமாகின்றது. சட்டதிட்டங்களும் வழமைகளும், மரபுகளும் மிகவும் இறுக்கமாகப் பேணப்பட்டு வந்துள்ளன. மிகச்சிறந்த கட்டுக்கோப்புடன் சற்றும் நெகிழ்ச் சியற்ற நிர்வாகச் செயற்பாடுகள் கொண்டதாக இவ் ஆலயத்தின் பரிபாலனசபை காலம் காலமாக நிலைபெற்று வந்துள்ளது. இக்கடுமை யான கட்டுப்பாடுகளுக்கு அவர்கள் பெற்ற கசப்பான அனுபவங்களே காரணமாகும். ஆரம்ப காலத்தில் நம்பிக்கையையும் மரபுகளையும் அடிப்படையாகக் கொண்ட நிர்வாகச் செயற் பாடுகள் 1919 ஆம் ஆண்டுவரை வழக்கில் இருந்தன. அவ்வாண்டிலிருந்து கணக்கு வழக்குகள் ஆவண வடிவம் பெற்றன. 1933 ஆம் ஆண்டு வரையில் ஆலயச் செயற்பாடுகள் அனைத்தும் நிர்வாகமயப்பட்டது. இக்காலத்தில்

பொதுச்சபை எண்பது அங்கத்தவர்களைக் கொண்டு விளங்கியது. இச்சபை குறிப்பாக 1924 ஆம் ஆண்டில் குடவோலை (திருவுளச் சீட்டு) முறையில் நிர்வாக சபைத்தெரிவு செய்யப்பட்டதற்கான ஆவணச்சான்றுகள் உள்ளன. இறைபக்தியும், அர்ப்பணிப்பும், தாம்கொண்ட கொள்கையிலிருந்து சற்றும் விலகாத மனஉறுதியும் கொண்ட அவ் **வீரக்கிழவர்களின்** செயற்றிறனே இன்று இவ்ஆலயம் பல்திறன்பெற்று ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றக் காரண மாகும். இம் மெய்அடியவர்களைப் போற்றுவது எம் தலையாய கடன். அப்பெரியார்கள் அக் காலத்தில் தம் உழைப்பில் பத்தில் ஒருபங்கை கோயிலுக்குச் சந்தாவாக வளங்கியுள்ளனர். அதன்மூலம் கோயிற் செயற்பாடுகளை ஆற்றியதுடன், அராலி வடக்கு சனசமூக நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அராலி வடக்கு சந்தை ஆகியவற்றின் தோற் றத்திற்கும் அவ்ஆதனங்கள் கோயிற் சொத்துக்களாவதற்கும் காரணகர்த்தாக்களா யினர்.

### அன்னையின் அருளாட்சி

மயிலியப்புலக் கிளவி, அம்மாள் ஆச்சி என அழைக்கப்பட்டுவரும் அன்னையின் அருளாட்சி அராலியிலும் அயலூர்களிலும், பரவியுள்ளது. அவ் அன்னையின் அற்புதங்கள் இன்றும் பேசப்பட்டு வருகின்றன. கண்கண்ட தெய்வ மாகப் போற்றப்பட்ட இவ் அன்னை ஊர் மக்களின் சமூக சமயச் செயற்பாடுகளுக்கு ஆதாரமானவள். அவள் பெரியம்மைக்குரிய அதிதேவதை எனவும், திருக்கனற்பேரிலே கோயிலிற் கொண்டிருக்கும் அன்னை எனவும் மதுரைப்பேரகராதி பேசுகின்றது.

முருகனுக்கான ஆகமவழிப்பட்ட வழிபாட்டு முறைகள் தொடக்க காலத்தில் இருந்து வழக்கில் இருந்தபோதும், ஆகமமுறை சாராத இவ் அன்னையின் வழிபாட்டு முறையும் தொடர்ந்தும் இன்றுவரை நடைமுறையிலுள் ளதை அவதானிக்கலாம். படிப்படியாக இன்று ஆகம முறைப்பட்ட வழிபாட்டு மரபுப்படி இவ் அன்னையின் நாளாந்த பூசைகள் நடைபெற்ற போதும், வருடம்தோறும் தை மாதக் கடைசி வெள்ளிக்கிழமை நடுநிசி தொடங்கி அடுத்த நாள் சனிக்கிழமை நடைபெறும் குளிர்த்தி அன்றும், ஆனி மாதத்தில் கொடி யேற்றி எட்டாம் நாள் சனிக்கிழமை நடைபெறும் வேள்வி அல்லது பொங்கல் அன்றும் மரபுவழிப்பட்ட வழி பாட்டின் கூறுகளை அடையாளம் காணலாம்.

கிராமிய வழிபாட்டுமுறை என இன்று குறிக்கப் படும் வழிபாட்டு மரபு ஒன்றைச் சங்க இலக்கியங் களிற் காணலாம். அம் மரபு வழிப்பட்ட வழிபாட்டு முறை ஒன்றின் எச்சமாக மகமாரி அம்மையின் வழிபாட்டு முறைகள் அமைந்திருக்கின்றன. பண்டைத் தொன்மதத் தின் தொடர்பறாத ஒரு மரபு வழி மக்கள் கூட்டத்தின் அடையாளமாக இதைக் காணலாம். தெய்வத்திற்கும் வழிபடுப வனுக்கும் இடையிலான நெருக்கம் இவ்வழி பாட்டின் சிறப்பம்சமாகும்.

பண்டைக் காலத்திலிருந்தே உயிர்ப்பலியிடும் வழக்கம் நிலவி வந்தது. இன்றும் சில கோயில்களில் இவ்வழக்கத்தைக் காணலாம். இவ் வழக்கம் மகமாரியம்மன் கோயிலில் 1951 ஆம் ஆண்டுவரை இருந்து. 1950 ஆம் ஆண்டின் பின் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டமை ஆவணங்களால் அறியமுடிகின்றது.

### மயிலியற்புலம் கந்தசுவாமியார் கோயில்

கடம்பும் ஆலும் அரசும் வேம்பும் சூழ்ந்த சோலையில் மயிலை முருகன் தன் தேவியருடன் உறைகின்றான். மயிலியற்புல முருகன் ஆலயம், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானை மூலமூர்த்தியாகக் கொண்டு பரிவார மூர்த்தங் களான விநாயகர், தட்சணாமூர்த்தி, ஸ்ரீதேவி,

பூதேவி சமேத ஸ்ரீ மகாவிஷ்ணு, காவற்கடவுளான வைரவரையும், நவக்கிரகங்களையும் தன்னகத்தே கொண்டு சுற்று மதிலுக்குள் ஆகமமுறையில் அமைந்த திருக்கோயிலாகும். மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புப்பெற்ற இவ்வாலய மூர்த்தி வேண்டுவார் வேண்டுவதை அருளும் வள்ளல்.

ஆரம்பகாலத்தில் சிறுகுடிலிற் குடிகொண்ட ஐயனுக்கு 1888 ஆம் ஆண்டில் முருகைக் (சுண்ணக்) கல்லால் ஆன மூலஸ்த்தானத்தையும், அர்த்தமண்டபத்தையும், மகாமண்டபத்தையும் கொண்ட கோயில் அமைக்கப்பட்டது. பின் 1955ஆம் ஆண்டு கற்பக்கிரகம் அந்தராணம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் என்பன வைரக்கல்லாலும்(பொளிகல்), ஏனைய மண்டபங்களும், வைரவர், யாகசாலை, வசந்த மண்டபம், மடைப்பள்ளி, குரு அறை, களஞ்சிய அறை, சுற்று மதில் என்பனவும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பின் 1988 ஆம் ஆண்டிலும் 2002 ஆம் ஆண்டிலும் புனருத்தாரண மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. அத்துடன் 1996 ஆம் ஆண்டிலும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இன்று பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கும் ஆலயத்தின் படிப்படியான வளர்ச்சிக்கு எம்மக்களின் உழைப்பும், கொடைத்திறனும், சமயப்பற்றும் ஆதாரங்களாகும்.

### வீரபத்திரர் ஆலயம்

கிராமியவழிபாட்டின் வழிக் கோயில்கொண்ட பெருமான் மக்கள் துயர் தீர்க்கும் அருமருந்தாவார், கண்கண்ட தெய்வமாக வீற்றிருக்கும் வீரபத்திரர், மகமாரி அம்மன் கோயிலுக்கும், முருகன் கோயிலுக்கும் நடுவிற் குடிகொண்டுள்ளார். அம்மையின் வேள்வி நடைபெற்று ஏழாம் நாள் விளக்கு வைக்கப்பட்டுப் பதினைந்தாம் நாள் வீரபத்திரர் மடை நடை பெறுவது மரபு. நாளாந்தப்பூசைகள் ஆகமமுறைப்படி நடைபெற்றுவருகின்றன.

### நாகராசர் ஆலயம்

மகமாரியம்மைக்கு எதிரில் அன்னையை நோக்கியபடி அரசமரத்து நிழலில் நாகராசர் அமர்ந்துள்ளார். இவ் ஆலயத்தின் தோற்றம் நயினை நாகபூஷணி அம்பாள் மீது எம் பெரியவர் ஒருவர் கொண்ட அன்பின் வெளிப்பாடாகும்.

### புராணபடலம்

இந்திரராகி பார்மேல்
இன்பமுற்றினிது மேவிச்
சிந்தையில் நினைத்த முற்றிச்
சிவகதியதனிற் சேர்வார்
அந்தமிலவுணர் தங்கள்
அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந்தன்னைக்
காதலித் தோதுவோரே

என்பது கந்தபுராண நூற்பயன். கந்தபுராணக் கதை மரபு யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலத்தில் இருந்து தொடர்ந்துவரும் ஒரு மரபு. இதனால் யாழ்ப்பாணம் கந்தபுராணக் கலாச்சாரம் தழுவியது என அறிஞர்கள் அடையாளம் காண்பர்.

இக் கோயிலில் ஆரம்பகாலத்தில் இருந்து இன்றுவரை கந்தபுராணத்தை ஒதிப் பயன் சொல்லுதலும், கேட்பதும், ஷஷ்டி விரதம் இருப்பதும் நடைபெற்று வருகின்றன. அத்துடன் சித்திரை மாதப் பூரணையன்று சித்திர புத்திரனார் கதை படித்தலும், மார்கழித் திருவாதிரை காலத்தில் மாணிக்கவாசகர் புராணம் ஒதுதல் என்பன நடைபெற்று வருகின்றன.

### விழாக்களும், விரதங்களும், பண்டிகைகளும்.

இவ்வாலயத்தில் அருள்பாலிக்கும் பிள்ளையார், வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமானுக்கும், ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ மாக விஷ்ணு, தட்சணாமூர்த்தி, வைரவர், நவக்கிரகங்களும், மகாமாரியம்மைக்கும்,


பொதுச்சபை


மலர்க்குழு


தேர் திருப்பணிச் சபை


நிர்வாகசபை


கும்பாபிஷேக
நிகழ்வுகள்
2002







வீரபத்திரருக்கும், நாகராசருக்கும் உரிய விழாக்களும், விரதங்களும் எடுக்கப்படு கின்றன.

முருகனுக்குப் பன்னிரண்டு நாட்கள் நடை பெறும் கொடியேற்றத் திருவிழாவும் சங்காபி ஷேகமும் வருடாந்தம் நடைபெற்று வருகின்றன. அம்மைக்கான கொடியேற்றத் துடனான எட்டாம் நாள் வேள்வியும், குளிர்த்தியும், வீரபத்திர மடையும் அத்தகையனவாகும். கார்த்திகைத் தீபமும், அதனோடிணைந்த கப்பல் திருவிழாவும், தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி விரதங் களும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. பிள்ளை யார் சதுர்த்தியும், முருகனின் ஷஷ்டி என்னும் திதிக்குரிய விரதங்களும், அம்மையின் கேதாரகௌரி விரதமும் பூசைகளும் விசேட மாக மெய்யடியார்களால் கோயில் விழாக்களு டன் நோக்கப்பட்டு வருகின்றன. நடராசர் உற்சவம், நால்வர் குரு பூசைகளும் நடைபெறு கின்றன. இவற்றைவிடத் தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி என்பன சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவரும் பண்டிகைகளாகும்.

## பஜனைக் குழு

சமய உணர்வூட்டுவதில் எளிய வடிவமாக இறைவன் புகழ்பாடுதல் அமைகின்றது. சிறார்கள் முதல் பெரியோர்வரை அவர்களை சமய வாழ்வில் வழிப்படுத்துவதிற் பஜனைக் குழுவின் பங்கு குறிப்பிடக்கூடியதாகும். வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் சிறார் களும், பெரியார்களும் பஜனைப் பாடல்களைப் பாடுவது வழக்கமாக இருந்தது. இன்றைய நாட்டுச் சூழ்நிலையில் இது நடைபெறுவ தில்லை. இன்று விழாக்காலங்களில் பஜனை பாடப் பெறுவதுடன், குறிப்பாக மார்கழி மாதத் திருவாதிரை நாளில் மாணிக்கவாசகரின் திருவுருவுடன் திருவெம்பாவைப் பாடல்கள் ஊர் வீதிகளில் பாடிவரும் அடியார் திருக்கூட்டத்தின் காட்சியும் அதன் பக்தி வெளிப்பாடும் கண்கொள்ளாக் காட்சியாகும். இப் பஜனைக் குழு நல்லூர், செல்வச்சந்நிதி, நயினை நாகம்மாள் கோயில்களின் தேர்த் திருவிழாக் காலத்தில் பஜனையுடன் சென்ற காலங்களும் உண்டு.

## அடியவர்கள் பணி

மனம் மொழி மெய்த் தூய்மை உடைய பெரியார்கள் பலரும் இவ் ஆலயத்தை அண்டி வாழ்ந்து இறைவன் திருவடி சேர்ந்தார்கள். அவர்களது எளிமையான தூய சமய வாழ்வுக்கு இக்குல தெய்வங்கள் ஆதாரமாயின. ஆன்மீக நெறி நின்று சமயவாழ்வு வாழ்ந்த பெரியவர் களைத் தவிர மக்களைச் சமயவழிப்படுத்திய பெரியவர்களின் சேவையும் குறிப்பிடக்கூடிய வையாகும். அவர்கள் பணியில் புராணபடலம் குறிப்பிடக்கூடியதாகும். குறிப்பாக ஆசிரியர் களும் மற்றும் பெரியவர்களும் கந்தஷஷ்டி காலத்தில் கந்தபுராணக்கதை ஓதிப் பயன் சொல்வதைத் தம் வாழ்நாட் பணியாக மேற்கொண்டனர். இவற்றை விட இத்தெய்வங் கள்மீது நம் முன்னோர் பாடிய ஏட்டில் இருந்த பாடல்களைத் தொகுத்ததுடன், முருகப் பெருமானுக்கும், அம்மைக்கும், பக்திப்பாடல் களையும் பாடியுள்ளதைக் காணலாம்.

## தேர்த் திருப்பணி

எல்லாம் வல்ல முருகப் பெருமானின் அருளாலும் அன்னையின் ஆசியாலும் எம் முன்னோர் வாழ்நாட் கனவு பலித்தது. அவர்கள் கொண்ட திண்ணிய எண்ணம் இன்று செயல்

வடிவம் பெற்றது. மெய்யடியவர்களின் கனவை நனவாக்க முன்னின்றுழைத்த இறையன்பர்கள் போற்றுதற்குரியவர்கள்.

பல்வேறு தத்துவங்களைக் கொண்ட தேரைப் படைப்பவர்கள் தேவசித்திகர்கள் என அழைக் கப்படுகின்றனர். இத்திருப்பணி வேலைகளைத் தற்போதைய நாட்டுச் சூழ்நிலையிற் பல்வேறு சிரமங்களின் மத்தியிற் குறிப்பிட்ட மூன்றுவருட காலத்தில் நிறைவுசெய்த சிற்பாச்சாரியார் திருவாளர். செ.பாலச்சந்திரன் அவர்களுக்கும், சிற்பிகளுக்கும் ஊர்மக்களதும் பொதுச் சபையினதும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் நன்றிகளும் என்றென்றும் உரியவை. அவ் அன்பர்களுக்கு மயிலை முருகனின் அருளாசி என்றும் கிடைக்கும்.

ஆயிரமாயிரமாக லட்சம் லட்சமாக இவ் இறை பணிக்கு வாரிவழங்கிய வள்ளல்களின் உயர்ந்த உள்ளம் இன்று தேராகப் புதுப்பொலிவு பெற்றுள்ளது. வெளிநாட்டு அடியவர்கள் தம் உறவுகளை மறவாது குலதெய்வத்திற்குச் செய்துள்ள தொண்டு போற்றுதற்குரியது. மயிலை முருகனதும் மகாமாரி அம்மையதும் அருளால் இவ்வன்பர்கள் வாழ்வில் எல்லா வளமும்பெற்று, உற்றார் உறவினருடன் பெருவாழ்வு வாழ்ந்து பிறவிப்பிணி அறுப்பார் களாக.

பல்வேறு இன்னல்களின் மத்தியில் இப்பெரும் இறைபணியை வழிநடாத்திய தேர்த்திருப்பணிச் சபையினரும் இக்காலத்தில் இருந்த பரிபாலன சபையினரும் ஊர்மக்களதும், பொதுச் சபையினதும் வணக்கத்திற்கும் நன்றிக்கும் உரியவர்கள். அவர்கள் எல்லா நலனும் பெற்று வாழ்வாங்கு வாழ மயிலைக் கந்தன் அருள் புரிவானாக.

இத்தேர்த்திருப்பணி மிகக்குறுகிய காலத்தில் நடைபெற்று முடிந்தமைக்கு இளைஞர்களின் ஒத்துழைப்பு பாராட்டத் தக்கதாகும். குறிப்பாக அராலி வடக்கு, சில்வஸ் விளையாட்டுக் கழகத்தினதும், குலனையூர் கலைவாணி விளையாட்டுக்கழகத்தினதும் தொண்டுகள் நன்றியுடன் பாராட்டத்தக்கன.

பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல்
காக்கின்ற பேதை கொள்கை
விரும்பும் குமரனை மெய்யன்பினால்
மெல்ல மெல்ல உள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம்
தித்தித்து அறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும்
புளித்து அறக் கைத்ததுவே.

– கந்தலரங்காரம்–

* * * * * * * * * * * * * * * * * * * * * *

## முருகன் தரிசனம்

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலாயிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே

கந்தரலங்காரம்

# ஆலய வரலாற்றில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்

- 1864ஆம் ஆண்டு மயிலியற்புலம் கந்தசுவாமியார் ஆலயம் தோற்றம் பெற்றது.
- 1864ஆம் ஆண்டு மகமாரியம்பாள், கந்தர் கணபதியார் அவர்களால் மயிலியற்புல வளவில் குடி வைக்கப்பட்டாள்.
- 1864ஆம் ஆண்டு கோயில் ஆரம்பம். புராண படலத்துடன் தொடங்கப்பட்டதாகப் பெரியோர்கள் வாக்கால் அறிய முடிகின்றது.
- 1876ஆம் ஆண்டில் மயிலியற்புல வளவுக்கு அருகில் கோயில் அமைப்பதற்கு 10 பரப்புக் காணி வாங்கப்பட்டது.
- 1888ஆம் ஆண்டு முருகன்கோவில் கர்ப்பக் கிரகம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம் என்பவை முருகைக் கற்களால் கோயில் அமைக்கப்பட்டது.
- 1919ஆம் ஆண்டு விநாயகர் ஆறுமுகம் அவர்களால் ஆலயமணி அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- 1928ஆம் ஆண்டு கந்தர் கணபதியார் கதிரேசுவின் "மயிலியற்புல வளவு"முருகன் கோவிலுக்கு தர்மசாசனம் செய்யப்பட்டது.
- 1925ஆம் ஆண்டு தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டது.
- 1933ஆம் ஆண்டு பரிபாலனசபை அமைக்கப்பட்டது.
- 1933ஆம் ஆண்டு தம்ப மண்டபமும் முன் மண்டபமும் அமைக்கப்பட்டன.
- 1945ஆம் ஆண்டு அகோர வீரபத்திரர் ஆலயம் இளையதம்பி பொன்னம்பலம் அவர்களால் மகமாரி அம்மையின் ஆணைப் படி நிர்மாணிக்கப்பட்டது.
- 1951ஆம் ஆண்டு மகமாரி அம்மன் ஆலயத்தில் மிருக பலி நிறுத்தப்பட்டது.
- 1955ஆம் ஆண்டு வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகசுவாமி ஐம்பொன்னால் அமைக்கப்பட்டது.
- 1955ஆம் ஆண்டு முருகன் கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பவை வைரக்கல்லால் (பொளிகல்) அமைக்கப்பட்டு நிறைவடைந்தது.
- 1955ஆம் ஆண்டு புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.
- 1958ஆம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டது.
- 1958ஆம் ஆண்டு சுட்டுத்தேர் நிர்மாணிக்கப்பட்டது.
- 1964ஆம் ஆண்டு திருமஞ்சனக் கிணறு 7ஆம் பூசை உபயகாரர்களால் உபயம் செய்யப்பட்டது.
- 1964ஆம் ஆண்டு உள் வீதியின் தெற்கு மண்டபம் ஆறுமுகசுவாமி வாயில்வரை அமைக்கப்பட்டது.
- 1980ஆம் ஆண்டு நாகதம்பிரான் ஆலயம் செல்லப்பா கந்தசாமி அவர்களால் அமைக்கப்பட்டது.
- 1988ஆம் ஆண்டு நவக்கிரக ஆலயம் அமைக்கப்பட்டது.
- 1983ஆம் ஆண்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.
- 1997ஆம் ஆண்டு பிராயச்சித்த கும்பாபிஷேகம் நடைபெற்றது

- 2000ஆம் ஆண்டு வீரபத்திரர் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இப்பணி தங்கராசா பரமசிவராசா அவர்களின் உபயமாகும்.
- 2002ஆம் ஆண்டு அன்னதான மடம் ஆரம்பிக்கப்பட்டது.
- 2002ஆம் ஆண்டு உள்வீதியின் மேற்கு, வடக்கு மண்டபங்கள் அமைக்கப்பட்டன.
- 2002ஆம் ஆண்டு மகமாரியம்மனுக்குக் கர்ப்பக்கிரகம், மண்டபம் என்பன அமைக்கப்பட்டன.
- 2002ஆம் ஆண்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.
- 2003ஆம் ஆண்டு அருணாசலம் தாமோதரம்பிள்ளை அவர்களால் நீர்த்தாங்கி உபயம் செய்யப்பட்டது.
- 2005ஆம் ஆண்டு ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம் முருகேசு லீலானந்தம் அவர்களாலும், அப்பாக்குட்டி வேலாயுதர் அவர்களாலும் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.
- 2005ஆம் ஆண்டு தட்சணாமூர்த்தி ஆலயம் நடராசா கலையரசன் அவர்களால் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.
- 2005ஆம் ஆண்டு முத்தையா கோகுலநாதன் அவர்களால் அடியவர்களின் உபயோகத்திற்காக நீர்த்தொட்டி, மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

05.06.2006ஆம் ஆண்டு சித்திரத்தேர் வேலைகள் தொடங்கி 19.06.2008ஆம் ஆண்டு வெள்ளோட்ட நிகழ்வு நடைபெற்றது.

150 வது வருட ஆலய வரலாற்றில் முருகன் அடியவர்களும், அன்பர்களும் காலத்திற்குக் காலம் தனித்தும், ஒருமித்தும் செய்த உபயங்களும், அன்பளிப்புகளும், செயற்றிட்டங்களும் எண்ணிலடங்கா. அவை அனைத்தையும் பட்டியலிடுவது என்பது இயலாத காரியம். இப்பட்டியலில் கோயில் வளர்ச்சியில் குறிப்பிடவேண்டிய அம்சங்கள் மாத்திரம் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனையவற்றைப் பட்டியலிட மனமிருந்தபோதும் தொகுத்து வழங்க முடியாதமைக்கு மனம் வருந்துகிறோம்.

* * * * * * * * * * * * * * * * * * * * * *

## வேலின் ஆற்றல்

தேரணி யிட்டுப் புரமெரித்தான்மகன் செங்கையில்வேற்
கூரணியிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைத்தரக்கர்
நேரணியிட்டு வளைத்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்திர லோகம் பிழைத்ததுவே.

கந்தரலங்காரம்

* * * * * * * * * * * * * * * * * * * * * *

# முறிப்பத்திரம்

[illegible]




[illegible] 4747

[illegible]

1924 [illegible]

[illegible] 3696 [illegible]

[illegible]

# மயிலியற்புல வளவு









# முறிப்பத்திரம்

(2) (11) (11)

இல. உ..

CEYLON R1

இல 3696

[illegible]

39 [illegible]

[illegible] 45 [illegible]

[illegible] 10 [illegible] 7 1/8 [illegible]

[illegible] 49 [illegible] 1876 [illegible] 5 [illegible]

[illegible] 45 [illegible]

[illegible]

[illegible] 1877 [illegible]

[illegible] 340 [illegible] 49 [illegible]

[illegible]



[illegible]

1924 [illegible]

[illegible]

M. R. GNANAMUTTU
JAFFNA.
NOTARY PUBLIC.

[illegible]

M Gnanamuttu
Notary Public



சிற்பாச்சாரியார் செல்லையா பாலச்சந்திரன்



பவளக்கால் நாட்டும் நிகழ்வு



தேர் அச்சு வைக்கும் போது



சிவாச்சாரிய சிரோன்மணி சிவஸ்ரீ ச. செல்வக்குமாரக் குருக்கள்



அடியார்கள்



தொண்டர்கள்

# தகவல் மூலங்கள்

1) அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமிகோயில் பரிபாலனசபை, அராலிவடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமியார் மகமாரியம்மன் திருவருட் பாடல்கள் 1956.
2) அராலிவடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமிகோயில் பரிபாலனசபை தொகுப்பு. அராலி வடக்கு மயிலியற்புலக் கந்தசுவாமி கோயிலின் தோற்றமும் அதன் சிறப்பியல்புகளும், 2002
3) ஆலய பரிபாலனசபை, அராலிவடக்கு, மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில் நவக்கிரக ஆலய கும்பாபிஷேக சிறப்பு மலர், 1988.
4) அமரர் கணபதிப்பிள்ளை தங்கராசா அவர்களின் சிவப்பேறு குறித்து வெளியிட்ட தங்கமலர், 2007
5) விஜிதரன், சசிரேகா, யாழ்ப்பாணம். அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமிகோயில் ஓர் ஆய்வு, யாழ்ப்பாணம். யாழ் பல்கலைக்கழகம் – 2007
6) ஆலயத்தின் உறுதிகள், பரிபாலனசபையின் 1949ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரையான அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள், விஞ்ஞாபனங்கள் என்பனவும்.
7) தகவலாளிகளாக எழுத்துமூலமாக கையளித்தவர்கள்
   திருவாளர் சின்னப்பு திருநாவுக்கரசு
   திருவாளர் கந்தவனம் பத்மநாதன்
   திருவாளர் ஆறுமுகம் சுப்பிரமணியம்
   திருவாளர் அப்புக்குட்டி வேலாயுதர்
   திருவாளர் சின்னத்தம்பி செல்லத்துரை

வாய்மொழியாகவும் பெரியவர்களிடம் தகவல் திரட்டப்பட்டது.

## ஆலயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள கட்டுமானப் பணிகள் பற்றிய விபரம்

1) தேர் முட்டி அமைத்தல்
2) இராசகோபுரம் அமைத்தல்
3) அன்னதான மடம் புனரமைத்தல்
4) ஆலையமண்டபங்கள் புனரமைத்தல்

உ

சிவமயம்

# மயிலியற்புலக் கந்தசுவாமியார் பதிகம்

பாடியவர் : திரு.கி.நெல்லிநாதன் ஆசிரியர் அவர்கள்

சீரார் மயிலிய நற்புலம்வாழ் செவ்வேளின்
பேரார் திருப்புகழைப் பாடவே – ஏராரும்
தும்பிமுகத் தெந்தாய்நின் தூயஇணைப் பாதமலர்
நம்பினேன் நற்றமிழை நல்கு.

உலகெலா மீன்றுபினும் ஒப்பரிய கன்னியாய்
உயிரெலாம் வாழவருள்செய்
உலகமா தாபங்கி லொளிவீசத் திருவெண்ணீ
றொளிர்பரஞ் சோதியெந்தை
நலமெலாம் பெருகிடத் தருஞானத் தழலாறுந்
நண்ணியுயர்சர வணத்தில்
நற்கருணை முகமாறு மீராறு கரமுமாய்
ஞானநற் சோதி யுருவாய்
மலருலாம் முகமகளிர் அறுவர்முலை யமுதுண்டு
மலைமகள் மடிமீதிலே
வந்துவிளை யாடுதிரு முருகனே அடியேனுன்
மலரடி நம்பினேனே
கலகலென் றொலிசெயுங் கதிர்வயல் காட்சிதரு
மயிலியற் புலவளவில் வாழ்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வாகனத் திவரும்
கந்தசுவாமிக் கடவுளே. 1

பொன்னுலக முறைகின்ற தேவர்க்கு முன்னைநாட்
புகலரிய தீமை செய்த
புன்னெறிச் சூரனைக் கிளையோடு மாய்த்துமுயர்
புத்தேளிர் உலகு காத்தும்
நின்னருட் பதிவந்து நின்றுமுறை யிடுவோரின்
நீள்வினை தடிந்து பின்னும்
நேயமாய்த் தூயவாழ் வருளுமருள் வள்ளலே
நெடுவினை வருத்து மேழை

உன்னருள் ஞானநெறி யுணராத அறிவுடன்
உருகாத சிந்தை யுந்நீர்
ஒழுகாத விழியுமுன் புகழ்தனைப் பாடவே
ஓராத நாவு முடைய
கன்னெஞ்ச னாகிலும் கைவிடா தருள்செய்வாய்
காமர் மயிலியற் புலம்வாழ்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்தசுவாமிக் கடவுளே. 2

அன்புடனல் லடியவர் நின்பதி அடைந்துயர்
ஆறெழுத் தோதி நின்றே
அகங்குழைந் துருகிநற் சுகம்விளைந் தருள்செயென்
றானந்த அருவி சோர
உன்பதம் வாழ்த்தவே யுறுவினை வீழ்த்தியே
உவந்தருள் செய்யும் வள்ளலே
ஓயாத துன்பஞ் சுமந்துநொந் தேயலைந்
துன்னருட் பதியில் நிற்கும்
என்னையும் கைவிடா திருவினை நீக்கியுன்
அன்பனாய்ச் செய்தி டெந்தாய்
இணையடிக் கன்புசெய் யமுத சுந்தரவல்லி
என்னுமிரு மின்னலிடையார்
கன்னியர் பங்குலவு மெங்கள்குல தேவனே
கவின் மயிலியற் புலம்வாழ்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்த சுவாமிக் கடவுளே. 3

சத்தியந் தாழ்ந்துநற் றருமநெறி வீழ்ந்துமுயர்
சன்மார்க்க நெறிகள் நீங்கத்
தரணியிற் புன்மைநெறி மூடநல் லோரெலாம்
தாங்கொணா துளம் வருந்தச்
சித்தம திரங்கியே திருவருட் சக்தியைச்
சிரித்தவ தாரமாக்கிச்
சத்தியஞ் சார்த்தியே தருமந் தழைக்கவருள்
சத்திய சோதி யாதி
எத்துணை வகைப்பே ரிடர்த் தலைப்பட்டுநின்
றேங்கி யேங்கித் தவிக்கும்

ஏழையேற் குன்னருள் நிதியிலொரு சிறிதேனும்
எந்தையே யருள் செய்குவாய்
கத்தருவி பாய்மலைக் கன்னியருள் பாலனே
காமர் மயிலியற் புலம்வாழ்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்த சுவாமிக் கடவுளே. 4

மண்மீதில் முடிவிலா வன்துயர்க் கடலினில்
மூழ்கி மிகுதுன்ப மெய்தி
மாண்புசெறி சாந்தியங் கரையினை நாடவும்
வலியின்றி மயங்குவேனைத்
தண்ணருட் புணைதந்து ஈடேற்று வாயெனத்
தனியனேன் வேண்டவந்தோ
தயையொரு சிறிதேனும் மில்லாது தள்ளின்நின்
தாளன்றித் துணை யில்லையே
வண்மையுட னெங்குநின் தண்ணருள் சுரந்துபினும்
வற்றாத அருள்வாரியே
வளரருட் சோதியே ! இளமையழ காதியே
வதன மாறும் பன்னிரு
கண்ணருள் பொழிந்தெனது பண்ணரிய துன்பங்கள்
களைகுவாய் மயிலியற் புலக்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்த சுவாமிக் கடவுளே. 5

பெருகுபே ரன்புடன் சிவஞான மருள்குமர
குருவெனப் பணிவர் சிலபேர்
பேரிடர் நல்குர நீக்கியருள் வள்ளலெனப்
பெரும்புகழ் இசைப்பர் சிலபேர்
அருநோன் பியற்றியொரு திருமதலை யீந்திடென்
றடியிணை பணிவர் சிலபேர்
ஆறாக விழிசொரிய மாறாத நோய்தவிர்
ஆதியே என்பர் சிலபேர்
இருள்வினை தவிர்முருக என்பர்சிலர் சொற்கலை
ஈபுலவ என்பர் சிலராய்
இனியநின் பதிவரும் அனைவரின் குறைதவிர்த்
தெண்ணிய எய்த நல்கும்

கருணா சொரூபியே பெருவினை தீர்த்தெனையுங்
காத்தருள் மயிலியற் புலக்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்த சுவாமிக் கடவுளே. 6

மாறாத பிணியினால் ஆறாத துயர்கொண்டு
வருந்திநின் செய்யகமல
மலரடித் துணையன்றி வேறுதுணை யில்லாது
வாழ்த்துமிவ் வேழையேற்குப்
பேறாகுநின்னருள்மருந்திலொரு சிறிதேனும்
பிஞ்ஞகா அருளியென்றன்
பிணிவினை நீக்கியுன் னன்பனாய்ச் செயெனப்
பிதற்றுமொழி நின்செவிகளில்
ஏறாதிருந்திடின் என்செய்வேன் என்னையும்
எண்ணரிய உயிரிலொன்றாய்
இயற்றியு மிரங்கா திருந்திடி னிவ்வுட
லெனினும் நீ நீக்கி டெந்தாய்
காரேறு வார்குழல் தெய்வகுஞ் சரிவள்ளி
காந்தனே மயிலியற் புலக்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்த சுவாமிக் கடவுளே. 7

பழவினை தீர்த்துனது பணிசெய்யும் எவரையும்
பரசிவ ஞான மெய்தப்
பற்றுட னிரங்குநீ யுன்னருட் பணிசெயப்
பவம்நீக்கி யருள் செய்குவாய்
அழகொளிர் நந்தினம் முழவிசை யதிர்க்கவும்
அம்புயம் தீப மேந்த
ஆவினம் பால்சொரிந் தணிமஞ்சனஞ் செய்ய
அளியின மிசை பாடிடக்
களிகொளும் பக்தரென மயில்நடம் புரியவும்
காவி கண்ணீர் சொரியவும்
காமர்செஞ் சாலிவெண் சாமரை யிரட்டவும்
குருகிறைக் குடை செய்யவும்

களிகொண்டு விழவயர் தொண்டரினமென மருதம்
காட்சி தரு மயிலைப்புலக்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்த சுவாமிக் கடவுளே. 8

தேமலர் சொரிந்து நின்பாதந் தொழாதிடுந்
தீவினை யினே னாயினுஞ்
சிவமாகி நின்றோர்கள் எம்மனோர் உய்ந்திடச்
செப்பு தெய்வத் தமிழிசைப்
பாமலர் சூட்டவே யறியாத நெஞ்சுடைப்
பண்பி லாதே னாயினும்
பாழ்செய்யு மைம்புலன் தன்னைநற் செம்புல
மாக்க வறியே னாயினும்
மாமலர்க் கடம்பஎண் ணான்கறங் களிலொன்று
மறியாதறன் கடையில் வீழ்
வன்னெஞ்ச நீசனே னாயினும் எந்தைநீ
வன்மை யாலருள் செய்குவாய்
காமலர்த் தேனுணக் களிகொண்டு வண்டிசைசெய்
கவின் மயிலியற் புலம்வாழ்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்த சுவாமிக் கடவுளே. 9

பழமறை போற்றுசெங் கமலபா தஞ்சொரி
பரானந்த நறவ முண்ட
பத்திமை யோர்புகழ் முதுதமிழ் இன்பமே
பருகிய நின்செவிக் கென்
அழகிலாப் புன்மொழி வறிதேனும் அன்னைதன்
குழவியின் மழலை மொழியில்
அகங் குழைந்தேமுக மலர்ந்தணைத் தருள்செய்வள்
அத்தன்மை யாக என்புன்
மொழியையும் பொறுத்தென தாருயிர் அன்னையே
முன்னை வன்தீவினை யெலாம்
மூளாது நீங்கியிடர் சூழா தகற்றிநல்
வாழ்வதனை யருளி யுன்றன்

கழலிணை மறவா வருட்செல்வ மேதந்து
காத்தருள் மயிலியற் புலக்
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்த சுவாமிக் கடவுளே. 10

மன்னுலக மெங்கணும் மலிவளஞ் சுரக்கவே
மாமழை பொழிந்து வாழி
மானிலத் துயிரெலாம் அறன்கடையில் வீழாது
வாழ்விக்கும் கருணை வாழி
இந்நிலத் தெல்லோரும் இன்புற் றிருந்துநின்
இணையடிகள் பரவி வாழி
எங்கணும் அன்புநெறி எங்கணும் சத்தியம்
எங்கணும் அறங்கள் வாழி
அன்னையென் உமையவள் அருள்வாழி ஆறேந்தும்
அத்தனஞ் செழுத்தும் வாழி,
அங்கைமலர் கொண்டுதொழு மடியவர் குழாங்களில்
வவனிமிசை என்றும் வாழி
கன்னியர் வாழிநற் சேவலங்கொடி வாழி
கவின் மயிலைப் புலமும் வாழி
கதிர்வேல் கரத்தொளிர மயில்வா கனத்திவரும்
கந்தவேள் வாழி வாழி. 11

## முருகன் பெருமை

ஒருவரைப் பங்கிலுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே

கந்தரலங்காரம்

## மயிலியற்புலக் கந்தசுவாமியார்

# திரு ஊஞ்சல்

பாடியவர் : திரு.வி.முருகேசு ஆசிரியர் அவர்கள்

### காப்பு

மன்னுமயி லைப்புலத்து வாழுமறு மாமுருகன்
வன்னத் திருவூஞ்சல் வாழ்த்தவே – முன்னவனே
கொம்புமுறித் தேடாகக் கோடெழுதுங் கும்பமதத்
தும்பிமுகத் தெந்தை துணை.

### நூல்

சீராரும் பவளங்கள் கால்க ளாகச்
சேண்விளங்கு முத்தங்கள் கயிற தாக
ஏராரும் பொன்மணிகள் பலகை யாக
ஏடவிழும் பொற்பாதம் விரும்பி ஏறி
காராருங் குழலிருவர் பாங்க தாகக்
கருதுமனத் தடியவர்கள் கலந்துபாட
நீராரும் நெற்கழனி சூழ ஓங்கும்
நீலமயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல். 1

விண்ணவரும் மண்ணவரும் விரும்பி ஏத்த
வேதமுதல் மந்திரங்கள் விளங்கி ஓத
பண்ணவரும் பாவலரும் பணிந்து போற்ற
பாவையர்கள் பாங்குநின்று கவரி வீச
எண்ணியவர் எண்ணிவா றெய்த வேண்டி
ஏறுமயி லேறியிரு மங்கை சூழ
பண்ணினிசைக் கடல்சூழும் வடவ ராலி
பஞ்சைமயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல். 2

மாவினோடு கதலிபழம் வருக்கை செந்தேன்
மணங்கமழும் கஸ்தூரி கரும்பு சந்தம்
ஆவினருள் பாலுநறு நெய்யும் பன்னீர்
அளவில்பல இளநீரும் அமைய ஆட்டி

கோவினணி நவரத்ன மகுடஞ் சூட்டி
குமாராய நமவென்று கரங்கள் கூப்பி
சேவிக்கும் உன்னடியார் வடந்தொட் டாட்ட
சீதமயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல். 3

முன்புசட்டி யிலேகொக்கை அவித்துட் கொள்ள
மூரிமிகு சத்திகரத் தெடுத்த வேலா
பின்புபிடி பிணைமகளார் கரங்க ளீர்த்துப்
பிடித்தபன் னிருகரத்தாய் ஆடீர் ஊஞ்சல்
தொன்மைபெறும் அடியவரின் துயரம் போக்க
துலங்குமிரு திருப்பாதம் தெரியக் காட்டி
கன்னலொடு செந்நெல்வளர் வடவ ராலி
கனகமயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல் 4

இருள்நீக்கி ஒளிவிளக்கும் முகமும் ஒன்றே
ஏத்தடியார் வினைதீர்க்கும் முகமும் ஒன்றே
அருளாழி அந்தணர்தம் வேள்விக் காக
ஆடும்மயி லேறிவரும் முகமும் ஒன்றே
மருளொழித்து மாதடிந்த முகமும் ஒன்றே
மதித்தலையார்க் குரைநவின்ற முகமும் ஒன்றே
மருளும் இரு மங்கையர்க்காம் முகமும் ஒன்றே
மணிமயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல். 5

கொன்ன வில்வேல் சூர்தடியக் கரத்தில் ஏந்தி
கொக்கரக்கோக் கோழியினைக் கொடியில் ஏந்தி
கன்னல்மொழி மின்னல்இடை வள்ளி தெய்வ
கன்னியர்கள் இருமருங்குங் கலந்து வாழ
பன்னிரண்டு புயங்களுடன் கடம்பு சூடி
பாவுமயி லேறிவரு மாறு முகமும்
என்னிதயத் துள்ளுறையும் இருதா ளோடு
எழிலார்மயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல். 6

முற்றாத இளவெய்யோன் முகங்க ளோடு
முதிர் கடலில் ஏறிவரும் பான்மை போல
பற்றறுத்த உளத்தார்க்குப் பாதங் காட்டி
பச்சைமயி லேறிவரும் பரனே ஆடீர்

வற்றாத சரவணத்துள் வளர்ந்த வேளே
வளைசங்கம் உழுவயல்சூழ் வடவ ராலி
பற்றாத மனமுடையேன் பாட ஆடீர்
பாவுமயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல் 7

மயிலாட மங்கையிரு பங்கி லாட
மார்பிலணி கடம்பாட மறைக ளாட
அயிலாரும் வேலாட அணிக ளாட
அண்டபகி ரண்டங்கள் குலுங்கி ஆட
வெயிலாரும் ஓராறு முகங்க ளாட
விறலாரும் செஞ்சேவல் கூவி ஆட
பயிலாத நாயடியோம் பாட ஆடீர்
பச்சை மயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல் 8

நல்லதமிழ்ப் பாட்டுக்காய் நாவ லேறி
நறுங்கனியை ஈந்தவனே ஆடீர் ஊஞ்சல்
வில்லனைய நுதலியர்க்காய் வேட னாகி
விருத்த னாய பாலகனே ஆடீர் ஊஞ்சல்
சொல்லரிய புத்தேளிர் துயரம் போக்க
சூர் தடிந்த கொற்றவனே ஆடீர் ஊஞ்சல்
கொல்லு யமன் இடர்தீர்க்கக் கூர்வேல் கொண்ட
கோலமயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல் 9

ஆனைமுகற் கிளையோய் நீ யாடீர் ஊஞ்சல்
ஐம்முகனின் செம்புதல்வா ஆடீர் ஊஞ்சல்
மானைமுதல் மானிடத்தின் வருக வென்றே
மானிடத்தின் வந்தவனே ஆடீர் ஊஞ்சல்
மானவேல் முட்டையாய் ஆடீர் ஊஞ்சல்
மல்லல் தோள் பன்னிரண்டாய் ஆடீர் ஊஞ்சல்
வானை நிகர் வள்ளால்நீ யாடீர் ஊஞ்சல்
வண்ணமயி லியற்புலத்தாய் ஆடீர் ஊஞ்சல். 10

## வாழி

ஒருமுருகா திருஅருள்தா எனநின் றேத்தி
ஓலமிடும் அடியவர்கள் வாழி வாழி
பெருகார்வ மனத்தோடு திருத்தொண் டுக்காய்
பெருந்தொண்டு புரிவோரும் வாழி வாழி
ஒருமயிலோ டிருமயிலும் வாழி வாழி
ஒளிவேலோ டறுமுகமும் வாழி வாழி
திருவடியே வீடாகத் தருவாய் வாழி
திகழுமயி லியற்புலத்தாய் வாழி வாழி.

## எச்சரிக்கை

திருவார்தரு மயிலைப்புலத் தேவா எச்சரிக்கை
செறிவார்குழ லுமையாள் திரு செல்வா எச்சரிக்கை
நதிமேவிய சடையோனருள் நம்பா எச்சரிக்கை
நலமேவிய மயிலில்வரும் நாதா எச்சரிக்கை 1

ஆறிரண்டு தோளுடைய அமலா எச்சரிக்கை
ஆனகுற வள்ளிபுணர் அரசே எச்சரிக்கை
திருவார்புய முடையான்அரி மருகா எச்சரிக்கை
தேவர்சிறை தீர்த்ததிரு முருகா எச்சரிக்கை 2

நாறுமலர் வீசுகொன்றை நாதா எச்சரிக்கை
ஞானப்படை யால்சூருயிர் நலிந்தா எச்சரிக்கை
சீர் மேவிய மயிலைப்பதி யுறைந்தா எச்சரிக்கை
தீராவினை தீர்த்ததிரு முருகா எச்சரிக்கை 3

## பராக்கு

மருமருவு மயிலைப்புல முருகா பராக்கு
மாசிலா ஆறுமுக வரதா பராக்கு – வரதா – பராக்கு
நீலமயில் ஏறிவரும் நிமலா பராக்கு
நேசவள்ளி தெய்வானை பாகா பராக்கு – பாகா–பராக்கு 1

சூரனொடு தாரகனைக் கொன்றாய் பராக்கு
சோதிவடி வேலெடுத்த தூயோய் பராக்கு—தூயோய்—பராக்கு
சரவண பவானந்த சுவாமி பராக்கு
சகலசிவ தயாபரனே கந்தா பராக்கு—கந்தா· பராக்கு 2

ஆறுபொறி யாய்உதித்த அமரா பராக்கு
அடியோமுக் கருள்புரிந்த ஐயா பராக்கு—ஐயா—பராக்கு
வடராலி தழைத்தோங்க வாழ்வே பராக்கு
வடிவுடைய சேற்கண்ணி பாகா பராக்கு—பாகா—பராக்கு 3

## மங்களம்

மங்களம் திரு மங்களம்
மயிலியற் புலத்தவர்க்கு – மங்களம் திருமங்களம்

மங்கையிரு பங்கினர்க்கு
மானும் வடிவேலவர்க்கு
செங்கரம்பன் னிரண்டினர்க்கு
சேவலங் கொடியினர்க்கு—மங்களம் 1

செங்கடம் பணிந்தவர்க்கு
சிந்தைமருள் தீர்ப்பவர்க்கு
எங்கடம்ப மானவர்க்கு
ஏறுமயில் வீரருக்கு—மங்களம் 2

சரியைத்தொண்டு செய்துவாழும்
சங்கையில் அடியவர்க்கு
பிரியமாய் அருள்கொடுத்துப்
பீடுசேர வைப்பவர்க்கு – மங்களம் 3

மல்லல்தோள் ஆறிரண்டான்
மயிலியற் புலத்தவர்க்கு
அல்லல்சேரும் அடியவரின்
அருவினைகள் தீர்ப்பவர்க்கு – மங்களம் 4

மஞ்சுவளர் சோலைவளர்
மயிலியற் புலநகரில்
கொஞ்சுமொழிப் பெண்களுடன்
கோயில் கொள்ளும் குமரனுக்கு—மங்களம் 5

# மயிலியற்புல மகமாரி அம்மன் பதிகம்

## பாடியவர் : திரு.வ.விநாயகர் அவர்கள்

சீர்கொண்ட வடராலி யடர்சோதி வடிவாகி
மிடிதீர் குழாங்க ளுயவே
செங்கதிர் விளங்குமொளி திங்கள்முக மங்குலள
கங்கமுக கண்ட மெனவே
கார்கொண்ட கறைமிடற் றண்ணலிட இடபமிசை
களிகொண்டு வந்த வடிவே
காசினியி லுனதுபுகழ் பேசவெளி தாகுமோ
கருணைதந் தாள வருவாய்
பார்கொண்ட பல்லுயிர்க் காரமுத மூட்டுகை
பசுமைதரு காந்த ளெனவே
பசியவிட நாகமணி பரதமிட நடனமிடு
பாத வெண்டய மதிரவே
மார்கொண்ட தண்டரள மாலையணி துன்னவே
மயிலியற் புலவளவில் வாழ்
மழைதங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே. 1

கந்திபூ கங்கமிசை மந்திவந் தேறியே
கனிபறித் தெதிர் வீசவே
கதலிபல குமிழிழகி நதிபெருக் காறெனக்
கன்மடை திறந் தோடவே
முந்திவந் தறுகாலி பந்துபந் தாகவே
மொய்கீத மது பாடவே
முனைகொண்டு வருவெள்ளம் நதியென்று பலகாலும்
முதுகொண்டை யது பாயவே
தந்திவந் தகழியிடை முளரியைக் காணாது
தடுமாறி வெளி யேறவே
தரையெங்கு முனதுபுகழ் தருகின்ற அருள்வெள்ளம்
இதுவென்று படிய வரவே
மந்தரஞ் சோலைசெறி வடவராலிப் பதியில்
மயிலியற் புலவளவில் வாழ்
மழைதங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே. 2

காட்டிற் பருத்திலவு பூத்துச் சொரிந்திடக்
காற்றுப் பழந் தின்னவே
கருதித் தவஞ்செய்த முனிவர்க்கு நிகரென்று
காத்திடுங் கிள்ளை போலே
சாட்டிக்கம் அறியாத மூடனறியேன் கவிதை
சாற்றத் துணிந்த தென்னோ
சஞ்சலப் படுமடியார் புன்சொலைப் புகழினும்
தாயெனப் பொறுத் தருளுவாய்
காட்டுக் குழந்தையென மாட்டுக்கு மால்கொண்ட
குழகனைத் தழுவி நிதமும்
கோலப் பதம்பெற்ற ஞானத்தை ஆளுசெங்
கோலைத் தரித்த முதலே
மாட்டிக் கடாமுகனை வாட்டிப் பொருந்திறலி
மயிலியற் புலவளவில் வாழ்
மழைதங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே. 3

சித்திரப் பதுமையோ செயலொன்று மில்லையோ
தெரியாத வன் னெஞ்சியோ
செவிடுமை யானாலும் அரிதான அன்னையே
செப்புமொழி கேட்க வில்லையோ
குத்திரக் கொடியபிடி வாராது சோராது
கூற்றணனு காம லருள்வாய்
குவலயந் தன்னையே கவலையைத் தீர்த்துனது
கோலப் பதந் தருகவே
அத்தருக் கத்தமுறை வித்தக புரத்தியே
ஆனந்த மோன வடிவே
அக்குமனி கொக்கிறகு சிக்கென முடித்துவரு
மம்பலத் தாடு மயிலே
மத்தகக் குட்டியொடு மயிலேறு செட்டிவர
மயிலியற் புலவளவில் வாழ்
மழை தங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே 4

இந்துவின் குலமுதித் தந்தநாள் இமயத்
திருந்தரசு புரியு மரசன்
இடுமலர்க் கிரங்கியே படிதொழும் பரமனார்க்
கிதந்தரும் குழந்தையாகி
மைந்தரும் மகரமென வடிவினைக் கொண்டுதுயில்
மாலைவன் வேலை மீதில்
வைத்திடக் கோவென்று சத்தமிட் டழுதவுன்
மாயத்தை என்ன சொல்வேன்
சிந்தைமிகு களிகொண்டு பரதவ னெடுத்துத்தன்
தேவி கையில் கொடுக்க
சீறியமு தவள்முலைப் பாலுண்டாய் பரமனும்
தேடிவரு மந் நாளிலே
மந்திரப் படகேறி மகரமீன் பிடிப்பித்து
வாழ்கயிலை வந்த வடிவே
மழைதங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே. 5

சண்டப்பிர சண்டமயில் ஏறிவரு வீரனைச்
சரவணத் துந்தி மூழ்கி
தாயெனக் கைக்கொண்டு உபாயமாய் முன்னின்று
தாங்கியே மடியில் வைத்தாய்
அண்டருக் கரசனைத் தண்டித்த சூரனும்
அவன்தம்பி மார்க ளென்னும்
அரிமுகன் தாருகன் பானுவின் பகையாளி
ஆன திறல் வீரருடனே
குன்றைப் பிளந்தவேல் தனுவொடும் சக்கரம்
குலிசமுஞ் சூல முடனே
குகனுக்கு நல்கியே யசுரருயிர் மீண்டுவரு
கூடப் பர்வத மலையையும்
அண்டத் தருஞ்சால இரதங் கவர்ந்துசூர்
மாளத் தடிந்தவன் தாயே
மழைதங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே 6

அந்தரி நிரந்தரி அரம்பையர் வயந்தழுவும்
ஐயை யாமழையு மாயி
ஆனந்தி முக்கண்ணி சடாட்சரி எனப்பரவும்
அடியவர் குழாந் துதிக்க
சுந்தரி துரந்தரி சிலைக்கொடி சிலைப்புருவ
சோதி முதலாளி யென்றே
துருவாசர் முதலான ஜனகாதி ஜனக்குமரர்
சோதிரிசி வேத முனிவன்
வந்தரி அகத்தியன் கொங்கணன் கோரக்கன்
வாரிரிசி சட்ட முனிவன்
வடமாரி நாரதன் சூதன் பராசரன்
வருமுனிக் குழாங்க ளுடனே
மந்திர விதிப்படி துரந்தடி தொழத்தகும்
வடவராலிப் பதியில் வாழ்
மழைதங்கு கருணைபொழி, முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே 7

அரவுந்தி அறுகுமதி அதழினுடன் அணியுமரன்
அருகிருந் தவனி வாழ
அஞ்சலென் றடியரைத் தஞ்சம் வைத்தருளுமுன்
அரிய சந்நிதி யேயலாற்
பரவுந்தி போன்றவுன் கருணை வெள்ளத்தையும்
பங்கய மலர்த்தா ளையும்
பரிபூர ணானந்த வதன வின்பத்தையும்
பார்க்கக் கிடைப்ப தெப்போ
தருவினிதி செல்வமும் சகல பாக்கியங்களும்
தாட்டுணைக் கமல வீடும்
தந்தாள வைப்பதுன் சொந்தமே யல்லாது
தள்ளிவிட நீதி யுண்டோ
பரவுமுத் தாரமொடு வித்தார விடையேறி
மயிலியற் புலவளவில் வாழ்
மழைதங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே 8

ஆரரி நிரந்தரி அறுகோண சுந்தரி
அட்டாட் சரத்து வடிவி
அஞ்சாத மகிடனுடை நெஞ்சத்தை வெட்டியே
மின்சாரு லிங்க ஒலியைக்
கோரியிரு கைக்கொண்டு வாரியுன் மார்பிலெழு
கோங்கான கொங்கை படவே
கூசா தணைந்துசர் வேசா எனப்பரவு
கோலாதி கோல வடிவே
சீரிய தமிழ்க்கவிதை கொண்டுனை வணங்குபவர்
சித்தம் நிறைந்த திருவே
செல்வமே யுனதருட் கிருபைதா என்றென்று
தினம்தினம் தொழ வேண்டினேன்
வாரியருள் சொரிகின்ற மாரியுன் பெருகிரண
மயிலியற் புலவளவில் வாழ்
மழைதங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே. 9

எட்டிலா எண்ணெட்டில் இதழில் விளையாடுவாய்
ஈஸ்வரன் பாகமுறைவாய்
எண்ணைந்து மூன்றிலே நண்ணுவாய் செகமெலாம்
ஏகமுன தாகி வருவாய்
ஒட்டிலாய் ஒருவருக் குற்றமொழி சொல்கிலாய்
உன்பதத் தன்ப ருக்கே
உறுவாச லொன்பதுந் தகரத புரமெலாம்
உலாவி யறுகோண முறைவாய்
கிட்டிலாய் தேவகின்னரருடன் கிம்புருடர்
கேசவன் வாழி யெனவே
கேடிலா மாமறைகள் ஓதியே குருநாதர்
கிளையுடன் வாழிகூற
மட்டிலா வுன்தவம் காத்தவர் கிளைகளொடு
மன்னுயிர் சிறக்க வாழும்
மழைதங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே. 9

எட்டிலா எண்ணெட்டில் இதழில் விளையாடுவாய்
ஈஸ்வரன் பாகமுறைவாய்
எண்ணைந்து மூன்றிலே நண்ணுவாய் செகமெலாம்
ஏகமுன தாகி வருவாய்
ஒட்டிலாய் ஒருவருக் குற்றமொழி சொல்கிலாய்
உன்பதத் தன்ப ருக்கே
உறுவாச லொன்பதுந் தகரத புரமெலாம்
உலாவி யறுகோண முறைவாய்
கிட்டிலாய் தேவகின்னரருடன் கிம்புருடர்
கேசவன் வாழி யெனவே
கேடிலா மாமறைகள் ஓதியே குருநாதர்
கிளையுடன் வாழிகூற
மட்டிலா வுன்தவம் காத்தவர் கிளைகளொடு
மன்னுயிர் சிறக்க வாழும்
மழைதங்கு கருணைபொழி முகவிண்டு அருள்பெருகு
மகமாரி யெனு மம்மையே. 10

*************************

## முருகன் கருணை

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருபதுடையான் தலை பத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உடையாள் பயந்த இலஞ்சியமே

கந்தரலங்காரம்

*************************



பிள்ளையார்



வீரபத்திரர்



நாகராஜா

## மயிலியற்புல மகமாரி

# திரு ஊஞ்சல்

பாடியவர் : திரு.செ.நடராசா ஆசிரியர் அவர்கள்

**காப்பு**

திரு வளரும் ஈழவள நாட்டைச் சேர்ந்த
திறம் வளரும் யாழ்ப்பாணப் பதியைச் சார்ந்த
உரு வளரும் வட்டுநகர் தன்னி லோர்ந்த
உற்றவட ராலிஎன்னும் உறுதி வாய்ந்த
மரு வளரும் மயிலியநற் புலத்து வாழும்
மகமாரி உமையவள்ளமே லூஞ்ச லேந்த
கரு வளரும் கரிமுகன்தாள் பணிந்து தாழ்ந்தே
காப்பறைந்தேன் நின்பாதம் காப்ப தாமே. 1

**நூல்**

பொன்னினா லூஞ்சலிடக் கால்கள் நாட்டி
பொருந்துவை டூரியத்தால் விட்டம் பூட்டி
மின்னுதிரு வெள்ளியினால் கயிறு மீட்டி
மதியூகி வேதனினால் ஊஞ்சல் மேட்டி
துன்னுமர கதமதனால் தவிசு மாட்டி
திரிசூல துரந்தரி ஊஞ்சலாட
மன்னுமா மகள்தானும் வடந்தொட்டாட்ட
மயிலியநன் மகமாரி ஆடீரூஞ்சல். 2

அங்கமெலாம் தங்கமணி அழுந்தித் தொங்க
ஆனதிரு நுதற்பொட்டு அழகு வாங்க
தங்கநிற மணிமகுடம் மாட்சி ஓங்க
தங்கியநல் வரிக்கச்சு விளங்கித் தாங்க
செங்கைதனில் மின்வளையல மினுங்கித் தேங்க
செய்யதிரு பரிபுரம் சேர்ந்தி லங்க
மங்கலஞ்சேர் மணிச்சேலை மின்னி வீங்க
மயிலியநன் மகமாரி ஆடீரூஞ்சல் 3

விஞ்ஞையர்கள் சங்கீத வீணை பாட
விரும்புமுய ரரம்பையர்கள் விரும்பி யாட
வஞ்சமில்லா மெய்யடியார் குழாங்கள் கூட
வந்தனைசெய் புலவோர்நூற் பொருள்கள் தேட
கஞ்சநிகர் முகமாதர் கற்பு நீட
கலாமக்க ளிராசாங்கக் கருமம் நாட
மஞ்சாடும் வடராலி தன்னில் மேவும்
மயிலியநன் மகமாரி ஆடீரூஞ்சல். 4

கரிமுகனோ டறுமுகனும் முலைப்பா லூட்ட
கங்கைநில வழலணிந்தோன் வலமாய்க் காட்ட
பரிவுடனே சடைவடுகன் பணிந்து நாட்ட
பாங்கான இருடிகள் இரங்கி நீட்ட
விரிசடைசேர் தவப்பெண்கள் தொழுது ஆட்ட
விண்ணவர்மண் ணவரழுது விழுது கூட்ட
மருநெடுவேல் நயனங்கள் மீட்சி மீட்ட
மயிலியநன் மகமாரி ஆடீரூஞ்சல். 5

ஓங்குமொரு திருவதன மிலங்கி யாட
ஒளிசெய்நவ ரத்னமுடி சேர்ந்து ஆட
பாங்குதிறப் படைகளுடன் கரங்க ளாட
பங்கிலுறு பாங்கியர்கள் பரிவி லாட
தாங்குதிற லடியவர்கள் தயங்கி யாட
தாயமாய்த் தாவடமும் தளர்ந்து ஆட
மாதுபங்கன் மயங்கியே மருண்டு ஆட
மயிலியநன் மகமாரி ஆடீரூஞ்சல். 6

பொன்மாலை மணிமாலை மினுமி னென்ன
பூமாலை மணம்வீசிப் பொலிந்து மின்ன
கன்னியுமை கபாலியங்கம் தளத னென்ன
கத்தூரி கர்ப்பூரம் கமக மென்ன
இன்தமிழைக் கவிவாணர் இராகம் பன்ன
இட்டமுடன் கேட்பவர்கள் இனிது என்ன
மன்னுயிர்கள் நின்னருளில் நீடி யுன்ன
மயிலியநன் மகமாரி ஆடீரூஞ்சல். 7

பூமியுளோ ரெல்லோரும் புகழ்ந்து போற்ற
புகலரிய அடியவர்தொண் டங்கங் காற்ற
நேமியுளோ னயன்முதலோர் நினைவி னேற்ற
நித்தியா னந்தத்தே னடியார்க் கூற்ற
நாமியம்பி அரியபெரு நிலையைச் சாற்ற
நண்ணுமா ணவவிருளை நன்கு மாற்ற
மாமகளும் நாமகளும் வடந்தொட் டாட்ட
மயிலியநன் மகமாரி ஆடீ ரூஞ்சல். 8

ஆதிமுதற் பெண்ணானாய் ஆடீ ரூஞ்சல்
அகிலபுவ னம்படைத்தா யாடீ ரூஞ்சல்
சோதியரன் இடப்பாகி ஆடீ ரூஞ்சல்
சோர்விலாச் சொல்லிறைவி ஆடீ ரூஞ்சல்
நீதிபிர ணவன்தாயே ஆடீ ரூஞ்சல்
நீலவண்ணன் சோதரியே ஆடீ ரூஞ்சல்
மாதுமையே மங்கைநங்கை யாடீ ரூஞ்சல்
மயிலியநன் மகமாரி யாடீ ரூஞ்சல். 9

## வாழி

முறையான ஆகமங்கள் மொழிந்து வாழி
முந்துவழி மெய்யடியார் மூவர் வாழி
நிறைநீதி இவ்வுலகில் நீடு வாழி
நீங்காத பெறுபேறு நிறைந்து வாழி
இறைபணி செய்யடியார் சிறந்து வாழி
இந்துமத சித்தாந்தம் ஓங்க வாழி
மறை வாழி சிவன்வாழி மயிலோன் வாழி
மயிலியநன் மகமாரி வாழி வாழி. 10

## எச்சரிக்கை

மயிலியநற் பதியேவளர் மாரி எச்சரிக்கை
மருவியசீ ரடியவரின் அன்பே எச்சரிக்கை
தாயேமக மாரியெங்கள் அறிவே எச்சரிக்கை

தானசுத்தி தயாபரியே தருவா யெச்சரீக்கை
ஆங்காரச் சிங்கத்தில மர்வா யெச்சரீக்கை
ஆங்கழிய மகிடனையே மாய்த்தா யெச்சரீக்கை

நீடுநினை நெஞ்சினிலே நிற்பா யெச்சரீக்கை
நீடுமுயர் நாற்பதமு மருள்வா யெச்சரீக்கை

**பராக்கு**

திருமஞ்ஞையப் புலத்துவளர் தேவி பராக்கு
திருவேதிகழ் உருவேசிவ காமி பராக்கு
ஐந்துகரன் அறுமுகவன் தாயே பராக்கு
ஐந்தொழிலை அகிலத்தில் அருள்வாய் பராக்கு
உடல்வினைபைத் தீர்த்தருளும் உயிரே பராக்கு
ஊர்புகழ அருள்வாக்கு உரைப்பாய் பராக்கு
அரியயனுக் கருள்புரியும் ஆதி பராக்கு
அந்தணர்கள் வந்தனைசெய் ஆச்சி பராக்கு
வடகிரியில் அமர்ந்ததிரு உமையே பராக்கு
வடராலி வாழ்வோங்க வந்தாய் பராக்கு

**லாலி**

வீறுகொண்ட காளமுண்ட கண்ட லாலி
வீடுகொண்ட கயிலைமலை வாச லாலி
மங்கை யுமை அம்மையொரு பாக லாலி
கங்கை மதி கொன்றைமுடி சூடி லாலி

தேவயானை வள்ளிமண வாள லாலி
தேவர்துயர் தீர்த்தவடி வேல லாலி
குன்றை வெளி கண்டதிருக் குமர லாலி
குறுமுனி யார்க்கருள்செய் கந்த லாலி

சாம்பசிவ சங்கரிமா தேவி லாலி
சராசர மீன்றபரா சக்தி லாலி
மங்கல மளிக்கும்மக மாரி லாலி
மஞ்ஞைப்புல மங்கைசுக லாலி லாலி

# சிற்பாச்சாரியாரின் செய்தி

மயிலியற்புலத்தில் அரசாட்சி புரிகின்ற ஆறுமுக வேலனுக்கு ஆயிரம்கோடி நமஸ்காரம். ஆறுமுகனுக்கு ஆறுகோண மகாரதம் உருவாக்கி, திருவீதியிலே தவழ விடுவதில் ஸ்ரீ காளிகா சிற்பாலயம் பெருமகிழ்ச்சி அடைக்கின்றோம். இந்தத் தெய்வீகப் பணியிலே எம்மைத் திளைக்க வைத்த காளிகா பரமேஸ்வரி தாய், தந்தை குரு சிற்பச் சக்கிராதிபதி ஸ்தபதி செ.கந்தசாமி சிவத்தமிழ் செல்வி அம்மா அவர்கள் யாவரையும் பாதம் பணிந்து வணங்கி முருக வழிபாடு பண்டுதொட்டு தமிழர் கொண்டதொரு வழிபாடு. பேரொழியாய் விளங்கும் விஸ்வகர்மப் பரமசிவமாய் இறைதந்த சேயொளியான முருகொளியை பத்தாயிரம் வருடங்கட்கு முன்னர் முதல் தமிழ்ச் சங்கத்தில் ஐந்திறம் தந்த பழந்தமிழ்ச் சிற்பிமயன்.

பெருவெளியுறு நெறிமுருகுறும் பேரொளி ஒருவெளி அகவின்னொளிதரும் முருகொளி அறுசுடர்ப் பேரொளி... (ஐந்திறம் 798) எனச் செவ்வேளின் செம்மையைப் போற்றுகின்றார். மேலும் "உருநெறி முருகுறும் ஒமுறும் ஒளிக்கலை எனக் கூறுவார். தமிழ்க்கலை முதல்வன் மயன். எனவே உலகத்தோற்றத்திற்கு ஆதார ஒலியான ஆங்காரத்தின் (ஓம்) வடிவினன் முருகப் பெருமான்.

குமார தந்திரம் எனும் சிற்பநூல் அரும்பெருமானின் உருவப் பொலிவுகளையும் அவனுக்கு அமைக்கும் ஊர்திகளின் விதிமுறைகளையும் கூறி நிற்கின்றது. அதன் அடிப்படையில் அறுகோண வடிவினதானசித்திரத்தேரை ஆறு சில்லுகளும், பார்விதானங்களும் முகபுத்தர வேலைகளுடன் வட்டம், சதுரம், அறுகோணம், பன்னிருகோணம் என்பன சங்கமிக்கின்றன. பன்னிரு கண்களும், கரங்களும் உடைய சண்முகர் வீற்றிருக்கும் சிம்மாசனம் பன்னிரண்டு வட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன. பெருமான் வீற்றிருக்கும் மேற்பகுதி பவள மணிமண்டபமாகவும், ஆறு அட்ச, கோணமாகவும் விளங்குகின்றன. மேல் விதானத்தில் ஆறுகோண முகபுத்திர வேலைகளுடன் ஆறுமுகமும் பன்னிரண்டு கண்களுமாகப் பதினெட்டுக் கர்ணகுடங்கள் அழகுசெய்கின்ற கலசம் தாங்கும் மகாகர்ணகுடம் பன்னிரண்டு கோணங்களாக மிளிர்கின்றது. நிர்மாணிப்பில் பல இளைஞர்கள் பங்குகொண்டுள்ளார்கள். எமது ஸ்ரீகாளிகா சிற்பாலயத்தின் பிரதம சிற்பி ம.விஜயரட்ணம் அவர்கள் வரிவர்க்கங்களில் மிக நுணுக்கமான வேலைகளைச் செதுக்கியதுடன், பிரமாண்டமான நான்கு குதிரைகள் நிர்மாணிக்கப்பட்டு இருக்கின்றன. அழகிய தேருக்கு வர்ணம் தீட்டுகின்ற பணியை நெருங்கிய உறவினர்களான வர்ணவாருதிகள் விசிந்தன், செல்வதாஸ் தலைமையேற்றுச் சிறந்த முறையில் ஆற்றியுள்ளனர். இந்தப் பெரும்பணியை நிறைவேற்ற இரவு பகலாக உழைத்த கலைஞர்கள் பரிபாலனசபை, தேர்த்திருப்பணிச்சபைத் தலைவர், திரு.செ.பரமசிவம்பிள்ளை ஆலயக் குருக்கள் அவர்கள், ஊர்மக்கள், இளைஞர்கள் யாவருக்கும் கந்த வேட்பெருமானின் கருணை கிடைக்க வேண்டிப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

வணக்கம்

**ஸ்தபதி:**
**விஸ்வப்பிரம்ம ஸ்ரீ**
**செ. பாலச்சந்திரன் ஆச்சாரியார்.**

# அந்திரத் தேரோட்டும் அரும் பெரும் சிற்பியின் அதிசயப் படைப்பு

எல்லாம்வல்ல விக்னேஸ்வரப் பெருமானையும், எம் குலதெய்வமாகிய அன்னை பத்திரகாளியையும் எனக்கும் அண்ணன் பாலச்சந்திரன் அவர்கட்கும் கலைக்குருவாகிய சிற்பக் கலாநிதி ஸ்தபதி கந்தசாமி ஆச்சாரியார் அவர்களையும் மனதில் தியானித்துக்கொண்டு, அண்ணன் பாலச்சந்திரன் அவரினுடைய படைப்புகளையும் எடுத்துரைக்கவேண்டிய கட்டாய கடமைப்பாடு எனக்கு உள்ளது.

ஒரு சிற்பியின் லட்சணத்திலே அளவுப் பிரமாணம் தியானம் என்ற இரண்டும் துல்லியமாகக் கடைப்பிடிக்கவேண்டிய ஒன்று அராலியூர் மயிலியம்புலம் தேர்வேலை நிறை வுற்றுக் கொண்டிருக்கும் போது நான் அங்கு சென்று பார்த்தேன். திகில் ஓடியது.

முருகப்பெருமானுக்கு உகந்த மரபிலே சிறந்த மரபாகிய அந்திரம் என்று சொல்லப் படுகின்ற மரபிலே அத்தேரின் கட்டமைப்புக் காணப்படுகிறது. இருந்தாலும்கூட உத்தம சாகரத்திலேயே அத்தேரினுடைய பங்கு மானங்கள் கைக்கொள்ளப்பட்டுள்ளது. இத்தேரிற்கு ஆறுபார்கள் இடப்பட்டு, வான வரிமுதல் அலங்கார சேகரிவரை இரட்டைப் பஞ்சாங்கம் என்று சொல்லப்படுகின்ற நுணுக்க வேலைப்பாடுகள் உருத்ராகார வடிவில் நிறுவப்பட்டுள்ளது.

மேற்கூட்டிலே திரிதள விமானங்கள் அமைக்கப்பட்டு அதன் மேற்புறத்தில் அமைய வேண்டிய கர்ணகுடத்தை அறுகோணத்தையும் கோணமட்ட முகாந்தரத்தையும் ஒன்றுசேர்க்கக் கூடிய வகையில் பன்னிரு கோணமாக அமைத்துப் பார்ப்பவர் கண்களைப் பறித் தெடுக்கின்றார் பாலச்சந்திரன்.

வட்டம், சதுரம், நீள்வட்டம், நீள்சதுரம், எண்கோணம், அறுகோணம், பத்துக்கோணம், பன்னிருகோணம் என உயரம் அதிகரிக்கும் போது கூடிய கோணங்களில் தேரினைப் படைப்பது விதி மரபாக இருந்தாலும்கூட அதன் கோணங்களிலே பிறக்கும் காந்த அலை தேரின் மையப் பகுதியைத் தாக்கிப் புவியின் ஈர்ப்புக்கு இலக்காகிறது. எனவேதான் உயரம் கூடிய தேர்களைவிதிக்கமையக்கூடிய கோணங்களில் உருவாக்குகின்றார்கள் சிற்பிகள். இவ்விடயத் திலும்கூட அண்ணன் பாலச்சந்திரன் அவர்கள் மதி தவறவில்லை என்பதை மறுக்க முடியாது.

அலங்கார சேகரியையும், அறுகோணத்தையும் ஒன்றுசேர்ப்பது மிகவும் கடினமான விடயம். எனவே அலங்கார சேகரியை வேசர வடிவமாக்கி ஒன்றுசேர்த்துக் கோணங்கள் மாறுபடாத வகையில் தனது மதி நுட்பத்தை நாகாஸ்திரம்போல் பிரயோகித்துள்ளார் என்பதைக்

கண்கூடாகப் பார்த்து மெச்சக்கூடிய தாகவுள்ளது. அவற்றையும்விட பேரூர்மட்டம் ஆரம்பிக்கும் இடத்தில் அவ்விடத்து வர்க்கங்களுக்கு அமைவாக மரவு வழிவந்த ஏந்து போதிகளை புதுவிதமாக அமைத்து மெருகூட்டியது இன்னும் அற்புதங்களாகவும் அலங்காரமாகவுள்ளது.

அந்திர மரபாகிய அறுகோணத்தை நிறுவி அத்தேரிற்குரிய மூர்த்தி அக்னி மூலையைப் பாராமல் நேரே பார்த்து ஏறக்கூடிய வகையில் வியாழவரியிலும், விமானத்தின் விசாலத்திலும், விமானத்தின் ஒவ்வொரு தள பத்மத்திலும் அறுகோணமட்ட முகாந்தர வேலைப்பாட்டைப் புகுத்திப் பன்னிருயாளிகளைப் பொருத்தித் தேரின் அமைப்பையும் மெரு கூட்டி, அறுகோணத்தின் பெறுமதி குன்றாத வகையில் வடிவமைக்கப்பட்டது இன்னும் அண்ணன் பாலச்சந்திரன் அவர்களின் மதிநுட்பத்தை வியந்து பார்க்கத் தூண்டுகின்றது.

சூரிய சந்திரர்களை சில்லுகளாகவும் கிரகங்களைத் தட்டுகளாகவும் அண்ட வெளியை விமானமாகவும் கலசத்தை ஆதாரமாகவும் கொண்ட பிரபஞ்சமாகிய தேரை அறிவாகிய வேதங்கள் நான்கும் குதிரைகளாக இழுத்துச் செல்ல அறிவனாகிய பிரம்மன் செலுத்த நல்வினை, தீவினை என்ற இரண்டு வடங்களால் இளுக்கப் பிரபஞ்ச உருவத்தைப் படைத்தவனாகிய சிற்பி சறுக்கட்டையால் கஸ்ரங்களைக் கொடுத்து நல்வழிக்குக் கொண்டுவருகின்றான் என்பது தேரினுடைய தத்துவம்.

இத் தத்துவத்திலும்கூட மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில் தேர் எவ்விதத்திலும் விதிவிலக்கல்ல என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**ஸ்தபதி:**
A.T.P. **கோகுலன் ஆச்சாரி**
**குலவாணி சிற்பாலயம்,**
**திருநெல்வேலி.**

# தேரேறி வரு முருகா !

சீரேறு மயிலியற் புலமமர்ந் தடியார்கள்
　　செகமீதில் வாழ்வு பெறவே
ஓராறு திருமுகமும் உயர்கருணை விழிகளும்
　　உபயதிரு வடிமலர்களும்
கூரேறு வடிவேலுடன் வள்ளி தெய்வானை
　　கோலமுடன் வீற்றிருக்க
தேரேறி வருமுருகா! சரவணபவாவுன்றன்
　　திருக்கருணை மழை பொழிவையே

அடியவர்கள் அன்பவிழ ஆனந்தக் கூத்தாடி
　　அகங்குழைந் துருகி யுருகி
மடிமீதில் விழபொழிய மொழிகுழற அழுதுநின்
　　பாதமலர் பரவி நிற்க
மடையேறு வயல்சூழும் மயிலியற்புலமதனில்
　　வள்ளிதெய் வானையுடனே
வடியேறு தேரேறி வருமுருக! சண்முகா
　　வான்கருணை மழைபொழிவையே.

சரவணப் பொய்கையில் தவழ்ந்தறுவர் முலையுண்டு
　　தயாபரி உமையணைக்க
ஒருதிரு வுருவாகி வருமுருக சண்முகா
　　ஒளிவீசும் வடிவேலனே
பரவுநல் லடியாரின் பழவினைகள் தீர்க்கவே
　　பச்சை மயிலியற் புலத்தில்
திருநெடுந் தேரேறி வருமருட் குமரனே
　　திருக்கருணைமழை பொழிவையே.

ஆதிமறை போற்றிடும் ஆறெழுத்துந் தூய
　　அன்புடன் அகத்தழுத்தி
சோதி வடிவேலனே பாதியுமை பாலனே
　　சுகம் விழைந்தருள் செய்வாயென்
றோதுநல் லடியரின் அரோகரா எனுமொலி
　　ஓங்கு மயிலியற் புலத்து
வீதியில் தேரேறி வருமுருகா சண்முகா
　　வியன்கருணை மழை பொழிவையே.

(மயிலியற்புலம் கந்தசுவாமி கோவிலின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு 07.07.1982ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது.

**கிருஷ்ணர் நெல்லிநாதன் (அமரர்)**

# தேரேறி வாராய் முருகா

ஆறுமுகனுக்கு அழகான சித்திரத் தேர்
ஆறுதலைத் தருவாய் அடியார்க்கு – என்றும்
ஆதாரம் நீதான் கற்பகா வள்ளி மணாளா – உன்
ஆலயம் தேடிவந்தோம் அருள்தா. 1

மயிலியற் புலமதிலே மயிலேறி வந்தாய் – எம்
மனக்குறையைப் போக்கவே தேரேறிவாராய்
மக்கள் படும்துயர் நீக்க மகிழ்ந்தோடி வாராய்
மரகதமே மணிமுத்தே மால்மருகா அருள்தா. 2

கணீர் கணீரென ஒலிக்கும் கட்டிய மணிகள்
காணீர் காணீரென மிகுந்திருக்கும் கலையழகு
பாரீர் பாரீர் பாரில் இதன் தோற்றம்
வாரீர் விரைந்து வடம் பிடித்தோம் அருள்தா. 3

அடியவர்வடம் பிடிக்க சக்கரங்கள் சுழலும்
அடித்தட்டில் அழகான சித்திரங்கள் ஜொலிக்கும்
அலங்காரக் குதிரைகளும் சிங்கங்களும் தாவும்
அழகான பீடத்தில் ஆறுமுகா அருள்தா. 4

கற்பூரச் சட்டி ஏந்தி நேர்த்திக் கடன் தீர்க்கக்
காவடிகளாட்டத்தில் கந்தன் மனம் மகிழ்வான்
கற்பூரத் தீபத்தில் காட்சி நீ தந்தே
காத்திருக்கும் அடியவர்க்கு கருணைமழை பொழிவாய். 5

வெற்றிவேலாயுதம் சண்முகநாதன்
ஆசிரியர்.

## தேரேறி வரும் முருகா

### பல்லவி

தேரேறி வருகின்ற நின் திருக்காட்சி பெற
பாரெல்லாம் கூடும் வெள்ளம் பெருகும் (தேரேறி)

### அனுபல்லவி

ஊரெல்லாம் காற்று உவப்புறச் செய்தவனே – உடன்
பேரெல்லாம் கூறியே கீதம் இசைத்திட (தேரேறி)

### சரணம்

கதிரவன் குணதிசை எழுந்திடுமாம் போல
பதியதாம் மயிலை பதியில் உறைந்திடும் முருகா
குதிரைகள் பூட்டிய ஆறுகோண தேரினில் ஏறிய – நற்
கதி தரும் உருவினில் அருளது சொரிந்திட. (தேரேறி)

பக்தர்கள் கூடியே பாங்காய் வடம் பிடித்து
இத்தரை மீதினில் என் தவம் செய்தோம் என
பித்தரைப் போலவே நின் நாமங்களும் மொழிய
இத்திரு தேரது இசைந்தே உருண்டு வர. (தேரேறி)

ஆக்கம்: ஜெயம்

# மயிலியற் புலத்துறை மயில் வாகனக் கடவுளே

கங்கை மங்கை பிறை சடைக் கணிந்தோன் நெற்றிக்
கண்வந்து தேவர் துயர் துடைத்த தீன தயாநிதியே
மங்கையர் தாராகனமறுவர் முலையுண்டு சரவணத்தில்
தாமரையிலையில் தவழ்ந்த சரவண பவானந்தனே
பங்கையத்தில் அறுவராகிப் பச்சை நிற மேனியுமை
பாலுண்டு ஒருருவும் ஆறுமுகமும் கொண்டுதித்து
செங்கயல் நிறை வழுக்கலாறு சூழ் மழைதங்கு முகில் பார்க்கும்
வடவராலி சேர் மயிலியற் புலத்துறைந்தாய்
மங்கை உமைபாலனே செங்கை வடிவேலனே
மயில் வாகனக் கடவுளே.

தண்டையுஞ் சிலம்பும் கிண்கிணியும் புலம்பும்
தாரக சிவம் பூடுருவு சின வடிவேலும்
முண்டகன் சிறை செய்த முகமாறும் முருக பொழி பன்னிரு கண்ணும்
மிஞ்சும் அபயகர மீராறும் மின்னும் முந்நான்கு காதும்
வண்டலம்பு மாலைபுனை சக்தியிருவருடன் சக்தி மயில் மீதேறிக்
குருவடிவாய் என் முன் வாரோயோ குகனே குறத்தி மணவாளா
மிண்ட சந்த மூவசுரரையும் மாய்த் தொழித்து
மது சூதனன் மருமகனாகி மயிலியற் புலம் வளர்க்க வந்த
மங்கை உமைபாலனே செங்கை வடிவேலனே
மயில் வாகனக் கடவுளே.

அமரர் ச.சுப்பிரமணியம் ஆசிரியர்

# மயிலியற்புல முருகன் மேல் பாடிய
# அறுசீர் விருத்தம்

ஓம் என்ற பிரணவத்துட் பொருளாகி ஓங்கார சக்தியாகி
வரும் பிணி அகற்றியே அடியவர்க்கருளும் அருட்பெரும் ஞானகுருவே
தீராத நோய்களைத் தீர்த்தருள் புரிந்திடும் சிவசக்தி தந்த குமரா
செந்நெல் வயல் சூழ் செந்தமிழ் பலகலை செழித்தோங்கும் அராலியில்
வாகாக வள்ளிதெய்வயானையை வலமிடமாகக் கொண்டு வழுக்கையாற்றுக் கரையுறை முருகா
மயிலினங்கள் நடனமிட மருவினின்றடியார் தொழும் மயிலைக் கந்தசுவாமிக் கடவுளே.

சீர்மேவு வடவராலி செழித்தோங்க மெய்யடியார் தொழுதேத்தவும்
பாராளர் வழக்குரைத்துப் பிரித்துரிமை மாற்றவும் பட்டதுயர் கொண்ட அடியார்
மாறாத தம்உறுதி மகமாரி துணைபுரியத் தம் துயர் தீரவே
யார்க்கும் அடிபணியார் உமக்கடிமை பூண்டு தமக்கெனக் கோயில் கட்ட
மால்மருகன் குமரன் மயிலியற் புலவளவில் வந்துறைந்த முருகா
குறைவிலா அருள் தந்து நற்பதம் அளித்திடும் மயிலைக் கந்தசுவாமிக் கடவுளே

திருநீறும் ஐந்தெழுத்தும் சிவநெறிகள் ஓங்கவும் சேவிக்கும் அடியார்துயர் தீரவும்
கூறுதரும் வினையகலக் கும்பிடும் பக்தர்களின் குறைதீர்த்த குருவே
மாறுபட்ட வள்ளியை மணம்புரிய விரும்பியே பண்டாரமான குமரா
படைகொண்ட சூரனை உடல் துண்டாக்கியே மயில் மீதமர்ந்த முருகா
அருணகிரிக்குரைத்து அவனால் புகழ்கேட்ட அடியவர்க்கருளும் கந்தா
மறைஞான முனிவனுக்கு பிரணவம் உரைத்த மயிலைக் கந்தசுவாமிக் கடவுளே.

முருகன் அருளால் அருளப்பெற்றது
கு.அப்புக்குட்டி வேலாயுதர்
சைவசித்தாந்த சிவ அறிஞர்.

# ஆறுமுகவா அருள்தா

அராலிப்பதி வாழ் ஐயா
ஆறுமுகவா அருள்தா
கணபதியார் உருவில் வந்தாய்
மகமாரி அம்மனுடன் உறைந்தாய்

கருணை மழைபொழியும் கந்தா
உன் அருட்திறத்தால் எனக்கு வரந்தா
தேரேறி வருவாய் இன்று
தினம் எங்கள் துயர் தீர் நன்று

படை வீடமர்ந்த முருகா
பால குமர பகை தீர் ஐயா
கூர்வேல் கொண்ட முருகா
எங்கள் வினை தீரவே வந்து துணை நில்.

ஆறுமுகம் சுப்பிரமணியம்

* * * * * * * * * * * * * * * * * * * * * *

## வேலின் பெருமை

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம் புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே.

கந்தரலங்காரம்

* * * * * * * * * * * * * * * * * * * * * *

# அராலிக்கரசே

அராலிப் பதிவாழ் அரசே போற்றி
நித்தமும் உம்மை நினைத்தோம் போற்றி
முற்றிலும் உம்பணி புரிந்தோம் போற்றி
மூத்த கணபதிக்கு இளையோய் போற்றி

மயிலைப் பதியில் உறைந்தாய் போற்றி
மாலவன் தனக்கு மருகா போற்றி
பழனிப் பதிவாழ் பாலா போற்றி
எட்டுக்குடி வேல் ஈசா போற்றி

சரவணப் பொய்கையில் உதித்தாய் போற்றி
சாம்ப சிவனுக்கு உரைத்தாய் போற்றி
வண்ணமயில் ஏறிடும் மருகா போற்றி
தேவர் குறைகள் தீர்த்தாய் போற்றி

எங்கள் குறைதீர எழுந்தாய் போற்றி
தங்கும் மனதில் தவழ்ந்தாய் போற்றி
வெற்றி வேல் கைக்கொண்ட வேலா போற்றி
கற்றிடும் அடியவர் கருத்தே போற்றி.

சித்திரத் தேர் ஏறும் சிங்கார வேல் போற்றி
பச்சை மயில் உறையும் பழனி வேல் போற்றி
எத்திக்கும் வெற்றி தரும் வெற்றிவேல் போற்றி
தம் அடியார் குறைதீர்க்கும் வீரவேல் போற்றி.

பழனி உமாதேவா

# தேர் ஓர் ஆலயம்

இந்துக் கோயிற் கலைமரபில் "தேர்" என்பது புனிதமான ஒரு கலைச்சின்னமாக விளங்குகின்றது. " தேர்" என்ற தமிழ்ச் சொல் வடமொழியில் "இரதம்" என வழங்கப்பெறும். "தேர்" எனும் சொல் இரதம், விமானம், இயந்திரம், யந்திரம், எந்திரம், அரி, கவரி, குயவு, கூவிரம், கூவிரி, கொடிஞ்சி, சபந்தனம், திகிரி, வையம், எனப்பல பெயர்களைக் குறித்து நிற்பதை மதுரைத் தமிழ்ப் பேரகராதி மூலம் அறியமுடிகின்றது. இன்று "தேர்" என்னும் சொல் இறைவனது ஓர் ஊர்தியைக் குறிக்கும் ஒரு சொல்லாகவே வழங்கப்பட்டு வரினும், அதன் தோற்றத்தை நுணுகி நோக்கினால் அதன் ஆரம்பம் ஓர் ஆலயமாகவே இருந்ததைக் கண்டு மகிழலாம். அசையாத ஓர் இறை இருப்பிடமாக ஆலயம் விளங்குவதுபோல, அசையும் ஓர் ஆலயமாகத் "தேர்" திகழ்கின்றது எனலாம். சைவர்கள் ஊன் உடம்பை ஆலயமாக வும், தேராகவும் கருதி வழிபடும் பண்பாட்டுச் சிறப்புடையவர்களாக விளங்குகின்றனர். தேர் ஓர் ஆலயம் என்பதனை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழகக் கோயிற் கட்டடக் கலை வரலாற்றில் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் மாமல்ல புரத்தில் தனிப்பெரும் கற்பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட "பஞ்சபாண்டவர் ரதங்கள்" என வழங்கப்படும் "தேர்க் கோயில் கள்" தனிச்சிறப்புடையவை. மாமல்லபுரத்தில் மூன்று அடுக்குகள் கொண்ட விமானத் தையும், சோமஸ்கந்தர் சிற்பத்தையும் கொண்ட தருமராசர்தேர், தூண்களின் அடிப்பாகத்தில் அமர்ந்த சிங்க உருவத்துடன் நீள்சதுர அமைப்பில் விளங்கும் பீமசேனன் தேர், நான்கு நிலைகளையுடைய விமான அமைப்புடைய அருச்சுனன்தேர், துர்க்கையின் சிலையுடன் விளங்கும் திரௌபதி தேர், யானையின் முதுகு போன்ற அமைப்பினைக் கொண்ட சகாதேவன் தேர் என்பவற்றை "பஞ்சபாண்டவர் தேர்கள்" என்று வழங்கிவரினும் அது ஏற்புடைய ஒரு வலிதான கருத்து அல்ல எனலாம். அக் காலத்தில் விளங்கிய இந்துக் கடவுளர்களின் "தேர் ஆலயங்கள்" என்றே அவற்றைக் கூறலாம். இத்தேர் ஆலயங்களின் தர்க்க ரீதியான வளர்ச்சி நிலைகளை மாமல்லபுரத்துக் கடற்கரைச் கோயிலிலும், தஞ்சைப் பெருவுடை யார் கோயிலிலும் காணமுடிகின்றது. "தேர்" என்பதற்குரிய ஒத்தசொற்களில் "விமானம்" என்ற சொல்லையும் மதுரைத் தமிழ்ப்பேரகராதி குறிப்பிடுகின்றது. "விமானம்" என்பது இறைவன் எழுந்தருளியிருக்கும் கருவறையின் அடிப்பகுதிமுதல் முடிவரையுள்ள பகுதியைக் குறிக்கும். இதனடிப்படையில் "விமானம்" என்பது ஆரம்பத்தில் கோயிலையே குறித்து நின்றது என்பதும், "தேர்" என்பது விமானக் கோயிலின் குறியீடே என்பதும் புலப்படுகின் றது.

இந்துக்கோயிலை நினைவு கொள்ளும் வகையிலேயே தேர் அமைக்கப் பட்டது. இதனை பி.ஆர்.ஸ்ரீநிவாசன் என்பவர் "கடவுளின் கோயிலைப் போன்றே அமைக்கப்பட்ட தேரின் அடிப்பாகத்தில் பூலோக வாழ்க்கை, ஆகாய வாழ்க்கை, சுவர்க்க வாழ்க்கை என்னும் இவற்றைச் சித்திரிக்கும் அழகிய பல உருவங் களைக் காணலாம். பூலோக வாழ்க்கையில்

அரசன் கொலுவிருத்தல் போன்ற காட்சிகளும், நடனம் செய்வது போன்ற பலதுறைகளைச் சித்திரிக்கும் உருவங்களும் உண்டு. காமத்துப் பாலைச் சித்திரிக்கும் ஒருசில பொம்மைகளும் இங்கு மூலைமுடுக்குகளில் பொதிந்திருப்பது உண்டு. வான வாழ்க்கையைச் சித்திரிக்கும் பொம்மைகளில் கின்னரர் போன்றவை சேர்ந் தவை. சுவர்க்க வாழ்க்கையைச் சித்திரிக்குமாறு நடராசர், விஷ்ணு, ஆறுமுகன், கணநாதன் முதலியவர்களின் உருவங்கள் இருக்கின்றன. சைவர்களின் கோயில் தேர்களில் வைணவக் கதைகளைச் சித்திரிக்கும் உருவங்களும் காணப்படும். இவ்வாறு நுண்கலைக்கு இரு ப்பிடம் போன்ற வேலைப்பாடுகள் உள்ள தேர் வேலைகளில் சமயப் பூசல்களின் அறிகுறிகள் இல்லாதிருப்பது கருதத்தக்கது" என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். இதனை நுணுகி நோக்கும்போது, தேரும் ஆலயமும் ஒன்று என்பது நன்கு புலனாகின்றது.

இந்திய கோவிற்கட்டட வகைகளை நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்குவர். நாகரம் என்னும் பிரிவைச் சேர்ந்த கோவில்கள் வட இந்தியாவில் உள்ளன. இவ்வகைக் கோயில்கள் அடியில் இருந்து உச்சிவரை நாற்சதுரமாக அமையும். வேசரம் என்னும் வகையைச் சார்ந்தவை வட்டவடிவமாக அமைந்திருக்கும். திராவிடம் என்னும் பிரிவைச் சார்ந்த கோவில் கள் தென்னிந்தியாவில் அதிகளவிற் காணப் படுகின்றன. தேர்களையும் அவற்றின் அமைப் பைக் கொண்டு நாகரம், வேசரம், திராவிடம் என வகைப்படுத்துவர். சதுர வடிவான தேர் "நாகரம்" எனப்படும். எண்கோண வடிவான தேர் "திராவிடம்" ஆகும். வட்ட வடிவமான தேர் "வேசரம்" எனப் பெயர்பெறும். அறுகோண வடிவினதான தேரை "அந்திரம்" என அழைப்பர். ஆலயத்திற்கும் தேருக்கும் உள்ள இத்தகைய வடிவ ஒற்றுமைகள் தேர் ஓர் ஆலயம் என்பதைப் புலப்படுத்துகின்றது.

சுமார் கி.பி. 11ஆம் நூற்றாண்டுவரை தமிழகக் கோயிற் கட்டடக் கலை வரலாற்றில், கருப்பக் கிருகத்திற்கு முன்புறம் ஒரு மண்டபம் இருந்தது. இது சதாராண மண்டபமாகவே இருந்தது. மண்டபமும் கருவறையும் ஒரு காலத்தில் பிரிக்கப்பட்டிருந்தன. பிற்காலத்தி லேயே அவை இணைக்கப்பட்டன.

அந்நிலையில் அம்மண்டபம் கல்லாலான சக்கரங்களைக் கொண்டு குதிரைகள், யானை கள் முதலியவற்றால் இழுக்கப்படுவது போன்ற அமைப்பினைக் கொண்டு தேர் போன்றதாக உருப்பெற்றது. இவ்வகை மண்டபங்களில் மிகப் பழையதும், அழகு மிக்கதுமானது தாராசுரத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மண்டபமாகும். தில்லையில் சிற்றம்பலத்துக்கு எதிரிலுள்ள மண்டபமும் இவ்வகையைச் சேர்ந்ததாகும். தஞ்சைப் பெருங்கோயில் வளாகத்தின் வடமேற்கில் அமைந்து விளங்கும் முருகன் கோயிலும் இவ்வகையைச் சேர்ந்த காண்டற்கரிய தேர்க் கோயிலாக மண்ட பத்துடன் விளங்குகின்றது.

தென்கடம்பூர்த் திருக்கரக் கோயிலில் கருப்பக் கிருகத்தையொட்டித் தேரமைப்பைக் காணலாம். கும்பகோணம் நாகேசுரர் கோயில், கும்பகோணம், சாரங்கபாணி சுவாமி கோயில், தில்லைப் பாண்டிய நாயகம் கோயில், சூரியனார் கோயில், தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் முதலிய கோயில் மண்டபங்கள் வேலைப்பாடு மிகு சக்கரங்களுடன் கூடிய தேரமைப்பில் உள்ளன.

டாக்டர் ம.வேதநாதன்,
இந்துநாகரிகத்துறைத் தலைவர்,
யாழ் பல்கலைக்கழகம்.

# அன்புச் சமயம்

இந்து மதம் இந்தியாவினுடைய சமயம். இதனுடைய தொன்மையான நிலை சிவசமயமே யாகும். சிந்துவெளி நாகரிக எச்சங்கள் இதற்குச் சான்று காட்டுகின்றன. சிவசமயம் பற்றி நாம் பேசினால், அது இந்து சமயம் பற்றியதுமாகும். எனவே சிவசமயத்தின் ஒரேயொரு பண்பினை மட்டும் இக்கட்டுரை யிலே விவரிக்கலாமென எண்ணுகிறேன். சைவ சமயத்தினுடைய அடிப்படையைச் சைவ சித்தாந்த அறிஞர் சிவபாதசுந்தரனார் பின்வரு மாறு கூறிகிறார்:

"ஒரு கடவுள் இருக்கிறார். பல ஆன்மாக்கள் இருக்கின்றன. இவற்றின் அறியுந் திறமை ஆணவத்தால் தடுக்கப்படுகின்றது. ஆன்மாக்கள் கன்மத்தைச் செய்து அதன் விளைவுகளை அனுபவித்தல்மூலம் இத் தடைகள் படிக்கிரமமாக அகற்றப்படுகின்றன. பிழையான செயல்களின் விளைவு துன்பம். சரியான செயல்களின் விளைவு இன்பம் என்பது கன்ம விதி. ஒவ்வொரு ஆன்மாவும் எதுவித விலக்குமின்றி இறுதியில் முத்தியையே (பேரின்பத்தை) அடையும்"

இந்த வகையில் எல்லா ஆன்மாவுக் கும் இறைநிலை அளிக்கும் சமயம் இந்து சமயப் பிரிவுகளுள் ஒன்றான சிவசமயமாகும். இச்சமயத்தினுடைய இன்றியமையாத பண்பாக அன்பு எடுத்துக் கூறப்படுகின்றது. திருமூலர்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிந்திலர்
அன்பே சிவமாவது ஆரும் அறினிலா
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமந்த திருப்பாரே"

என்று கூறுகிறார். அன்பும் எவ்வாறு அன்புச் சமயமாயுள்ளது என்பது பற்றிச் சுருக்கமாக இக்கட்டுரையிலே கூறப்படவுள்ளது.

இறை ஆர்வத்தினை ஊட்டுவதாக அமைவது இறை அன்பேயாகும். "அன்பீனும் ஆர்வமுடைமை" என்று வள்ளுவர் கூறுகிறார். இதனைப் பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார், கண்ணப்பநாயனாருடைய வரலாற்றினூடாகப் புலப்படுத்துகிறார். குழந்தைப் பருவத்திலே கண்ணப்பருக்குச் சூட்டப்பட்ட பெயர் திண் ணன். திண்ணனும் அவனுடைய தோழன் நாணனும் வேட்டையாடத் திருக்காளத்தி மலைப்பக்கமாக வந்தபோது திண்ணனுக்கு அந்த மலையின் உச்சிக்குச் செல்லவேண்டு மென்னும் ஆர்வம் ஏற்படுகின்றது. அந்த ஆர்வம் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தது அன்பே யாகும். திண்ணனே அன்பு வடிவமாகி விட்டான். இதனைச் சேக்கிழார், திண்ணனும் நாணனும் காளத்திமலையிலே ஏறும் காட்சியை வர்ணிக் கும்போது உணர்த்துகிறார்;

"நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போலஐயர்
நீணிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில்"

இப்பாடலிலே "நாணனும் திண்ண னும்" என்று அமைபவேண்டியவிடத்து "நாண னும் அன்பும்" என்று சேக்கிழார் கூறுகிறார். இங்கே திண்ணனார் அன்பாகிவிட்டார். ஒரு சைவ நாயனார் அன்பு வடிவமாக நோக்கப் படுகிறார். சைவநீதி அன்பினை அடிப்படை

யாகக் கொண்டது. மனுநீதி கண்ட சோழன், தன்னுடைய கன்றினை இழந்து வந்து ஆராய்ச்சி மணியை அடித்த தாய்ப் பசுவுக்கு இரக்கங்கொண்டு தன் மகனையே தேரின் கீழிட்டுக் கொன்று நீதி வழங்கியவன். அரச வீதியிலே தேரிலே சென்ற இளவரசன் வேண்டு மென்றே பசுக்கன்றினை மோதவில்லை. தேரிலே பூட்டப்பட்ட மணிகள் ஒலிக்கவே அவன் தேரைச் செலுத்தியுள்ளான். அரச வீதியில் உண்மை யிலே பசுக்கன்று வந்திருக்கக் கூடாது. இவ்வா றெல்லாம் மன்னனுக்கு அமைச்சர்கள் எடுத்துக் கூறி இளவரசனில் பிழையில்லை என்று வாதிட்டனர். ஆனால், எதிர்கால மன்னனாக முடிசூடக்கூடிய இளவரசன் தேரிலே சென்றா லும் மிக அவதானமாகச் சென்றிருக்க வேண்டும். இந்த அவதானம் இல்லாமல் ஒரு நாட்டை எவ்வாறு ஆளலாம் என்பதே மன்னனு டைய சிந்தனை. மனிதர்களுடைய குறைகேட்டு நீதி தீர்ப்பதற்கு மேலாக ஒரு பசுவின் குறையறிந்து நீதி தீர்க்கும் சைவநீதி உலக மெல்லாம் பரவவேண்டும் என்பதே சேக்கிழாரு டைய விருப்பம். இதனாலே,

"வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது
உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக
உலக மெல்லாம்"

என்று பாடியது மட்டுமன்றி, மனுநீதி கண்ட சோழனின் நீதி தீர்த்த வரலாற்றைத் தன் காவியத்தின் திருநகரச் சிறப்பிலே எடுத்துரைத் துள்ளார்.

தமிழரின் தனிப்பெருஞ் சிறப்பை உலக மெல்லாம் எடுத்துக்காட்டும் திருக்குறளிலே வள்ளுவன் விருந்து என்றொரு அதிகாரத்தை அமைத்துள்ளான். விருந்து அன்பை அடிப்படை யாகக் கொண்டது. வருபவர்க்கெல்லாம் உணவளிக்கும் பண்பினை இந்துமதம் கொண்டமைகின்றது. இதன் சிறப்பினை விளக்க சைவ சமயத்திலிருந்து பல எடுத்துக் காட்டுகளைத் தரலாம். அப்பூதியடிகள் என்னும் சிவனடியார் தன்னுடைய ஊரிலே வருபவர்க் கெல்லாம் உணவு கொடுத்த செய்தியினைப் பெரியபுராணம் கூறுகின்றது. தன்னுடைய வீட்டிலே உணவாக்குதற்கு எதுவுமில்லாத வேளையிலே, அடைமழை பெய்து கொண்டிருந்த இரவு வேளையிலே வந்த சிவனடியாருக்கு உணவு வழங்கப் படாதபாடுபட்ட இளையான் குடிமாறனுடைய சிறப்பினையும் பெரியபுராணம் பாடுகின்றது. பெரிய அளவிலே செய்ய வேண் டிய அன்னதானத்தினைச் சிறிய அளவிலே ஒவ்வொருவரும் மனத்திலும் செயலிலும் கொள்ளவேண்டும் என்பதை,

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"

என்னும் திருமூலர் வாக்குக் கூறுகின்றது. இறைவனை நிறைய மலர்கள் கொண்டு வழிபடலாம். ஆனால் இறைவனை நன்றாக மனத்திலே நினைந்துகொண்டு ஒரு பச்சிலை யை இட்டால், அது சிறந்த வழிபாடாகிவிடும். இதுபோன்றே பாரிய அளவிலே பலருக்கும் உணவிடப் பொருள் இருப்பின் அன்னதானம் செய்யலாம். இவ்வாறு உணவு வழங்கு பவருடைய மனம் இறைபக்தியும் பரநல விருப்புமுடையதாகவே இருக்கும். இத்தகைய மனம் உடையவர்கள் உண்ணும்போது பிறருக்கு என ஒரு பிடி அன்னத்தினை எடுத்துவைப்பர். ஒவ்வொரு நாளும் உணவுக்கான அரிசியிலே ஒரு பிடி எடுத்து வைத்தால் காலகதியிலே

பெருமளவு அரிசி வந்துவிடும். அன்னதானம் செய்பவர்களிடம் அதைக் கொடுத்து அத்தானம் மேலும் சிறப்படையச் செய்யலாமல்லவா? அடியார்களுடைய அன்பினைவிட இறை அன்பு இன்னும் மேலானது. மாணிக்கவாசகர் இறைவனுடைய அன்பினை நினைக்கும்போது தாயை உவமையாகக் காட்டுவார். தன்னுடைய சிறுமையைக் கூறும்போது நாயை உவமையாக்குவார்.

*"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்*
*தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"*

என்று சிவபுராணம் கூறுகின்றது. தன்னலமில்லாது, பால் நினைந்து ஊட்டும் தாயன்பு ஈடு இணையற்றது. ஆனால், இறைவனுடைய அன்போ அந்தத் தாயின் அன்பைவிடச் சிறந்தது என்பதை இறை அநுபூதியாளர் கூறியுள்ளனர்.

இந்து சமயத்துள் ஒரு பகுதியாகப் பேசப்படும் சைவ சமயம் அன்பே உருவாய சமயம். அது அன்பே உருவான சிவனை இறைவனாகவும், அன்பே உருவான அடியார்களையும், அன்பினை வளர்க்கும் சமயக் கோட்பாட்டினையும் உடையதாயுள்ளது. சென்ற காலத்துப் பழுதிலாத் திறனும் இனி வருங்காலத்துச் சிறப்பினையும் கொண்டதாக அமையும் அன்புச் சமயம் எங்களுடைய சமயம் என்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

**பேராசிரியர், கலாநிதி அ.சண்முகதாஸ்**
**தகைசார் வாழ்நாட் பேராசிரியர்**
**(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

**************************

## முருகன் பெருமை

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத்துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

கந்தரலங்காரம்

**************************

# முருக வழிபாடு ஒரு நோக்கு

மனித வரலாற்றிலே சமயம் ஆதிகாலம்தொட்டு ஒரு முக்கியமான இடத்தினை வகித்து வந்துள்ளது. அவ்வவ்நாடுகளின் தட்பவெப்ப நிலைகளுக்கேற்பவும், அவ்விடங்களில் வாழும் மக்களின் சமூகநிலைக்கேற்பவும் சமயங்கள் தோன்றி நிலவி வந்துள்ளன. மக்களின் உலகியல் வாழ்விலும், ஆன்மீக வாழ்விலும் சமயங்களின் தாக்கம் பல்வேறு பரிமாணங்களிலேற்பட்டு வந்துள்ளது. தென் ஆசியாவிலும் சிந்துசமவெளி நாகரிகம் தோன்றுமுன்பே (கி.மு. 2500க்கு முன்பே) இந்து சமயத்தின் சில முன்னோடிக் கருத்துக்கள் அம்மன் வழிபாடு, லிங்க வழிபாடு, எருது வழிபாடு, மரவழிபாடு போன்றன நிலவியதை அறியக்கிடக்கின்றது. இந்து சமயத்தின் உட்பிரிவுகளிலொன்றான கௌமாரம் – முருக வழிபாடு சிந்துசமவெளி நாகரிகத்தில் நிலவியிருந்திருக்கலாம். ஆனால் வேதங்களிலும் அவற்றை அடுத்துத் தோன்றிய இதிஹாஸங்கள், புராணங்கள் எழுந்த காலகட்டங்களிற் குறிப்பாகப் பின்னைய இரண்டுவகை நூல்கள் எழுந்த காலம் தொடக்கம் முருக வழிபாடு சிறப்பாக நிலவி வந்துள்ளது. வடஇந்தியாவிலே தோன்றிய இந்நூல்களில் முருகபெருமான் ஸ்கந்த(ன்), குமார(ன்), சுப்ரஹ்மண்ய(ன்) முதலிய பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளார். வழிபடப்பட்டுவந்தார்.

தென்னிந்தியாவிலே குறிப்பாகத் தமிழ்நாடு முருகவழிபாட்டின் முக்கியமான ஒரு பிரதேசமாகும். சங்ககாலத்திற்கு முன்பே முருக வழிபாடு தமிழகத்திலே நிலவிவந்துள்ளது. தென் தமிழ்நாட்டிலுள்ள ஆதிச்சநல்லூரிலே கிடைத்துள்ள தொல்லியற் சின்னங்களிலே அவருடைய ஆயுதமாகிய வேலும், கொடியிலுள்ள சேவலும் கிடைத்துள்ளன. எனவே இக்காலகட்டத்திலும் (சுமார் கி.மு 1200. வரையில்), இதற்கு முன்பும் அங்கு முருக வழிபாடு நிலவியதை அறியலாம். யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்து ஆண்டுக்கு முன்பே முருக வழிபாடு நிலவியதற்குக் கந்தரோடையிலே சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலே பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில தொல்லியலாளர் நடத்திய அகழ்வாராய்ச்சியின்போது கிடைத்த வேல் சான்று பகரும்.

சங்ககாலத் தமிழகத்திலே நிலவிய மிகப் பிரபல்யமான வழிபாடுகளில் ஒன்று முருக வழிபாடாகும். இதற்குச் சங்க நூல்கள் (கி.மு. 3ம் நூற்றாண்டு – கி.பி. 3ம் நூற்றாண்டு வரை) நன்கு சான்றுபகருவன. அரசர் தொடக்கம் அடிமட்டத்திலுள்ள மக்கள் வரையிற் பலர் இவ்வழிபாட்டினை மேற்கொண்டிருந்தனர். தமிழில் எழுந்த முதலாவது சமய நூலாகிய திருமுருகாற்றுப்படை முருகப்பெருமானைப் பற்றியதே. இது சங்ககால முடிவில் அல்லது சற்றுப் பின்னர் எழுதப்பட்டதெனக்கருதப் படுகிறது. தமிழகத்தில் அவருக்குச் சிறப்பாக உள்ள ஆறுபடை வீடுகள் பற்றி இந்நூல் கூறியிருப்பது கவனித்தற்பாலது. தமிழரின் தனிச்சிறப்பு வாய்ந்த தெய்வமாகவும் முருகன் போற்றப்படுகிறான். சங்ககாலத்தின் பின்னரும் முருக வழிபாடு தொடர்ந்து நிலவியதற்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்

களும், பல்லவர் – பாண்டியர் காலத்திய சில பக்திப்பாடல்களும் சான்றுபகருவன. பின்னர் சோழப் பெருமன்னர் காலமுடிவில் முருகனின் சிறப்பினை விரிவாகக்கூறும் கந்தபுராணமும், தொடர்ந்து வேறு சில புராணங்கள் குறிப்பாகத் தலபுராணங்களும், சிற்றிலக்கியங்களும், இசைப்பாடல்களும், இசை நாடகங்களும் பிறவும் தோன்றின. தொடர்ந்து இன்றுவரையும் முருகன் புகழ்கூறும் பல ஆக்கங்கள் எழுதப் பட்டு வருகின்றன. தமிழிலயக்கியம் மட்டு மன்றிச் சமஸ்கிருத இலக்கியம் போன்றவற்றி லும், தமிழகக் கட்டடக்கலை, சிற்பம், ஓவியம், இசை, நடன, நாடக மரபுகளிலும் முருக வழிபாட்டின் சிறப்புக்களையும், தன்மைகளையும் காணலாம். சாஸ்திரீயக் கலை மரபுகளிலும் இப்போக்கினைக் காணலாம். சுருங்கக்கூறின் பழைய காலந்தொட்டு தமிழரின் சமய, பண் பாட்டு மரபுகளுடன் ஒன்றிணைந்த தெய்வமா கவே முருகப்பெருமான் விளங்குகின்றார்.

சைவசமய முழுமுதற் கடவுளாகிய சிவபிரானதும், அவரின் சக்தியாகிய உமாதேவியின் இளைய மகனாகவும், விநாயகரின் இளைய சகோதரனாகவும், திருமாலின் மருமகனாகவும் (சகோதரியின் மகன், மக்கள், வள்ளி, தெய்வானையின் கணவன்) இச்சாசக்தியாகிய வள்ளியினதும், கிரியா சக்தியாகிய தெய்வானையினதும் நாயகனாகவும், குரியனாகவும் விளங்கும் முருகப்பெருமான் இந்து சமயத்தின் உட்பிரிவுகளாகிய காணாபத்தியம், (கணபதி வழிபாடு), சைவம், சாக்தம், வைஷ்ணவம், கௌமாரம் (முருக வழிபாடு), சௌரம் (சூரிய வழிபாடு) ஆகியனவற்றை ஒன்றிணைத்து விளங்கும் அற்புதத் தெய்வமாகவும் இலங்குகிறார். அதேவேளையில் சிவபிரானே வெவ்வேறு பெயர்களில் இவ் அறுவகைச் சமயத் தெய்வங்களாகவும் விளங்குகின்றார்.

இதிஹாஸ, புராணக்கதைகளின்படி தீமை அல்லது அறியாமை அல்லது மும்மலங் களின் வடிவமாக விளங்கும் அசுரர்களைக் குறிப்பாகச் சூரனையும் அவனது சகோதரரான சிங்கமுகன், தாரகன் ஆகியோரையும் அழித்துத் தேவர்களைப் பாதுகாக்கவே சிவபிரானின் நெற்றிக்கண்ணிலிருந்து முருகன் தோன்றி னான் எனக் கூறப்படுகின்றது. எனினும் சிவனே முருகனாக வடிவம் தாங்கினார் என்பதைக் கந்தபுராணம்

"ஆதலின் நமது சக்தி ஆறுமுகனவனும் யாமும்
பேதகமன்றானம் போல் பிரிவிலன் யாண்டும்
நின்றான்
ஏதமில் குழலிபோல்வான் யாவையு முணர்ந்தான்
சீரும்
போதமுமழிவில் வீடும் போன்றினர்க் கருள
வல்லான்"

எனச் சிவபிரானே கூறியிருப்பதாகக் குறிப்பிட்டிருப்பது மனங்கொள்ளற்பாலது.

மேலும் முழு உலகினையும் தீமைகளி லிருந்து (அசுரர்களிலிருந்து) காப்பாற்றுதற் காகவே அருவும், உருவுமாக விளங்கும் அநாதியான பரம்பொருளே சோதிவடிவிலே முருகனாகக் கருணை பொழியும் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டவராகத் தோன்றினார் என்பதைக் கந்தபுராணம்

"அருவமுருவமாகி அனாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய்நின்ற சோதிப் பிழம்பதோர்
மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன்
உலகமுய்ய"

என ரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது.

பழைய காலத்திலே தமிழர் இயற்கை யோடியைந்த வாழ்க்கையை நடாத்தினர். இயற்கையிலேயே இறைவனைக் கண்டு களித்தனர். சூரியன் எழுகின்றபோது அதிலே காணப்பட்ட ஒளிவிளக்கம் அவர்களுக்குச் செவ்வொளியாகத் தென்பட்டது. இவ்வாறு காலையில் தோன்றும் சூரியன் சிவந்த ஒளியுடன் காணப்படும் செவ்வொளி விளக்கம் இறைவனது உண்மை உரு எனவும், அதனால் ஏற்படும் செயல்களே இறைவனின் அருட்செயல்கள் என மக்கள் நம்பினர். சூரியனின் சிவந்த ஒளியை இறைவனாகக் கண்டு வணங்கத் தொடங்கினர். இறைவனை (முருகனை) "சேயோன்", "செவ்வேள்" என அழைத்தனர். "ஞாயிறு கடற் கண்டாங்கு" என்பதும் ஈண்டு குறிப்பிடற்பாலது. முருகப் பெருமானின் தந்தையாகிய சிவனும் அக்கினி வடிவினராகவும், சிவந்த திருமேனியர் (சிவனெனும் செம்மேனியன்) ஆகவும் வர்ணிக்கப்படுகின்றமை ஒப்பிடற்பாலது.

விடியற்காலையிலே கிழக்குத் திசையிலே பொன்நிறமான செஞ்சுடர்வீசி ஒளிவிடும் பகலவனைக் காணும்போது சில உண்மைகள் புலப்படும். ஆதவனின் ஒளி நான்கு திசைகளிலும் மேலும், கீழுமாக ஆறுபக்கங்களில் ஒளிகாட்டுவதால் அதற்கு ஆற்றல் அளிக்கும் இறைவனின் ஆறுமுகங்களின் உண்மை புலப்படுகின்றது.

ஆதவன் எழுந்தவுடன் அவனின் ஒளி பட்டுக் கடல்நீர் தனது நீலநிறத்தினைச் செவ்வையாக விளங்கிக்காட்டுவதால் அது மயில் எனக் கருதப்பட்டது. அலையின் ஆசைவுகளால் நீரில் தோன்றும் ஒளி மயிலின் தோகையிலுள்ள கண்களைப்போலத் தென்பட்டது. சூரியன் செங்கதிர்வேலெனக் கருதப்பட்டது. அது "கதிர்வேல்" எனப் பெயர்பெற்றது. எனவே கடலில் எழும் ஆதவனின் காலைக்காட்சி நீலமயில்மேல் ஏறிவரும் முருகப்பெருமானின் அருட்காட்சியாக இலங்குகின்றது.

உலகம் அனைத்திலும் கலந்து அதனை இயக்கும் தலைவனுக்கு ஞாலத்தையே திருமேனியாகவும், அதற்கு அடிப்படையாக உள்ள ஐம்பூதங்களும், உயிருமாகிய ஆறினையும் திருமுகங்களாக உருவகித்துக் கூறும் வழக்கம் உள்ளது. எங்கும் இறைவனின் இயல்பை மக்களுக்கு நினைவூட்டக்கருதிய ஞானிகள் இறைவனை சண்முகப்பெருமான் அல்லது ஆறுமுகப்பெருமான் என்றனர். இறைவனின் ஆறுதிருமுகங்களுள் ஐந்து திருவைந்தெழுத்தாகும். ஆறாவது திருமுகம் ஓங்காரமாகிய பிரணவத்தைக் குறிக்கும். இதனையே கந்தபுராணம் "ஓமெனப்படுங் குடிலையே ஒப்பிலா முருகன் மாமுகத்துள் ளொன்றாம்" எனக் குறிப்பிடுகின்றது.

கடவுள் என்றும் நிலைத்த பரம்பொருள் என்பவர்கள் அவரைச் சத்தென்றும், முற்றறிவினன் என்பவர்கள் சித்தென்றும், பேரின்ப வடிவினன் என்பவர்கள் ஆனந்தன் என்றும் கூறுவர். இம் மூன்றும் சேர்த்து "சச்சிதானந்தம்" என அழைக்கப்படும். இதற்கேற்றவாறு முழுமுதற் கடவுளைத் தந்தையென்றும், தாயென்றும் வழிபடுதல் மரபு. மேலும் இறைவன் – ஆன்மா தொடர்புகளைத் தந்தை – சேய், தாய் – சேய், நாயகன் – நாயகி, ஆண்டான் – அடிமை, நண்பன் – நண்பன், குரு – சிஷ்யன் முறைகளிலே பாவனைசெய்து விளக்கும் மரபும் உண்டு. முருகப்பெருமானுக்கும், ஆன்மாவுக்கு

முள்ள பக்திப்பாவனைகள் இவ்வாறும் விளக்கப்படும்.

முருகப்பெருமான் பஞ்சபூதங்களுக்குக் காரணமானவன். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிந்து தோற்றம்பெற்று, வாயுவினாலும் அக்கினியாலும் சுமந்து செல்லப்பட்டு, சரவணப் பொய்கையிலே அல்லது கங்கையிலே விடப்பட்டு கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு பூமியிலே பல திருவிளையாடல்களை இவர் செய்துள்ளார். இவருடைய ஆறு திருமுகங்கள் பற்றிய விளக்கங்கள் இரண்டு ஏற்கனவே கூறப்பட்டுள்ளன. ஆறு என்ற எண் முக்கியமான ஒன்றாகும். முருகனை ஆறு கார்த்திகைப் பெண்கள் வளர்த்தனர். அவருடைய திருமுகங்கள் ஆறு. அவருக்குச் சிறப்பான படைவீடுகள் ஆறு. சுவாமி சிவானந்தர் "ஞானம், வைராக்கியம், பலம், கீர்த்தி, செல்வம், ஐஸ்வரியம் ஆகியனவற்றை ஆறுதிருமுகங்கள் குறிப்பாக உணர்த்துவன" எனக் குறிப்பிட்டுள்ளார். முருகன் முத்திக்கு வழிகாட்டி, சைவசித்தாந்தம் கூறும் மந்திரம், பதம்(சொல்), வர்ணம்(எழுத்து), புவனம் (உலகம்), தத்துவம், கலா(பகுதிகள்) எனும் ஆறு அத்துவாக்கள் இதில் உள்ளடங்கியுள்ளன எனக் கூறப்படுகின்றது. மேலும் இந்துசமய மரபிலுள்ள ஆறு தரிசனங்களையும் ஆறு திருமுகங்களும் குறிப்பன என ஒருசாரார் கருதுவர். இந்துக் கோவிலுக்கு அடிப்படையாக அமைந்துள்ள ஆறு சக்கரங்களையும் இவை சுட்டுவன எனவும் கூறப்படுகின்றது. சிவபெருமானுக்குரிய ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய ஐந்து முகங்களுடன் கீழ்நோக்கும் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுக மாக முருகப் பெருமான் உயிர்களுக்குத் தனிப்பெரும் கருணைபுரிகின்றார். இதனை

"ஐந்து முகத்தோடதோமுகந் தந்து
திருமுகங்கள் ஆறாகி

எனக் கந்தர் கலிவெண்பா கூறும்.

இப்பெயர்ப்பட்ட சிறப்புவாய்ந்த முருகப்பெருமானின் பல்வேறு சிறப்பியல்புகளையும் அவரைப்பற்றிய நிகழ்வுகளையும் குறிப்பிடும் பல நாமாவளிகள் (பெயர் வரிசைகள்) உள்ளன. வடமொழியிலே ஸஹஸ்ர நாமாவளி (1000), திரிசதி (300) நாமாவளி, அஷ்டோத்தரசத நாமாவளி(108), துவாதச நாமாவளி (12) எனப்பல நாமாவளிகள் உள்ளன. இவற்றுள் 'குமார' என்பது இவர் இளமையானவர் என்பதைச் சுட்டும். காங்கேய(ன்) என்பது கங்கையில் வளர்ந்தவர் என்பதைக் குறிக்கும். சரவணபவ என்பது சரவணப் பொய்கையிலே வளர்ந்தவர் என்பதைச் சுட்டும்.

**ஸ்கந்த (கந்தன்) என்பது**

1. "பகைவரின் ஆற்றலை வற்றச் செய்பவன் (ஸ்கந்நயதி சத்ரூன் சோஷயதீதி ஸ்கந்தஹ)
2. ஆறுதிருமேனிகளும் ஒன்றாகப் பொருந்தியவன் (அந்தமில்லதோர் மூவிரு வடிவம் ஒன்றாகி, கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன் – கந்தபுராணம்)
3. கந்து அன்–கந்தன், கந்து எனில் பற்றுக் கோடு, ஆனைகட்டுந்தறி, அதாவது ஆன்மாக்களுக்குப் பற்றுக்கோடாகத் திகழ்பவன் என மூன்று பொருள்படும்"

எனத் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் விளக்கியுள்ளார். சுப்ரஹ்மண்ய(ன்) என்பது மிகமேலான பரம் பொருள் எனப்பொருள்படும். இப்படிப் பெருந்தொகையான பெயர்கள் வடமொழியிலிருப்பினும் 'சரவணபவ' என்பதே முருகப்பெரு

மானின் பிரதான ஆறெழுத்து (சடாக்ஷர) மந்திரமாகும் (சரவணபவாய நமஹ: சரவணப வனுக்கு வணக்கம்).

முருகனைக் குறிக்கும் தமிழ்பெயர் களிலே 'முருகன்' எனில் 'அழகன்' எனப் பொருள்படும். சேயோன் (செந்நிறமுடையவன்) பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. வேலவன் – வேலன் (வேலாயுதத்தை உடையவன்), ஆறு முகன் (ஆறு திருமுகங்களை உடையவன் – இது வடமொழியில் "ஷண்முக" எனப்படும்) முதலி யன குறிப்பிடத்தக்கவை. "ஒருநாமம் ஒருருவ மில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி" என மாணிக்கவாசகர் கூறியவாறு உருவம், பெயர் இல்லாத இறைவனுக்கு உருவமும், பெயரும் அளித்து அன்பர்கள் வழிபட்டு உலகியல் வாழ்விலும், ஆன்மீக வாழ்விலும் நற்பலன்கள் பெறுகின்றனர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இறைவனை முருகனை எவரும் – பெரியபாவம் செய்தோர்கூட மனமார வழிபட்டு உய்தி பெறலாம். அவரை எதிர்த்துப்போர் செய்த சூரனே இறவாப் பேரின்ப வாழ்வு பெற்றான். இதனைக் கச்சியப்பர் தமது கந்தபுராணத்திலே

*"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்*
*தூயவராகிமேலைத் தொல்கதியடைவரென்கை*
*ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் முன்னாட்செய்த*
*மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்"*

எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று நாம் வாழும் தொல்லைகள் மிகுந்த கலியுகத்திலே பல்வேறு வரங்களைத் தந்து காக்கவல்ல தெய்வமாக "கலியுகவரத னாக" முருகப்பெருமான் விளங்குகின்றார். அவரை வழிபட்டு அனைவரும் உலகியல், ஆன்மீக நற்பேறுகளைப் பெறுவார்களாக.

**பேராசிரியர் வி.சிவசாமி**

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

## திருமந்திரம்

எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னேயச் சண்முகம் தோன்றலாற்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலால்
மைந்தன் இவனென்று மாட்டிக் கொள்ளீரே

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

உலகில் உள்ள உயர் தனிச் செம்மொழி களில் நம் தாய்மொழியாம் தமிழ்மொழி தொன்மையும், நன்மையும், முதன்மையும் உடையதாக விளங்குகிறது. இலக்கணச் செறிவு, இலக்கிய வளம், ஒலிப்பில் இனிமை, எளிமை, இயற்கை, பல மொழிகளுக்குத் தாயாக விளங்கும் தனித் தலைமை முதலான சிறப்புக்கள் தமிழுக்கு உண்டு. ஏனைய மொழிகளை விடப் பக்திச் சுவை மிக்க நூல்கள் பலவற்றையும் தன்பால் பெற்றுள்ளதால் இதனைத் தெய்வத்தமிழ என்றும், பக்தி மொழி என்றும் ஆன்றோர் போற்றி உரைப்பர். "தெய்வத் தமிழ் கூடல் தழையத் தழைத்தவள் திருப்பவள முத்தமருளே' எனக் குமரகுருபர சுவாமிகள் மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழில் தமிழ்மொழியைத் தெய்வத் தமிழ் எனக் கூறுகிறார்.

உலகில் தோன்றிய மூத்த மொழிகளில் ஒன்றாகிய தமிழ்மொழி கால வெள்ளத்தால் அழியாது இன்றும் பல கோடிக்கணக்கான மக்களால் பேசப்படும் மொழியாக வாழும் மொழியாகத் திகழ்கிறது. எங்கள் தாய்மொழி இன்றும் இளமையாகத் திகழ்வதற்குப் பல காரணங்கள் உண்டு. தமிழ்த்தாயை அணி செய்கின்ற இலக்கியங்களே இதற்குக் காரணம் என்பதை "இளங்கோவின் சிலம்பு முரல் இன்னிசையில் தவழ்ந்து இணைக்குறள் முப்பாலுண்டு குறுகுநடை பயின்று களங்க மிலாப் பக்தியினால் பன்னிருவர் நால்வர் கற்கண்டு சொற்கோவை கவிமாலை புனைந்து பளிங்கனைய கவிக்கரசன் கம்பன் எனும் தேவன் பண்ணி வைத்த காவியத்தின் பசும்பொன் முடிதரித்த இளங்குமரி தமிழ்த்தாய் எனச் சுப்பிரமணிய யோகியர் பாடியுள்ளார். களங்கமிலா பக்தியினால் நாயன்மார்களும், ஆழ்வார்களும் அருளிய தோத்திர இலக்கியங்கள் தமிழ்த்தாயை அணிசெய்யும் மிகச் சிறந்த அணிகலன்கள் என்பது சுப்பிரமணிய யோகியாரின் கருத்தாகும்.

பசு பாச மலங்களின் பீடிப்பினை நீக்கக் கூடிய சிவபாலனின் அருள் பெற்றுத் திகழ்ந்த தவராஜயோகியே அருணகிரிநாதர் ஆவார். சிவபெருமான் திருமூலருக்கு நாதன் என்னும் பட்டத்தை அளித்தது போல "மாணிக்க வாசகர்" என மாணிக்கவாசகரை அழைத்தது போல முருகப் பெருமான் அருணகிரியாருக்கு "நாதன்" என்ற பட்டத்தை அளித்து அருணகிரி நாதா! என்றழைத்தார்.

முருகப் பெருமானை ஞானபண்டிதர் என்றும், சுவாமிநாதன் என்றும் அருளாளர்கள் போற்றுவார்கள். கந்தவேள் பெருமானிடம் அருள் பெற்றவர்கள் பலர். ஆனால் செவ்வேட் பெருமானிடம் நேரடியாக மூன்று பேர் மட்டுமே உபதேசம் பெற்றார்கள். தேவசிரேஷ்டர் ஆகிய சிபபெருமான், முனி சிரேஷ்டராகிய அகத்தியர், நரசிரேஷ்டர் ஆகிய அருணகிரியார் ஆகிய மூவருமே இந்தத் தவவாய்ப்பினைப் பெற்றிருந் தார்கள்.

கி.பி 15ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் திருஅவதாரம் செய்தார். பஞ்ச பூதத்தலங்களில் தேயுலிங்கம் என்று அழைப்படுகின்ற அக்கினித் தவமாகிய திருவண்ணாமலையில் அருணா சலேஸ்வரர் வீற்றிருந்து அருள் புரிகின்றார். திருவாரூரில் பிறந்தால் முத்தி; காசியில் இறந்தால் முக்தி, திருவண்ணா மலையை நினைத்தாலே முக்தி என்பது ஆன்றோர் வாக்கு ஆகும். அருணகிரிக்குத் தமிழ் அறிவையே கந்தவேள் பெருமான் ஊட்டிய ருளினார். "அரிய தமிழ் தானளித்த மயில் வீரா" என்று அருணகிரி தனது சந்தத் தமிழாகிய திருப்புகழில் குறிப்பிடுகின்றார். திருப்புகழின் மூலம் முருகனின் அருட்புகழைப் பாடிய அருணகிரியாரை முருக பக்தர்கள் தெய்வமா கவே போற்றுகிறார்கள். சந்தப்பாடல் என்னும் இசையின்பம் நிறைந்த பாடல்களைப் பாடிச் செந்தமிழ் மொழியின் சிறப்பைத் தமிழ்மொழி பக்திமொழி என்பதை அருணகிரியார் உலகிற்கு உணர்த்தினார்.

இளமையிலே இவர் தேவாரம், திருமந்திரம், திருமுருகாற்றுப்படை, திருக்குறள் போன்ற தமிழ் நூல்களில் பழக்கம் உள்ளவர். உலா, கலம்பகம், கோவை, தூது, பரணி, மடல், மாலை முதலிய நூல்வகைகளைப் பயின்றவர். புலமை வாய்ந்தவர். ஆசுகவி, சித்ரகவி, மதுரகவி, வித்தாரகவி எனக் கவிபாடும் திறம் உடையவர். முருகப்பெருமானது வழிவழி அடிமை போன்ற செய்திகள் இவரது பாடல்கள் மூலம் நமக்குக் கிடைக்கின்றன.

முருக உபாசகராகிய அருணகிரி யாரை "மெய்ஞ்ஞான நாதன் எனத் திருப்போரூர் சந்நிதி முறை அலங்காரம் போற்றுகிறது. இவர் முருகனையே குறிக்கோள் தெய்வமாகக் கொண்டு பாடிப்பரவிப் பணிந்து வாழ்ந்து வந்தார்.

இளமை வயதில் காமநோயின் வேகம் அருணகிரியாரைப் பெரிதும் வாட்டியது. சிற்றின்பத்தை முழுமையாக அனுபவிப்பதே வாழ்வின் இலட்சியம் என நினைத்து வாழ்ந்தார். தனது உடலையும், பொருளையும் சிங்கார மடந்தையர்களிடம் இழந்ததனால் அருணகிரி மிகவும் துன்பப்பட்டார். இவரிடம் இருந்த இளமையும் வளமையும் மறைந்து வறுமையும் நோயும் குடிகொண்டது. உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் அனைவரும் இவரை வெறுக்கத் தொடங்கினார்கள். தனது தவறுகளை உணர்ந்த அருணகிரியார் தனக்கு ஏற்பட்ட அவல நிலையை நினைத்து மிகவும் வேதனை அடைந்தார். இத்தகைய பிழைகள் அனைத்திற்கும் காரணமாக இருக்கின்ற இந்த உடலை இனிமேலும் தாங்கி உயிர்வாழப் போவதில்லை என நினைத்த அருணகிரியார் திருவண்ணாமலைக் கோயில் கோபுரத்தின் மேல் ஏறி நின்று தமது உயிரை மாய்த்துக் கொள்ள விரும்பி அங்கிருந்து கீழே குதித்தார். அப்போது முருகப் பெருமான் தோன்றி அருணகிரியைத் தமது கரங்களில் தாங்கிப் பிடித்துக் காப்பாற்றினார். கந்தவேள் பெருமான் தமது வேலினால் இவரது நாவிலே ஆறெழுத்து மந்திரத்தைப் பொறித்து முத்தமிழ் ஞானத்தை அளித்தருளினார். "அருணை நகர்மிசை கருணையோடருளிய இரு சரணமும் மறவே னே" என அருணகிரியார் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். முத்தமிழ் ஆற்றல் பெற்ற அருணகிரியாருக்கு முதற்பாடல் பாட "முத்தைத் தரு பத்தித் திருநகை" என முருகப்பெருமானே அடி எடுத்துக் கொடுத்தார்.

அருணகிரிநாதர் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் நன்நோக்கில் "ஞானியர் விவகாரம் உலக உபகாரம் என்னும் உண்மையை உணர்த்தும் வகையில் மக்கட் சமுதாயம் உய்தற் பொருட்டு பாடிய நூல்கள் திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் அனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவெழு கூற்றிருக்கை என்னும் ஒன்பதுமாகும். இவையாவும் சமய உலகிலும் கவிதை உலகிலும் ஈடுஇணையற்றுத் திகழ்வன. உருவத்தாலும் உள்ளடக்கத்தாலும், உணர்த்தும் முறையாலும் தூய உணர்வினைத் தூண்டும் பக்தி இலக்கியங்களாக அருணகிரியாரின் பாடல்கள் மிளிர்கின்றன.

அருணகிரியாரின் பாடல்கள் நாள் தோறும் ஓதுவதற்குரியன. முருகன் திருக்கோயில்களில் பாடப்பெறுவன. வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், நீதி நூல்கள், தோத்திர சாஸ்திரங்கள் ஆகியவற்றின் கருத்துக்களை எதிரொலிப்பன. இவை பரகதியை அடைவதற்கு ஞானியாகவும், அருட்கடலில் திளைக்க ஏற்றமாகவும் மனத்தளர்ச்சியை நீக்கி இறையருளில் அழுத்தச் செய்வதற்கு ஆணியாகவும், பிறவி வேலை அறுப்பதற்கு அரமாகவும் விளங்குகின்றன. இவற்றைப் பொருளுணர்ந்து காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவோரும், ஆய்வோரும், தோய்வோரும் ஞானம் பெறுவர்; நலம் பெறுவர்; எந்நாளும் வானம் அரசாள் வரம் பெறுவர்; மோனவீடேறுவர்.

முருகனருளால் கவிபாடுந் திறமும் இசை ஞானமும் கைவரப்பெற்ற அருணகிரி நாதர் அவன் திருநடம் புரியும்போது திருவடிகளில் அமைந்த தண்டை சதங்கை, கிண்கிணி, சிலம்பு முதலிய அணிகளின் ஓசைகளைக் கேட்டு உணர்ந்து, உவந்து அச்சந்த நுட்பங்களைத் தம் பாடல்களில் அமைத்துள்ளார்.

இசைத்திடும் சக்தி பேதம்
ஒலித்திடும் தண்டை ஆழும்
இணைப்பத புண்டரீகம் அருள்வாயே

என்ற பாடல் வரிகள் இதற்கு உதாரணம் ஆகும்.

அருணகிரிநாதரின் செய்யுள் நடை அவருக்கென அமைந்த தனிநடை ஆகும். அந்தடைக்கு இணை அவருக்கு முன்னும் இல்லை, பின்னும் இல்லை. அவர் பாடிய பாடல்களில் ஆயிரத்து நானூறுக்கும் உட்பட்ட பாடல்களே கிடைத்துள்ளன. இவற்றுள் பல சந்தங்கள் அமைந்துள்ள இவருடைய திருப்புகழ் என்ற நூல் சந்தக் கவிதைக்குப் புகழ்பெற்றது. வடமொழிச் சொற்களை மிகுதியாக உடையது. மண், பெண், பொன் என்ற உலக இன்பங்களைப் பழிப்பதில் ஒப்பு இல்லாதது என மகாகவி பாரதியார் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திருப்புகழ்ப் பாடல்கள் ஒவ்வொன்றிலும் முன் இரண்டு அடிகளில் அருணகிரிநாதர் உலகியல் சார்ந்த நிலையில் தம்முடைய குறைகள், அவலங்கள் வேண்டுகோள்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள், பெற்ற பேறுகள் ஆகியவற்றைக் குறித்து உள்ளார். பின் இரண்டு அடிகளில் அருளியல் சார்ந்த நிலையில் இறைவனின் அருள் ஆற்றல் தவப்பெருமை ஆகியன அமையப் பாடியுள்ளார். அருணகிரியாரின் நிறை ஞானத்தின் வெளிப்பாடே இவை ஆகும்.

புலமைப் போட்டி காரணமாக அருணகிரிநாதர் ஆசு கவியாகப் பாடிய வல்லிபுத்தூராழ்வாரை வெற்றி கொள்வதற்கு ஏதுவாகிய நூல் கந்தர் அந்தாதி ஆகும். இது கட்டளைக் கலித்துறையில் யமகமும் அந்தாதியும் கூடிய யாப்பினாலாகிய நூறு பாடல்களை உடையது. திருவாசகத்திற்கு இணையாகப் பக்திச் சுவை மிக்க விளங்கும் பாடல் கந்தர் அலங்காரம் எளிய இனிய அமைப்புடன் கட்டளைக் கலித்துறை யாப்பில் பாடபெற்றது. சுருக்கமும் பொருளில் பெருக்கமும் வாய்ந்து நாள்தோறும் ஓதுதற்குரிய மந்திரப் பெரு நூலாகக் கவிவிருத்த யாப்பில் கந்தரநுபூதி அமைந்துள்ளது. சீர்பாத வகுப்பு முதலான திருவகுப்புகள் யாவும் சந்தக் குழிப்புக் கொண்ட நெடும் பாடல்களாகும். சேவல் மயில் வேல் விருத்தப் பாடல்கள் கழிநெடிலாசிரிய விருத்த யாப்பில் அமைந்துள்ளன. சிற்றிலக்கி யவகையில் ஒன்றாகவும், ஒன்றுமுதல் ஏழுவரை ஏறியும் இறங்கியும் எண்ணலங்காரம் பொருத்தப்பாடப் பெறும் சித்திரகவியாகவும் அமைவது திருவெழுகூற்றிருக்கை ஆகும். இவ்வாறு பல வடிவங்களில் ஓசை நலமும், பொருட் சிறப்பும் வெளிப்படுமாறு பாடியருளிய அருணகிரிநாதரின் வித்தகப் புலமை அளப்பரியதாகும்.

உயிர் தோன்றிய காலத்திலேயே உடன் தோன்றி அதன் அறிவை விளக்கமுறாத வகையில் அணுவளவாகச் சிறுமைப்படுத்து வதே ஆணவமலம் எனப்படும். இதன் பிடியிலிருந்து உயிர் விடுபட்டு இன்பத்தில் திளைக்க வேண்டுமெனக் கருதியே உயிருக்கு உடல், உட்கருவி, உலகு, நுகர் பொருள், (தனு, கரண, புவன, போகம்) ஆகியவற்றை இறைவன் அளப்பரிய கருணையினால் அறிந்து உதவுகின்றான். உயிர் தன்னை உய்வித்துக் கொள்வதற்காகப் பிறப்பினை அருளிய இறைவனுக்கு நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இறை வழிபாட்டினை மேற்கொண்டும் ஏனைய உயிர்களிடத்தும் இறைவன் உறைகின்றான் என உணர்ந்து, அவற்றின் பால் அன்பு செலுத்தியும் வாழ வேண்டுமென்று மனிதப் பிறவி பெற்றோரின் புனிதக் கடமையாகும்.

இத்தகைய வாழ்வியல் நெறியை எடுத்துரைப்பதே சமயமாகும். அன்பு, அமைதி, அருள் இன்பம் முதலான உயர் பண்புகளை மனிதன் பெறுவதற்கு சமயம் உதவவேண்டும். அருளாளர் பாடுகின்ற கவிதைகளில் கவிதைக்குரிய பண்புகள் யாவும் அமைந்து இருப்பினும் தனிச்சிறப்பு வாய்ந்த ஒவ்வொரு பண்பே ஒவ்வொருவர் கவிதைகளிலும் மேலோங்கியிருப்பதைக் காணலாம். வாதவூரர், ஞானசம்பந்தர், நக்கீரர், சுந்தரர், அப்பர் ஆகியோர் தம் பாடல்களில் முறையே விஞ்சி நிற்கின்ற கனிவு, தாக்கு, நோக்கு, நயம், சொற்குறுதி ஆகிய அனைத்துப் பண்புகளும் ஒன்றி நிரம்பிய குன்றாத வாக்கே அருணகிரி நாதர்வாக்கு ஆகும். இதனால் "வாக்கிற்கு அருணகிரி" என அருணகிரிநாதர் போற்றப் படுகிறார்.

பாழ்வாழ்வாகிய படுமாயையில் தம்மை விழும்படி செய்த முருகனை நோக்கி "வாழ்வாய் இனி நீ மயில்வாகனனே என்று அருணகிரி நாதர் பொழிவது "மற்றைக் கண் தாராது ஒழிந்தால் வாழ்ந்து போதீரே" என்ற சுந்தரர் திருப்பாட்டின் நயத்தைக் கொண்டுள்ளது. அருணகிரிநாதர் முதுமையைப் பற்றியும் மரணத்தைப் பற்றியும் பாடியுள்ள பின்வரும் பாடல் வாக்கிற்கு அருணகிரி என்பதைத்

தெளிவாக உணர்த்துகின்றது.

முனை யழிந்தது மேட்டி குலைந்தது
வயது சென்றது வாய்ப்பல் உதிர்ந்தது
முதுகு வெஞ்சிலை காட்டி
விளைந்தது ப்ரைபையான
முகமழிந்தது நோக்குமிருண்டது
இருமல் வந்தது தூக்க மொழிந்தது
மொழி தளர்ந்தது நாக்கு விழுந்தது - பல நோயும்
நிலுவை கொண்டது பாய்க்கிடை கண்டது
ஜலமலங்களின் நாற்றம் எழுந்தது

இவருடைய கருணையின் எல்லைக்குள் பரமஞானியும் இடம் பெறுகிறான். பாவியும் இடம்பெற்று ஆறுதல் பெறுகிறான். முருகனிடத்தில் தாம்பெற்ற பேறுகள் அனைத்தையும் அன்பர்களுக்கு வாரி வழங்குகின்ற வற்றாக் கருணைக் கொடைகளாக இவர்தம் படைப்புகள் பயன்தருகின்றன. துறவிகள் மட்டுமல்லாமல் உலக வாழ்வில் உள்ளோரும் இளமை நலமும் பெருமை வளமும் பெற்று ஓங்குதற்கு உதவுகின்றன.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்
B.A-Dip.in.Ed - S.L.E.A.S
முன்னாள் விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை
முன்னாள் உதவிப் பணிப்பாளர் - இந்து சமய கலாசார அலுவலர்கள் திணைக்களம்,
ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி.

* * * * * * * * * * * * * * * * * * * * * *

## ஆறுமுகன்

ஆறுமணி மவுலீ ரூங்கண் ணீராறும் குழைகளீ ராறும் பாலம்
ஆறுநற் பவளவாய் ஆறுமா றாஎழுத் தாறுமானோன்
ஆறுமினிர் துண்டமும்தோ ளீராறும் கரங்களீ ராறுஞ் சோதி.
ஆறுவத னமுந்தொழுவோர் ஆறாத பிறவியினைப் பாறுவாரே

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

# முருக வழிபாடும் மயிலியற்புலக் கந்தனும்

இயற்கையை நீக்கி இறைவன் இல்லை. இயற்கையின் எழிலே இறைவன் திருவடிவாகும். இந்த அழியாத அழகே முருகன் திருவடிவாகும். இதனை உள்ளத்தில் உய்த்துணர்தலே முருக வழிபாடாகும்.

முருகு என்றால் மணம், அழகு, இளமை, தெய்வத்தன்மை என்று ஆன்றோர் கூறுவர். இந்த நான்கு பொருளடங்கிய ஒரு சொல்லால் பண்டைத் தமிழ்மக்கள் முழுமுதற் பொருளை அழைத்தனர். இயற்கை மணமும், மாறா இளமையும், அழியா அழகும் எல்லாப் பொருளையும் கடந்து ஒளிரும் தன்மையும் இறைவனிடத்தில் இலங்குவது கண்டு அப்பொருட்கு முருகன் என்ற சொல்லைச் சூட்டி னார்கள். பழந்தமிழர் கடவுளை மணமுடைய தாகவும், இளமை உடையதாகவும், இறைமை உடையதாகவும் எவர் எம்மொழிப் பெயரால் வந்தித்து வாழ்த்தினும் அவர்க்கு எம்பெருமான், தண்ணருள் பொழிந்து அருளுருக் காட்டுவான்.

இப்படிப்பட்ட தனித்துவம் வாய்ந்த முருகனை வழிபடுவது எல்லோர்க்கும் பெரும் பாக்கியமாகும். இவ் அழகனை வழிபட்டு பெரும்பேறும் வரமும் பெற்றவர்கள் ஏராள மானோர் இருக்கிறார்கள். முருக வழிபாட்டின் தொன்மையை கதிர்காமம், மண்டூர், செல்வச் சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம் ஆகிய ஆலயங் களின் சரித்திரத்தின் மூலம் நாம் அறியமுடி கின்றது.

முருகக்கடவுளின் பிரணவ மந்திர உபதேசம் பெற்றோர் மூவராவர். அவர்கள் சிவபெருமான், அகத்தியர், அருணகிரிநாதர் ஆகியோர் ஆவர். இவர்களில் அருணகிரிநாதர் முருகனிடம் நிறைந்த பக்தியுள்ளவர். அவரது அருள்நிறைந்த திருப்புகழ் இதற்கு எடுத்துக் காட்டு.

சூரபத்மன் முருகன் மீது கொண்ட அளவிலா பக்தி காரணமாக, முருகனே அவனுக்கு சாகாவரத்தை அளித்து அருளினார். ஆயினும் அந்த வரத்தைப்பெற்ற மமதையில் தன்னை மறந்து ஆணவத்தோடு அடியவர்களை கொடுமைப்படுத்தினான். இந்த நேரத்தில் துஷ்டர்களை அழித்து நிஷ்டபரிபாலனம் செய்ய முருகன் தனது திருக்காட்சியின்மூலம் அவனை அழித்து அடியவர்களுக்கு அருள் புரிந்தான்.

இவையிரண்டுமே முருக வழிபாட்டின் மகிமைக்குப் போதுமானதாக விளங்குகிறது. அந்தவகையில் ஈழத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் முருக வழிபாடு மிகவும் பக்திபூர்வமாக வழிபடும் வழிபாடுகளில் மிகவும் உன்னதமாக விளங்குகின்றது. இதற்கு பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் கூற் றாகிய "கந்தபுராணக் கலாசாரமே யாழ்ப்பாணக் கலாசாரம்" என்பது எடுத்துக்காட்டாக விளங்கு கின்றது.

இதை அடியொற்றியே எமது ஆலயமும் ஆரம்பமுதலே தொடங்கி கந்தபுராண

படனம், திருவாதவூரடிகள் புராணம் ஆகியன மிகவும் சிறப்பாகப் பெரியோர்களால் நடாத்தப் பட்டு வருகின்றது. இப்படிப்பட்ட புகழ்பெற்ற ஆலயமாக எமது ஆலயம் விளங்குவது எம்மூர் மக்களுக்கு வரப்பிரசாதமாகும். எமது முன்னோர்கள் முருக வழிபாட்டின் தொன் மையை, சிறப்பை அறிந்துதான் இவ்வாலயத்தை 1864ஆம் ஆண்டு கட்டியுள்ளார்கள். இவர் களின் தீர்க்கதரிசனம் மிகவும் போற்றத்தக்கது. ஒவ்வொரு வருடமும் இவ் ஆலய மகோற்சவம் ஆனி உத்தரத்தில் கொடியேறி ஆனி திரு வோணத்தில் தீர்த்தத்திருவிழாவுடன் பன்னிரு தினங்கள் நடைபெற்று அடியார்களால் மிகவும் பக்திபூர்வமாக விரதம் இருந்து அனுஷ்டிக்கப் படுகிறது.

நாம் ஆலயத்தில் நமக்கென்று தல வரலாறு, தல விருட்சம் அத்துடன் தல வழிபாட்டுமுறைகள் ஒருங்கே கொண்டமைந்து காணப்படுகின்றன. நம் ஆலய மகோற்சவ தேர்த்திருவிழாவின்போது அடியார்கள் பக்திப் பிரவாகம் கொண்டு கூத்தாடும் ஆனந்தக் காட்சி மற்றும் மானம்பூ திருவிழாவின்போது மகிடாசூரனை அழிக்கும் காட்சிகள், சூரசங் காரத்தின்போது இடம்பெறும் சூரனாட்டம், கார்த்திகைத் திருவிழாவின்போது இடம்பெறும் கப்பல்விடும் காட்சிகள் ஆகியன எங்குமே காணாத பார்ப்பவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்வுகளாக பாரம்பரிய முறைப்படி நடைபெறுவது குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

முருகன் தனது திருக்கருணை மூலம் இதுவரை எமது ஆலயத்தில் சித்திரத்தேர் இல்லாத குறையை நீக்கி, இன்று எமது மக்களுக்கு அரிய, பெரிய பொக்கிஷத்தைத் தந்துள்ளார். இப்பொக்கிஷம் கிடைப்பதற்கு உதவிபுரிந்த அனைவர்க்கும் நன்றிகள்.

எனவே முருகனது எழிலையும், திருவருளையும் எம்மனதில் இருத்தி அவனது வழிபாட்டின் ஊடாக நாம் அனைவரும் சகல வளங்களும் பெற்று இன்புற்று இருப்போமாக.

"ஆலய வளர்ச்சியே ஆன்மீக வளர்ச்சி"

திரு.நெல்லிநாதன் சபானந்தன்

* * * * * * * * * * * * * * * * * * * * * *

## முருகன் திறல்

தேங்கிய அண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும்பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்களெட்டும் வழிவிட்டவே

கந்தரலங்காரம்

* * * * * * * * * * * * * * * * * * * * * *

# முருகன் திருவிளையாடல்

மயிலைக் கந்தன் அராலிப்பதியில் அமர்ந்து எங்கும் மக்கள் துயர் தீர்க்கும் அருளாளன். அவன் புரிந்த திருவிளை யாடல்கள் பற்பல. அவற்றில் கந்தவேற்பில் குடிகொண்ட திருவிளையாடலும் ஒன்றாகும்.

குமரன் கிரகங்களையும், நட்சத்திரங் களையும் பிறவற்றையும் நிலை பிறழ்வித்து உலாவினான். மலைகள் இடம்பெயரும், கடல்கள் ஒன்றாகும், சந்திரன் சூரிய மண்ட லத்திலிருப்பான். சூரியன் சந்திரமண்டலத்தி ருப்பான். அவன் செய்யும் திருவிளையாடல்கள் யாவும் தெய்வத்தன்மை விளங்குவதாக இருந்தன. இது கண்ட உமையம்மை ஆச்சரியமுற்று சிவனிடம் கேட்க அவர் மூலம் அத்திருவிளையாடல்கள் உலகநன்மைக்காக குமரன் ஆற்றுபவை என அறிந்து இன்புற்றி ருந்தார்.

தேவர்கள் அது அசுரர்கள் செய்கை யாகும் என அஞ்சி நான்முகனிடம் சென்றனர். அப்பொழுது குமரவேள் இந்திரன் முன் நிலையில் ஒரு குழந்தை உருவாகத்தோன்றி மேருமலையின் சிகரங்களைப் பிடுங்கி வீசி நின்றார். இந்திரன் அதுகண்டு தேவர்களோடு குமரக்கடவுளை வளைத்து போர் தொடங்கக் குமரக்கடவுள் அப்பொழுது சில தேவர்களை அழித்தார். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நாரதமுனிவர்கண்டு போய் தேவகுருவுக்குக் கூற, தேவகுரு வந்து குமரக்கடவுளை வணங்கி நமஸ்கரித்தார். தேவகுருவுக்கு அருள் செய்து தேவர்களை உயிர்ப்பித்து பரமேஸ்வர ரூபத்தைக்காட்டி நிலைபிறள்ந்த உலகத்தை பண்டு போல் நிறுத்தினார். இந்திரன் பிரார்த்திக்க குமரக்கடவுள் திருக்கைலாய மலையின் அருகில் கந்தவேற்பில் வீற்றிருந்தார் என்பது கந்தபுராணம்

கந்தவனம் செல்வநாயகம்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## முருகன் நாம விசேடம்

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் வதனப் படார்வெற்றி வேற்பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே

கந்தரலங்காரம்

* * * * * * * * * * * * * * * * * * * * * *

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

நெருப்பு – சிவபெருமான், நெருப்பில் உள்ள சூடு – அம்பிகை, நெருப்பில் உள்ள செம்மை நிறம் – விநாயகர், நெருப்பில் உள்ள ஒளி முருகவேள்.

சுடரோ சிவபெருமான் சூடுபரா சக்தி
திடமார் கணநாதன் செம்மை - படரொளியோ
கந்தவே ளாகும் கருதுங்கால் சற்றேனும்
வந்ததோ போத வழக்கு.

இன்று பொன்னான நாள்(21.06.2008) கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகன் மயிலியற்புலத்தான் சித்திரத்தேர் ஏறி வீதி வலம் வரும் பெருநாள். இந்த அரும் பெரும் கைங்கரியத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் எம்பெருமான் அருள்பாலிக்க வேண்டும். சித்திரத்தேர் மயிலியற்புலம் வீதியில் வீதி வலம் வருமா? இது அன்று கண்ட கனவு. இது இன்று நனவாகி விட்டது. உண்மையில் உள்ளம் உவகை அடைகின்றது.

சித்திரத்ரேரேறி ஆறுமுகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராய் வீதிவலம் கண்கொள்ளாத காட்சிகாண எவ்வளவு தவம் செய்தாலும் கிடைக்கவே கிடைக்காது.

'தந்தி முகன் தம்பி' சித்திரத்தேரேறி வரும் காட்சியே! காட்சி! வேண்டுவார் வேண்டும் அருள் மழை பொழியட்டும்

எந்தக் கோவிலுக்கும் வரலாறு ஒன்று உண்டு என்பது உண்மை. காரணம் இல்லாது காரியம் எதனையும் படைத்துவிடவே முடியாது. எம்முன்னோர் எங்களுக்கு விட்டுச்சென்ற பெரிய சொத்து இது. இதன் தோற்றம் வளர்ச்சி பலவாறாக இருந்தாலும்,

எனது தந்தையார் கூறியவற்றில் ஒன்றை மட்டும் இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன். **கணபதியார் என்னும் பெரியவரில் வந்த தெய்வம். கரங்களால் நிலத்தில் குளியை பறிக்காது தலையாலே நிலத்தில் குளிபறித்து இதிலே பிள்ளையை வைத்து வழிபடுமாறு வேண்டிக் கொண்டார்.** அன்று தொடக்கம் இந்த மயிலியற்புலத்திலே முருக வழிபாடு தொடங்கியதாக அறியக் கிடக்கிறது.

எம்முன்னோரின் ஏடுகளின் அடிச்சுவடியை நோக்கும்போது இக்கோயில் சிறிய ஒரு தொகையினரின் முயற்சியினாலேயே வளர்ச்சி அடைந்து மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றைத் தன்னகத்தே கொண்ட இப் பெருங்கோயில் அருள்மழை பொழிந்து என்றுமே குறைவுபடாது வாழவைத்துக் கொண்டிருக் கிறது என்று சொன்னால் மிகையாகாது.

நம்பியவருக்கு நல்லருள் புரியும் மயிலியற்புலத்தான் கீர்த்தியை எப்படித்தான் சொல்லில் வடிக்கமுடியும் இயம்பமுடியும். வடராலி தழைத்தோங்க வந்த முருகக் கடவுளைப் பற்றி பண்டிதர் வி.முருகேசு

ஆசிரியர் பாடிய பாக்களில் இருந்து மிகவும் துல்லியமாக மயிலியற்புலத்தவனின் பெருமை புலப்படுகின்றது.

எம்முன்னோர் பாடிய கப்பல் பாட்டில் இருந்து மிகவும் திறம்படக் காணக்கிடக்கின்றது. இப்படி முன்னோரின் ஏட்டுச் சுவடிகளைப் புரட்டிப்பார்க்கும் போது மயிலியற் புலத்தானின் அருமை பெருமைகளைக் கண் கூடாகக் காணக்கிடக்கின்றது.

விழிக்குத்துணை திரு மென்மலர்ப் பாதங்கள்
மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள்
முன்பு செய்த
பழிக்குத்துணையவன் பன்னிரு தோளும்
பயந்த தனி
வழிக்குத்துணை வடி வேலுஞ் செங்கோடன்
மயூரமுமே

முருகனின் புகழ்பாட வந்த அருணகிரியார் மிகவும் திறம்பட விழிக்கத்துணை மொழிக்குத்துணை, பழிக்குத்துணை, வழிக்குத்துணை என்பதை மிகவும் திறம்படக் கூறிநிற்கின்றார்.

திருப்புகழ் பாடினால் அவன் தாள்களையே சரணடைந்து விடலாம். எம் மயிலியற் புலத்தான் அருள் கிடைக்கும். இதையே திருமுருக கிருபானந்தவாரியார்

ஆறுமுகம் தோன்றும் அழகிய வேல்
தோன்றும் அவன்
ஏறுமயில் தோன்றும் எழில் தோன்றும் - சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

மயிலியப்புலத்தவனின் அருள்பெற்று அனைவரும் நிம்மதியோடு வாழ இறைஞ்சுவோமாக!

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

சுபம்! சுபம்!! சுபம்!!!

கந்தவனம் சரவணபவானந்தன்

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

## சேவலின் ஆற்றல்

படைபட்ட வேலவன் பால்வந்த வானகப் பதாகையென்றுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாகமுதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமு மாமேருவெற்பு மிடிபட்டவே

கந்தரலங்காரம்

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

# முருகனின் திருவுருவ தத்துவம்

"மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி"

தொன்றுதொட்டு எமது மக்கள் மயிலியற்புல முருகனை வழிபட்டு வருகின்றனர். கந்தவேலும் அவர்கட்கு அருள்ஆட்சி செய்து வருகின்றான். குமரன் மலையும் மலை சார்ந்த இடங்களிலும் குடி கொள்ளும் இயல்புடையவன். ஆனால் வயலும் வயல் சார்ந்த இடங்களிலும் பல இடங்களில் குடி கொண்டுள்ளான். அன்பர் எண்ணத்தில் வாழும் கந்தன் இவ்வருடம் புதிய சித்திரத்தேரில் வலம்வர உள்ள இத்தருணத்தில் இக்கட்டுரையில் சேயோனின் படிமத்தில் உள்ள தத்துவக் கருத்துக்கள் சிலவற்றை ஆராய் வோம்.

ஆறுமுகப்பெருமானை வெற்றுக் கண்ணாற் பார்க்காது அறிவுக் கண்ணால் பார்த்தவர்கள் அவன் உருவத்தில் உள்ள பல தத்துவக் கருத்துக்களை எமக்கு உரைத்துள்ள னர். ஆறுமுகன் சிற்பத்தில் முருகனுக்கும், தமிழ் எழுத்துக்களுக்கும் உள்ள தொடர்பு சித்தாந்த தொடர்பு. ஐந்தொழில் தத்துவம், பிரணவ மந்திரம், முத்திருமேனிகள் என்பவற் றைக் கண்டு நக்கீரர், அருணகிரிநாதர், அகத்தியமுனிவர் போன்றோர் உரைத்து உள்ளனர். அவற்றை இக்கட்டுரையில் நோக்கு வோம்.

முருகனுக்குரிய வடிவங்கள் பதினாறு வகைப்படும் என குமாரதந்திரம் எனும் முருகனுடைய ஆகமம் கூறுகின்றது. ஆனால் சிறிதத்துவநிதி எனும் சிற்பநூல் முருகனுக்குரிய வடிவங்கள் பதினேழு வகைப்படும் எனக் கூறுகின்றது. அவ்வாறாயினும் முருகன் படிமம் அமைக்கும்போது முருகன் நின்றவராகவும், இருந்தவராகவும் அமைக்கப்படும். இது தனியாகவோ அல்லது வள்ளி தெய்வானை சமேதராகவோ அமைக்கப்படும். முருகக் கடவுளுடைய சிற்பமானது ஆறுமுகத்துடனும் பன்னிருகையும் அல்லது எட்டுக்கையும் கொண்டதாக இருக்கும். ஒருமுகம் கொண்ட சிற்பமானது நான்கு கைகள் அல்லது இரண்டு கைகள் கொண்டதாக இருக்கும். இவர் தமது திருக்கரங்களில் மணி, தோமரம், கருவம், சுவஸ்திகம், தீக்கடை கோல், வச்சிரம், கலப்பை, வாள், சக்கரம், தண்டம், சக்தி, அம்பு, வில், அட்சகமாலை இவற்றோடு அவருக்கேயுரிய வேலும், சேவற்கொடியும் தாங்கி இருப்பார். பொதுவாக முருகன் விக்கிரகம் ஆண் கருங்கல், செப்பு தங்கம் கலந்த ஐம்பொன் வன்மையான மரம் போன்றவற்றினால் செய்யப்படுகின்றது. இவ்வாறு செய்யப்படும் திருவுருவத்தில் தத்துவக் கருத்துக்களைக் காணமுடியும்.

முருகன் ஆறுமுகம் கொண்டவராக சித்தரிக்கப்படுகிறார். இவ் ஆறுமுகம் கொண்ட திருவுருவமே ஆலயங்களில் தேர், சூரசங்காரம் போன்றவற்றுக்காக எழுந்தருளப்படுகிறது. ஆண்முகனின் ஆறுமுகங்களான மூலாதாரம், மணிபூரகம், சுவாதிட்டானம், அஞ்சை, விசுத்தி, அனாகதம் என்பவை ஆகும். இவை அனைத்தும் முருகன் தந்தையாகிய சிவனின்

ஐந்து முகங்களோடு அவரது மறைந்துள்ள அதோ முகத்தையும் சேர்ந்த திருவுருவமே முருகக் கடவுள் எனக்கூறி, முருகனும் சிவனும் ஒன்றென உரைப்பர். இவ் ஆறுமுகங்களும் ஆறு குணங்கள், ஆறு சுவைகள், ஆறு ஆதாரங்கள் என்பனவற்றைக் குறிக்கும். இவ் ஆறுமுகங்களையும் நோக்கி அருணகிரிநாதர் "ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே... எனப் பாடினார்.

மேலும் முருகனது திருவுருவம், கதை என்ப சைவசித்தாந்தக் கருத்தோடு தொடர்பு படுகின்றது. முருகன் சூரன் முதலியோரை அழித்தமையில் தரகாசூரன் கன்மத்தையும், சிங்கமுகாசூரன் மாயையையும், சூரபத்மன் ஆணவத்தையும் குறிக்கின்றனர். ஞானக் கடவுளான முருகப் பெருமான் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் அழிக்கும் கடவுளாக சித்தாந்த தத்துவம் விளக்குகின்றது. மேலும் முருகனின் ஆறுமுகங்களும் சித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ள இறைவனின் குணங்களை பிரதிபலிப்பதாக உள்ளது. அவையாவன முற்றும் உணர்தல், தன் வயத்தனாதல், தூய உடம்பினராதல், வரம்பில் இன்பமுடைமை, பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை என்பவையே ஆறு குணங் களாகும்.

மேலும் முருகன் அடியவர்களுக்கு அருவம், உருவம், அருவுருவம் ஆகிய முத்திருமேனிகளையும் கொண்டு அருள்பாலிக் கின்றார். அருவமாக உருவமும் நாமமும் அற்றவராய் அடியவர் மனத்திலும், உருவமாக ஷண்முகப் பெருமானாகவும், அருவுருவமாக வேல் வடிவிலும் குமரப்பெருமான் காட்சியளிக் கின்றார்.

முருகப்பெருமான் வள்ளியை இச்சாசக்தியாகவும், தெய்வயானையை கிரியா சக்தியாகவும், வேல்ஞான சக்தியாகவும் முருகன் அறிவுக் கடவுளாக விளங்குகின்றான். மேலும் முருகப் பெருமான் ஐந்தொழில்களையும் ஆற்றும் கடவுளாக விளங்குகின்றார். அவ் ஐந்தொழில்களையும் குறிக்கும் குறிகள் அவரது திருத்தோற்றத்திற் காணலாம். இவ்வகையில் சேவற்கொடி படைத்தலையும், மயில் காத்தலை யும், வள்ளி மறைத்தலையும் தெய்வயானை அருளலையும் வேலாயும் அழித்தலையும் குறிக்கும்.

அவர் மயில்மீது அமர்ந்திருக்கும் காட்சியானது ஓம் என்ற பிரணவ மந்திரத்தை நினைவு கூறுகின்றதாகும். மேலும் அவர் மயில் தோகையாகிய உலகத்திற்கு உள்ளும் வெளியும் இருக்கும் காட்சி உலகத்தின் உள்ளும் புறமும் இருக்கும் இறைவனாக எமக்குத் தெரிகின்றார்.

முருகனையும் தமிழையும் ஒப்பிட்டு கூறுகின்றனர் அறிஞர்கள் பலர். தமிழே முருகன் முருகனே தமிழ் எனக் கூறும் அவர்கள் தமிழில் வல்லினம், மெல்லினம், இடையினம் என பிரித்து சோமஸ்கந்த முகூர்த்தத்தில் சிவன் வல்லினம், உமை மெல்லினம், முருகன் இடையினம் எனவும் இவ் இனங்களில் ஆறு எழுத்துக்கள் உள்ளது அதேபோல் கந்தனுக்கும் ஆறு தலைகள் உள்ளது. மேலும் தமிழில் உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டு முருகனுக்கு கரங்கள் பன்னிரெண்டு. அவன் கரங்கள் தலைகளை சேர்த்தால் பதினெட்டு அல்லது வேலன் கண்கள் வாய்களைச் சேர்த்தால் பதினெட்டு. தமிழில் மெய் எழுத்துக்கள் பதினெட்டு. தமிழில் ஆயுத எழுத்து ஒன்று. அதேபோல் முருகனுக்கும் சிறப்பான ஆயுதம்

வேல் ஒன்றாகும். இவ்வாறு நக்கீரர் முதலானோர் கூறியுள்ளனர். ஆகவே முருகன் தமிழர் தெய்வம் என உரைப்பார்.

இவ்வாறு தமிழர் கடவுளாகவும், பிரணவப் பொருளாகவும் சித்தாந்த பதியாகவும் ஐந்தொழிலையும் புரியும் கடவுளாகவும் இருக்கும் மயிலியற்புல இறைவனின் சாதனந்தை சேவல் கொடி படைக்க எமதெல்லோர்க்கும் தெய்வயானை நல்லறிவை அருள மயில் அனைத்தையும் காக்க யுத்த மேகங்களை வள்ளி மறைத்து எம் எல்லோரினது ஆணவத்தை வேல் அழிக்க இறைவனானவன் எமக்கு அருளாட்சி அருள நாம் அவனைப் பிரார்த்திப்போமாக.

"மயிலியற்புலக் கந்தன் இருக்க நமக்கு ஏன் பயம்"

கோபாலகிருஷ்ணன் பகிரதன்

**********************



அம்மன் கோவில்

# மயிலைக் கந்தனின் சித்திரத்தேர் திருவிழா

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தப்பெருமானுக்கு அமைக்கப்பட்டுள்ள இப்புதியதேர் விதிமுறைப்படி அமைக்கப்பட்டுள் ளமை பெரும் மகிழ்வைத் தருவதாகும். இத்தேரில் ஆலய வரலாற்றுப் படிமங்கள் நிறைந்துள்ளது. தேர் அமைப்பாளரதும், ஆலய பரிபாலன சபையினரதும், தேர்த்திருப்பணிச் சபையினரதும், முருகன் அடியார்களது அயராத முயற்சி சித்திரத்தேரை சிறப்புறச் செய்ய வழிசமைத்தது.

பதினான்கு உலகங்களும் தேரில் அமைந்திருப்பது உருவமாகச் சித்தரிக்கப்படு கிறது. இவ்வாறான தேரில் எம்பெருமான் எழுந்தருளி வீதியுலா வருவது, உலகினைப் பெருமானே இயக்குகின்றார் என்பதை எமக்கு அறிவு பூர்வமாகத் தருகின்றது.

தேர்த்திருவிழாவின் சிறப்பையும், தேரின் மகிமையையும் அப்பர் சுவாமிகள் தமது நான்காம் திருமுறையில் திருவாரூர்த் திருத்தலத்தில் பாடிய தேவாரத்தின் மூலம் அருமறையாகத் தந்து இறைவன் திருஉலா வரும் உலகமாகிய தேரெனக் குறிப்பிடுகின்றார்.

போழொந்த வெண்மதியஞ் சூடிப்
பொலிந்திலங்கு
வேழுத் துரிபோர்த்தான் வெள்வளையால்
தான்வெருவ
ஊழித்தீ யன்னானை ஓங்கொலிமாப்
பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான்கண்ட தாரூரே

தேரினை நாம் அன்போடு நோக்கும் எட்டு அல்லது ஒன்பது பகுதியாக வகுத்துப் பார்ப்பது முறையாகும். அங்கு நட்டுக் கண்பூத்திப்பார், சித்தார் மட்டம், பேரூர்மட்டம், நராசன மட்டம், தேவா சபை மட்டம், சிங்காசனம் (சுவாமி எழுந்தருளி இருப்பது) ஆகிய பகுதிகளை நோக்கலாம்.

தேர்த்திருவிழா என்பது தேர்ந்து எடுத்த திருவிழா ஆகும். இங்கு தேர்தல் என்ற வினை, தேர் என்ற பெயரைப்பெற்று விளங்குகின்றது. எமது இதயத்தாமரையில் இறைவன் வீற்றிருக்கின்றான். தேரும் ஒரு மனிதனின் உடலமைப்பைக் காட்டுவதாகவே அமைந்துள்ளது. தேரில் இறைவன் வீற்றிருக்கும் சிங்காசனம் எனப்படும் மட்டத்தை நோக்கும்போது, அது மனிதனின், இதயம் இருக்கும் இடத்திற்கு ஒப்பாகின்றது. உடலில் உயிர் இருப்பதுபோல உயிருக்கு உயிரானவன் இறைவன் என்பதையும் இங்கு தெளிவாக்கு கின்றது.

"ஊரெல்லாம் கூடித்தேர் இழுத்தாற் போல"

இது மக்களின் "ஒற்றுமையின்" மேன்மையை குறிப்பதாக அமைகின்றது. தேரைத் தனி ஒருவரால் இழுக்க முடியாது. பலர் ஒற்றுமையுடன் ஒன்றாகச் செயற்பட்டே இழுக்க முடியும்.

தீபச்சுடர் போல ஒளியின் உருவகமாக இருக்கும் தேரில் சுவாமியைத் தரிசிப்பவன் இவ்வுலகில் கிடைத்தற்கரிய நற்பயனைப் பெற்றவன் ஆவான்.

சித்திரத் தேரில் சேந்தன் வருகிறான்
முத்தின் பிரணவம் மொழிந்து வருகிறான்
ஏத்தின் திசையும் ஒளிர வருகிறான்
அத்தின் வள்ளி அமர வருகிறான்

இவ்வாறான புதிய தேரில் எம்பெருமான் அசைந்து அசைந்து வருவதைப் பார்க்கும் ஒவ்வொருவரும் பெரும் பாக்கியம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். இப்போது மயிலைக் கந்தன் ஆலயச் சூழலைப் பார்க்கும் போது, தேவசபை போலவே காட்சி தருகின்றது.

தேரானது முக்கியமாக பிரயாணத் தேர், சண்டைத்தேர், தலைத்தேர் என மூன்று வகையாக பிரிக்கக்கூடியது.

- பிரயாண ஒழுங்கில் அமைந்து செல்லக்கூடியது பிரயாணத்தேர்
- சூரனை முருகப்பெருமான் சங்கரிக்கவும், திரிபுரங்களை அழிக்கச் சிவபெருமான் சென்றதும் சங்காரத்தேர், ஆனால் சங்காரம் என்பது அழித்தலைக் குறிப்பினும் அது மல அழிப்பாகும். இதன் பின் கிடைப்பது பேரருள்நிலை ஆகும்.
- கௌரவத்தேரான தலைமைத்தேர் இறைவன் வீதிவலம் வந்து எமக்கு அருள் கொடுப்பதாகும்.

தேர்க்காட்சி எமக்கு மூலஸ்தானக் காட்சியைத் தருகின்றது. நாம் நட்டுக்கண் பகுதியை விட்டு தேரைப் பக்திபூர்வமாக நோக்கினால், மூலஸ்த்தானக் காட்சியைக் காணலாம். சப்புறக் காட்சியில் கோபுர தரிசனம் கிடைப்பதுபோல தேர் மூலவர் அருளைத் தருவதாகும்.

நாட்டில் வாழும் மக்கள் எல்லோரும் கந்தப் பெருமானின் புதிய சித்திரத்தேர்த் திருஉலாவரும் அருள்மயமான நன்நாளில் இன்னருள் பெறுவர் என்பது உறுதி.

சொ.புலவர்,
மார்க்கண்டு கணநாதன்.

*************************

## சிவபிரான் தேவிக்கு உரைப்பது

நான்முகம் இருமூன் றுட்டால் நமக்கவை கந்தன்
தன்முகமாகி உற்ற தாரகப்பிரமமாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்தும் ஒன்றாய்
உன் மகன் நாமந் தோரா றெழுத்தென உற்ற அன்றே

கந்தபுராணம்

*************************

# சகலரும் விரும்பும் சண்முகப் பெருமான்

அடியவர்கள் இறைவனைத் தம் உள்ளத்தில் இருத்தித் தினம்தோறும் துதிக்க வேண்டும் என்பது இந்துசமய வழிபாட்டில் வலியுறுத்தப்படுகின்றது. விலங்கு நிலையில் உள்ள மனிதச் செயற்பாடுகளைத் தூயதாக்கி மனித நிலைக்கு மாற்றிப் பின் தெய்வ நிலையை அடையச் செய்வது சமய வாழ்வின் குறிக்கோளாகும். மனம், மொழி, வாக்கு, தூய்மை அடையும்போது ஒவ்வொரு மனிதனும் தூய்மை அடைகின்றான். இந்நிலையைப் படிப்படியாக ஏற்படுத்துவதில் முருக வழிபாடும் வழிகாட்டுதலாக அமைகின்றது.

முருகப்பெருமான் கொண்ட வடிவங்கள் தத்துவ ரீதியாகவும், சமய வழியிலும், வழிபாட்டு முறையிலும் ஒருபடி முறையான வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. இவ்வகையில் முருகப்பெருமான் அடியவர்களின் உள்ளத்து நிலைக்கேற்ப

குழந்தைகளுக்கு வேலனாகவும்
இளைஞர்களுக்கு பாலசுப்பிரமணியனாகவும்
இல்லத்தார்க்கு வள்ளிதெய்வசேன சமேத சுப்பிரமணியசுவாமியாகவும்
கலைஞர்களுக்கு ஆறுமுகனாகவும்
வீரர்களுக்கு தேவசேனாதிபதியாகவும்
மந்திர உபதேசம்பெற சுவாமிநாதனாகவும்
பற்றற்ற துறவிகளுக்கு பழனியாண்டியாக, யோகியாக

எனப் பல நிலைகளில் வழிகாட்டுகின்றான்.

இவ்வாறு சகலரும் விரும்பும் சண்முகனாக அருட்பொலிவுடன் அடியவர்கள் குறை தீர்க்க மயிலை முருகன் தேரேறிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. "அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது" என்னும் ஔவையின் கூற்றுக்கமைய இம் மண்ணில் மனிதராய்ப் பிறந்த நாம் அவன் பாதம் பணிந்து உய்வோமாக.

சுப்பிரமணியம் கதிர்காமநாதன்

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

## வாழ்த்து

தூய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில் சீர் அடியார் வாழ்க வாழ்கஇப்புவன மெல்லாம்.

கந்தரலங்காரம்

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

# வாழ்த்து

வடராலி தன்னில் மயிலியற்புலப் பதியினில்
உறையும் கந்தனே! கடம்பனே! நீ எனை
இடர்நீக்கி அருள்செய்து காத்திடும் வேலனே
இறைபதம் வேண்டி இமைப்பொழுதும் மறவாத
நடராசர் வழிவந்த குமரனே கரிமுகன் தம்பியே
கறைமிடற் றண்ணல் உமைதனக்கு வந்துதித்த சீலனே
கடல்கடந்து நாம் வாழும் தேசமெலாம் உந்தன்
நிறைவான அருட்காட்சி தந்து எம்
அடியவர்கள் வினை தீர்க்க சித்திரத் தேரினிலே
வள்ளி தெய்வ யானையுடன் பவனி வர
வடமிழுப்போம் நம் தேசம் காத்திட உன்
அருளாட்சி புரிவாயே சண்முகா! நின்பாதம் போற்றி! போற்றி!

புலம்பெயர்ந்து வாழும் நெல்லிநாதன் குடும்பத்தினர்.

# வாழ்த்துச் செய்தி

